# தமிழெழுத்தின் வரி வடிவம்

சி. கோவிந்தராசனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தமிழெழுத்தின்
# வரிவடிவம்

**சி. கோவிந்தராசனார்**
மேனாள் தமிழ்ப்பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
தஞ்சாவூர்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி. ஐ. டி. வளாகம், தரமணி, சென்னை-600113

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-5
(20, 21-7-92)

Prof G. Devaneya Pavanar Endowment Lecture No. 5
Endowment Lectures Publication Number-44

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Tamiḻeḻuttiṉ Varivaṭivam |
| Author | : | Prof. C. Govindaracanar, Prof. of Tamil(Retd) Karanthai Pulavar College, Thanjavur-2; 993, Arikkara St. Karanthai (post) Thanjavur-613002 |
| Publisher & copy right | : | International Institute of Tamil Studies, C.I.T. Campus, Taramani, Madras-600 113 |
| Publication No. | : | 179 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | November 1993 |
| Edition | : | First |
| Paper used | : | Tamilnadu 16 kg |
| Size | : | 21×14 cms |
| Printing types | : | 10 point |
| No. of Copies | : | 1200 |
| No. of Pages | : | X+ 100 |
| Price | : | Rs. 18/- |
| Printers | : | Kavinkalai Achagam 2/141 Kandhasami Nagar Palavakkam, Madras-600 041 |
| Artist | : | Sathya |
| Subject | : | A Short history of Tamil Palaeology |


* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

தமிழ் மொழிக்கும் தமிழிலக்கியத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டு செய்தோரைப் போற்றும் நோக்கில் நிறுவனத்தில் எழுந்துள்ள அறக்கட்டளைகளுள் 'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அறக்கட்டளை' சார்பாக மலரும் ஐந்தாவது சொற்பொழிவு இந்நூல்.

தமிழெழுத்துகளின் தோற்றம், வரலாறு குறித்து வேறுபட்ட கருத்துகளிருப்பினும், தமிழகத்தில் தோன்றி வளர்ந்த கலையே தமிழெழுத்துக்கலை; இதில் பிறமொழி, இனத்தவரின் துணை சற்றும் இல்லை என்பதை உறுதிபடக் காட்டும் நூலாக இது அமைகிறது. இச்சிறந்த நூலைப் படைத்துள்ள நூலாசிரியர், பேராசிரியர் சி. கோவிந்தராசனாருக்கு நிறுவனம் நன்றி கூறுகிறது.

இவ்வறக்கட்டளை நிறுவ நிதியுதவி புரிந்தோர்; சொற்பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் துணைநின்ற நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புத் திருத்தியுதவிய திரு. சு. சண்முக வேலாயுதம், சொல்லகராதி தயாரித்துதவிய ஆய்வு மாணாக்கர் ச. செயசீலன்; நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்துள்ள கவின்கலை அச்சகத்தார் அனைவருக்கும் நன்றி.

சென்னை-113
17-11-93

ச. சிவகாமி
அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



# ஆசிரியர் அறிமுகம்

## சி. கோவிந்தராசனார் (1-7-1920)

தமிழ்ப்பேராசிரியர் என்பதுடன் கல்வெட்டியல், சிற்பக் கலையியல், கோயிற்கலை, கட்டிடவியல், தொல்பொருளியல், ஓவியக்கலையியல் எனப் பல்துறைப் புலமைசான்ற இவ்வறிஞர் சுமார் அரை நூற்றாண்டுக்காலம் இத்துறைகளில் பணியாற்றி வருகிறார். நாடகக் கலைஞர், குழந்தை எழுத்தாளர் எனவும் சிறப்புறுகிறார்.

வளரும் கலைகள், தமிழக வரலாற்றுச் செய்திகள், ஆரியன் கோயில், சோழமன்னர் வரலாறு, தமிழ்க்கல்வெட்டுகள், ஓவிய நூல், A flash of light on a 'hidden fact', கரந்தைச் செப்பேடுகள், கல்வெட்டு, கலைச்சொல்லகராதி போல்வன குறிப்பிடத் தக்க சில நூல்கள்.

செண்டலங்காரன் விறலிவிடுதூது, சதாசிவத்தியானம், சகாதேவ ஆருட நூல், ஜினேந்திரமாலை, திருவையாறு புராணம் ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ள இவர் 350 இற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் வழங்கியுள்ளார்.

பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ள இவரின் பணி, தஞ்சை நிசும்பசூதனி கோயில் (1956), கண்ணகிகோயில் (1963), ஓரி கொல்லிமலை (1966)பாரி பறம்புமலை (1968), இவற்றின் கண்டுபிடிப்பிலும் பெரும் பங்கேற்றுள்ளது.

# முகவுரை

உலகில் தொல்பழங்கால மனிதன் உணர்வுகளைக் குறிப்பா லேயே முதலில் உணர்த்தியுள்ளான். கால வளர்ச்சியில் உணர்ச்சி யோடு அறிவும் அமைந்து மனவளர்ச்சி பெற்ற மனிதனாக ஆகியுள்ளான். அந்நிலையில் வாயொலிகளாலும், செய்கை களாலும் தனது விருப்பங்களைப் பிறருக்கு உணர்த்தியுள்ளான். தான் கண்டறிந்த நிகழ்ச்சிகளையும், பொருள்களையும் பிறர் அறியுமாறு குகைத்தடங்களில் கோட்டுருவில் வரைந்து வைக்கும் முயற்சியினையும் கையாண்டுள்ளான். பின்னர், வாயொலியில் பல மாற்றங்களை மனிதன் திட்டமாக ஆக்கிக்கொண்டபோது மொழி உருவாகியுளது. மொழிக்கமைந்த அடையாள வரி வடிவங்கள் பின்னர்த் தோன்றி எழுத்தென வளர்ச்சி பெற்றுள்ளன.

நிலவுலகில் பழைய தடங்களில் ஒன்றான எகிப்து நாட்டிலுள்ள பிரமிட்டுகளில் வரையப்பட்டுள்ள கோட்டுருவங்கள், மொழித் திறனமைந்த சித்திர எழுத்துக்களாக உள்ளதனைக் கண்டறிந் துள்ளனர்.

மிகப்பழைய நாகரிகத்தினர் என்று புனிதர் ஈராசு குறிப்பிடும் சிந்து சமவெளி மக்களும், சித்திர எழுத்துக்களையே பயன்படுத்தி யுள்ளனர்.

சுமேரியரின் முளைவடிவ எழுத்துக்களும், சித்திரவெழுத்தின் வகையாகவே தோன்றியுள்ளன.

உலகில் படிப்படியாக அறிவில் வளர்ச்சி பெற்ற மனித இனத்தின் முயற்சியால், கோட்டுருவங்கள் குறியீடுகளாக அமைய மொழிக்கமைந்த வரிவடிவ எழுத்துக்கள் தோன்றியுள்ளன.

பண்டைத்தமிழகத்தின் வரலாற்றினை அறிதற்கு, தமிழ் இலக்கியங்களே சான்றுகளாக உள்ளன. அவற்றால் அறியப் பெறும் பழந்தமிழகம், இன்றுள்ள குமரிமுனைக்குத் தெற்கே நெடுந்தொலைவு பரவி இருந்ததனை அறிய முடிகின்றது. குமரிநாடு என்று பெயர்பெறும் அந்நிலவளாகத்தில் உலகவியற்கையி னொன்றாகத் தோன்றிய மனித இனமே தமிழினம் என்ற

பெயரால் வளர்ந்து வந்துளது. குமரி நாட்டின் தொல்பழங்கால மனிதனும் மொழிநிலையில் மேலே கண்ட படிப்படியான வளர்ச்சியினைப் பெற்றிருக்க வேண்டும்.

அம்மக்கள் உலகில் தோன்றி வளர்ச்சி பெற்ற மனித இனங்களி லொன்றாகி மூத்தகுடியெனப் பெயர்பெற்று, தாம் பேசிய மொழிக்குத் தமிழ் எனப் பெயராக்கமும் செய்து, அதற்குரிய திறனமைப்புகளையும் உருவாக்கியுள்ளனர். காலவளர்ச்சியில் அறிவிற் சிறந்தாரின் மொழித்திறனால் வரிவடிவினைத் தனித் திறனாகப் பெற்ற தமிழ்மொழி வழக்கில் வளர்ந்து வந்தநிலையில், குமரி நாட்டு மன்னன், சங்கம் என்ற அமைப்பில் மொழித் திறனாளரைக் கொண்டு, தமிழ் மொழிக்கு ஆக்கம்பல செய் துள்ளான். அப்பழந்தமிழ் நாட்டு மன்னர் மரபினர் தொன்மை யால் 'பழையர்' என்றும் 'பாண்டியர்' என்றும் குறிக்கப் பட்டனர்,

குமரிநாட்டினரின் நாகரிக வளர்ச்சியின் ஒரு பகுதியே கடற் கோள்களுக்குப் பின்னர் குமரி நாட்டின் வடபகுதியாகும். தாமிரபரணி ஆற்றங்கரையில் இடங்கொண்டு, நெகிழ்ந்து வையை யாற்றங்கரையில் நிலைத்துப் பரவிய தமிழ் நாகரிகமாகும்.

இந்தியநாட்டின் பழங்கால வரலாற்றில் மொழித் துறையில் தனித்தன்மையுடன் தென்னகத்தில் விளங்கிப் பரவிய தமிழரின் நாகரிகமும், தமிழ் மொழியின் கிளைப்பினங்களும் நிலவிய பகுதி யினைத் திராவிட நாடு என்று குறித்தனர்.

தமிழ்மக்களின் வாழ்வியல் பண்பாட்டினையும் தமிழ்மொழி யின் உயர் தனிச் செம்மையினையும் இலக்கணமாக வரையறுத்துக் கூறும் பழந்தமிழ்நூல் தொல்காப்பியமாகும். இந்நூல், கி.மு 1000 ஆண்டளவில் தோன்றியதாகும்.

கி.மு. முதல்நூற்றாண்டினைச் சார்ந்த சமணநூலாகிய 'சமவ யங்கணசுத்த' என்னும் நூலில் இந்திய நாட்டில் நிலவிய மொழி களைப் பற்றிக் குறிக்கும் பட்டியலில், தமிழ் குறிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கதாகும்.

இவ்வாறு, தமிழ்மொழி தொன்மைக்கால வரலாற்றினைப் பெற்று, மொழி வழக்கிலும், எழுத்து வழக்கிலும் தனித்தன்மை யுடன் இருப்பதாயினும், அண்மைக் காலத்தில் கல்லெழுத்துக் களைக் கொண்டு தமிழ்மொழிக்குரிய வரிவடிவ மூலத்தினை ஆய்வாளர்கள் ஒருவாறு கூறியுள்ளனர்.

தமிழகத்தில் தொன்மையான கல்வெட்டுகள் எனத் தொல் பொருள் துறையினரால் சுட்டப்படும் எழுத்துக்கள், அசோக மன்னன் காலத்துப் பிராமி எழுத்துக்களினின்றும் தமிழ்மொழி வழக்கிற்கேற்ப ஓரளவு ஒருசில எழுத்துக்கள் மாற்றம் பெற்றதாக வுள்ள பிராமி எழுத்துக்களாகும்.

இதனை அறிஞர் பர்னல், திரு. கோபிநாதராயர் போன்று தென்னக எழுத்துக்களை ஆராய்ந்தவர்கள், தென்னிந்திய பிராமி என்று பெயர் குறித்துள்ளனர். இதனை, தமிழி எழுத்துக்கள் என்று பெயர் குறித்துள்ளனர். இவ்வெழுத்துக்களே தமிழின் பண்டைய வரிவடிவமென்றும் இக்காலத்தில் கூறப்படுகின்றது.

இக்கருத்தினை டாக்டர் மு.வ. அவர்கள் தமது மொழி வரலாற்றில் பதினான்கு காரணங்களைக் காட்டி மறுத்துத் தமிழ் எழுத்துக்களின் பண்டைய வரிவடிவம் வட்டெழுத்துக்களே என்பதனை நிறுவியுள்ளார். (மொழிவரலாறு பக்கம் - 418 - 432).

கல்வெட்டறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் தமது இலக்கிய வரலாற்றில் "நுண்ணறிவோடு படித்தறியாத பலர் வட்டெழுத்துக்கள் பிராமியிலிருந்து (தெ. பிராமி) வந்தவை என்றெழுதிவிட்டனர். வட்டெழுத்துக்கள் தமிழரே தமது முயற்சியால் கண்டு வளர்த்தவையாகும்" எனத் திட்டமாகக் கூறியுள்ளார்.

தென்னிந்திய எழுத்தியல் விற்பன்னர் டாக்டர் பர்னல் அவர்கள் தமது "தென்னிந்திய மொழிகளின் எழுத்துக்கலை" South Indian Paleography, pp. 47 - 51.) என்னும் பெருநூலில், 'வட்டெழுத்துக்கள்' என்னும் தலைப்பில்,

"வட்டெழுத்துக்கள் தென்னகப் பிராமியினின்றும் முற்றிலும் மாறுபட்டவையாகும். இவ்வட்டெழுத்துக்களே தமிழின் அடிப் படை எழுத்துக்கள். தொல்காப்பியம், குறள் போன்ற பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் அனைத்தும் இவ்வட்டெழுத்துக் களாலேயே எழுதப்பட்டன" என்று கூறியுள்ளார்.

வரலாற்றுப் பேரறிஞர் திரு. நீலகண்டசாத்திரியாரும் "வட்டெழுத்துத்தான் கிருத்துவுக்கு முந்திய தமிழ் எழுத்து" எனக் கூறியுள்ளார். (நூல் : சோழர்கள் - பக்கம் 7.)

இந்திய நாட்டில் நிலவும் எந்த மொழிக்கும் பொருந்தாத தனிச் சிறப்புப் பெயரினைத் தமிழ் ஒன்றே பெற்று 'முத்தமிழ்ப்

என்றும் 'செந்தமிழ்' என்றும் பெயர் பெற்றிருப்பது பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் தமிழ் திட்டமான கணிப்பினைப் பெற்றிருக்கும் சிறப்பிற்குரியதாகுமன்றோ!.

எழுத்தும் சொல்லும், வழக்கும், செய்யுளும், நாடக வழக்கும் உலகியல் வழக்கும் - என்றெலாம் தமிழ்மொழிக்கமைந்த பெற்றிமை கூறப்பட்டுள்ளன. தமிழகத்தில் சமயத்தை வளர்க்கும் நோக்கில் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வந்து மலைகளில் தொடர்ந்து தங்கிய திகம்பரர்களாகிய சமணர்கள் பாழிகளிலும் பாறைகளிலும் சில வரிகளில் தமிழொலிச் சிதைவான சொற்களில் பிழைபட வெட்டி வைத்த பிராமிஎழுத்துக் களாலான கல்லெழுத்துக்கள் பண்டைத் தமிழுக்குரிய எழுத்தின் வரிவடிவமாகுமா? என்பதனை நடுநிலைமையுடன் ஆராய்தல் இன்றியமையாததாகும். ஆடையை மட்டும் அடையாளமாகக் கொண்டு உடுத்தியிருப்பாரை உறவென்று கொள்ளவியலுமா? ஒரு சிலபிராமி எழுத்துக்களின் வடிவில் தமிழ்வட்டெழுத்தின் அடையாளங்கள் அமைவதைக் கொண்டு தமிழெழுத்தின் மூலம் பிராமி எழுத்துக்கள் என்று காண்பதும், அதிலிருந்தே வட்டெழுத் துக்கள் தோன்றியுள்ளனவென்பதும் பொருந்தியதாக இல்லை.

இவற்றால் மிகப் பழங்காலத்திலேயே தமிழின் வரிவடிவ எழுத்துக்கள் தோன்றி வளர்ச்சிபெற்று நாட்டு வழக்கிலும், ஏட்டு வழக்கிலும், கல்வெட்டிலும் இயங்கியுள்ளமை அறியப்பெறும்.

இக்காலத்தில் ஆய்வாளர்கள் செங்கம் நடுகற்களில் தமிழ் வட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதனை வெளிப்படுத்திய தோடு, அவை கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை என்றும் குறித்துள்ளனர்.

இதனால் கி.பி.க்கு முன்னரும் தமிழுக்கிருந்த வரிவடிவம் வட்டெழுத்தேயாகுமென்பதும், வட்டெழுத்து பாண்டிய நாட்டில் மட்டுமல்லாமல் தமிழக வடக்கு எல்லைப்புறத்தளவிலும் வழக்கில் நிறைந்திருந்தமையும் அறியப்பெறும்.

பிற்காலப் பாண்டியரின் ஆட்சிக்காலங்களில் பாண்டிய நாட்டில் வட்டெழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கள் இலக்கண அமைதியுடன் சொற்பிழைகளும் இல்லாத திறங்களுடன் உள்ளன. இவ்வட்டெழுத்துக்களின் மூலமான தொரு வட்டெழுத்தின் தமிழ் வரிவடிவங்களே தமிழகத்தின் சங்க

காலங்களில் தமிழறிஞர் கையாண்ட எழுத்து முறையாகு மென்பதனை நுண்ணிதின் காணவியலுகின்றது.

தமிழின் பண்டைய வரிவடிவ ஆய்வுரைக்கமைந்த செய்தி களை. தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளில் பெரும்பாலானவற்றை நேரிற்கண்டு ஆய்வு செய்துள்ள அனுபவத்தினைக் கொண்டும். தமிழிலக்கிய இலக்கணங்களைக் கொண்டும் நடுநிலைமையோடு சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதப்பெற்றதாக இந்நூல்முறை அமைந்துள்ளது. பண்டைத் தமிழரின் மொழி வளர்ச்சியினைக் குமரிநாட்டு வரலாற்றிலிருந்து ஆய்ந்து அறிதல் அறிஞரின் கடமையாகும்.

தமிழ் மொழிக்குரிய வரிவடிவ வரலாற்றினை, ஆய்வுரையாக நிறுவனத்தின் கருத்தரங்கில் உரைப்பதற்கும். நூல்வடிவில் எழுதித்தருதற்கும் அறக்கட்டளை நெறியே அன்புடன் வாய்ப் பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பு பெருந்தகை முனைவர் அன்னிதாமசு அவர்கட்கும். அறக்கட்ட ளைப் பொறுப்பாளர் அவர்கட்கும் எனது அன்பார்ந்த நன்றி உரித்தாகும்.

பேராசிரியர். **சி கோவிந்தராசனார்**

# உள்ளுறை


பக்கம்

தமிழெழுத்தின் வரிவடிவம் 1—88

நிலமும் மொழியும்-1, மொழியின் தோற்றம்-2, பழந் தமிழ் நாடு-5, கடற்கோள்கள்-6, நிலப்பாகுபாடும் வேறுபாடும்-7, பாண்டியரும் தமிழும்-9, தாமிர பரணிக்கரையில் - தமிழர்-11, முந்து நூல் கண்ட தொல் காப்பியன் - 12, காலவழக்கில் - எழுத்து-13, எழுத்து முறை காட்டல்-14, கல்லில் எழுத்து-16, ஏட்டில் எழுத்து-17. தமிழ் - பிற மொழியில்-18. செய்தியும் நோக்கும்-19, கல்லில் வரிவடிவில் எழுத்துக்கள்-20, கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு - 20, தமிழ் நாட்டில் கல்வெட்டுகள்-21, பழைய கல்வெட்டு-22, பிராமியின் தாய்மை-23, பிராமியின் கிளைநிலை-24, கிரந்தத் தமிழ் எழுதுதுக்கள்-25, கிரந்தத் தோற்றமும் வளர்ச்சி யும்-32, பாண்டிய நாட்டில் பழையதமிழ் எழுத்துக் கள்-34. தமிழகத்தில் பிராமி எழுத்துக்களில் கல்வெட் டெழுத்துக்கள்-38, பிராமி எழுத்தில் தமிழ்ச்சொற்கள்-44. பிராமி எழுத்து பற்றிய கருத்துரைகள்-49, தமிழ் வட்டெழுத்து வரலாறு-52, இமயத்தில் வட்டெழுத்து-63, வட்டெழுத்து பற்றிய ஆய்வுரை-63, சோழநாட்டில் தெளிதமிழ் எழுத்து-66. இலக்கண வழக்கில் வட் டெழுத்து-67, பல்லவர் காலத் தமிழெழுத்துக்கள்-68, பாண்டியர் காலத் தமிழெழுத்துக்கள்-70, சோழர் காலத் தமிழெழுத்துக்கள்-74, கிரந்த வரிகளும் சொற்களும்-77, சோழர்காலச் செப்பேடுகளில் - தமிழ் எழுத்துமுறை-78, கரந்தைச் செப்பேடுகள்-79, வளைய முகப்பில் சுலோகம்-79, ஏடுகளில் எழுத்துக்கள்-80, சீர்திருத்தமும், புள்ளி யும்-81, விசயநகர மன்னர்காலத் தமிழெழுத்துக்கள்-81, விருதுப்புகழ்ச்சியுரை-82, தமிழ் எழுத்து முறையில் கூட் டெழுத்து-83, பாண்டிய நாட்டில் மலைக் கல்வெட்டு கள்-84, கருத்துரை-87.

கல்லெழுத்துப்படங்கள் 89

துணை நூற் பட்டியல் 97

சிறப்புச் சொல்லகராதி 98

# தமிழெழுத்தின் வரிவடிவம்

## நிலமும்—மொழியும்

உலகில் பல்லாயிரக்கணக்கில் மொழிகள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. அவற்றுள் மொழித்திறனும் வரிவடிவும் பெற்றுள்ள மொழிகள் ஒரு சிலவாகவே உள்ளன.

இந்திய பெருநாட்டில் தோன்றியுள்ள மொழிகளும் அம் முறையிலேயே வழக்கில் உள்ளன. பண்டைக்காலத்தில் மக்கள் வழக்கில் இந்தியாவில் சிறந்திருந்த மொழிகள் இரண்டென்றே அறியப்படுகின்றன. அவை, ஆரியர் பேச்சுவழக்கில் மட்டும் அக் காலத்தில் வட இந்தியாவில் வழங்கிய 'பிராகிருதம்' என்னும் வடமொழியும், தென்னிந்தியாவில் மக்கள் வழக்கில் சிறந்திருந்த தென்மொழியெனும் தமிழுமாகும்.

ஆரியர் பேசிவந்த திருத்தமில்லாத பிராகிருதமொழி கால வழக்கில் தங்கள் வாழ்க்கைக்கு அமைத்துக்கொண்ட சூழ்நிலை கட்கு ஏற்ப திருத்தப்பட்ட நிலையில் 'சமஸ்கிருதம்' என்ற பெயரால் குறிக்கப்பட்டுளது.

மத்திய ஆசியாவின் பழங்குடி மக்களின் ஒரு பிரிவினராகிய மங்கோலிய இனத்தைச் சார்ந்த ஆரியர், வட இந்தியாவில் வாழ்க்கைக்கு இடம் நாடி வந்தபோது அவர்கள் மொழி பேச்சு வழக்கில் திருத்தமில்லாத பிராகிருத மொழியாகவே இருந்துளது. வட இந்தியாவில் வாழ்க்கையைச் சூழலுக்கு ஏற்ப நிலைப்படுத்திக் கொண்ட அக்கால ஆரியர், அங்கு நிலவி இருந்த மொழித் திறனைக் கண்டு தாம் பேசி வந்த மொழியினை இயன்ற வடிவில்

திருத்தமாக்கிக் கொண்டுள்ளனர். எனவேதான் பிராகிருதம்— சமஸ்கிருதம் என்ற காரணப் பெயரால் குறிக்கப்பெறுவதாயிற்று. சமஸ்கிருதம் ஒலிநிலையில் பேச்சளவில் ஆரியரால் வட இந்தியாவில் தொடர்ந்த காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே தென்மொழியெனப்பட்ட தமிழ்மொழி, சொல்லும் பொருளும் வளம்பெற்ற மொழியாகவும், வரிவடிவில் உருப்பெற்ற நிறை மொழியாகவும் இருந்துள்ளதனைப் பண்டைய இலக்கணமாகிய தொல்காப்பியத்தாலும் சங்ககால இலக்கியங்களாலும் அறிய முடிகின்றது.

## மொழியின் தோற்றம்

ஆதிமனிதன் வாயொலியாலேயே தன் விருப்பத்தினை வெளிப்படுத்தியுள்ளான். பின்னர், நாவின் பல்வேறுபட்ட அசைவுகளால், வாயொலியில் திட்டமான மாற்றங்களைச் செய்து பழகிக்கொண்டு, தான் சொல்ல விரும்பியதைப் பிறருக்கு அறிவிக்கக் கற்றுக்கொண்டுள்ளான். நாவசைத்துத் திட்டமாகத் தான் கருதியதை உணர்த்தும் முயற்சியின் வளர்ச்சியாக, நாவசைத்துரைத்த கருத்திற்கு ஏற்றபடி கைகளின் அசைவு களாலும் அதற்கொத்த முகச் செய்கைகளாலும் கருத்திற்கு உருவாக்கம் செய்து மகிழ்ந்துள்ளான். இந்நிலையில்தான், மனிதன் செய்த வாயொலிநிலைக்கு உருவாக்கமமைந்து, மொழி என்பதற்கு அரும்பிய தோற்றம் தொடங்கியுளது எனலாகும்.

காலவளர்ச்சியில் தன் செயல்களையும், தனக்குப் பிறவற்றால் சூழலால் ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும் உணர்ந்து நினைவில் கொண்ட காலத்தில், தான் செய்த நிகழ்ச்சிகளையும் பிற வற்றையும் அடையாளப்படுத்த முயன்றுள்ளான்.

அதன் பயனாகத் தான் வாழ்ந்திருந்த மலைக்குகைகளில் வெண்மை பழுப்பு ஆகிய நிறங்களில் கிடைத்த பூங்கற்களால் சித்திரங்கள் வரைந்துள்ளான். பாறையில் தான் கருதியதை ஏதோ ஒரு வகையில் வரைந்தவனுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கலாம்; எனினும் அவை பிறருக்கு அறிவிக்கும் கருவியாக அமைந் திருந்தன.

குகைச் சித்திரங்கள் அடையாள உருவங்களாகவே வரையப் பட்டுள்ளன. மனித உருவம் தலையை வட்டமாக வரைந்து அதிலிருந்து கோடிழுத்து கால்களையும் கைகளையும் காட்டி யுள்ளான், விலங்குகளின் உருவங்களில் தலை உடல் ஆகியவற்றைப்

பெரிய வடிவமாக வரைந்துள்ளான். தான் செய்தபோரினையும் விலங்கினைக் கொன்ற திறத்தினையும் மனிதன், ஈட்டி, விலங்கு இவற்றை ஓரிடத்தில் நெருக்கமாக எழுதிக்காட்டிய முறையில் அறிவித்துள்ளான்.

இந்த அளவில் அக்கால மனிதன், தான் பெற்ற அறிவுக்கேற்ப, நினைவினால் கற்பனை செய்து உருவங்களை வரைந்துள்ளான். இதனால் வரைதல் எழுதுதல் என்னும் தொழிற்பாடு காட்டுவாசிகளாக இருந்த மனிதரிடத்திலேயே தோன்றியுள்ளது.

அமெரிக்காவின் பழங்குடி மக்கள் சிவப்பு இந்தியர் என்று பெயர் பெறுவர். அவர்கள் பழங்காலத்தில் மலையிலும் காட்டிலும் வாழ்க்கை உடையவர்களாகவும் நாகரிகம் இல்லாதவர்களாகவும் இருந்துள்ளனர். அவர்கள் வேட்டையாடிய விலங்குகளையும் மீன்களையும் மரத்துண்டுகளில் கூரிய ஆயுதத்தால் செதுக்கி வைத்துப் பிறரறியச் செய்துள்ளனர். அதன் வளர்ச்சியாக மலைப்பாறை முகப்புகளில் வரைந்துவைத்தனர். அவைகள் ஆராய்ச்சியாளர்களால் குகைச்சித்திரங்கள், குகை ஓவியங்கள் என்று குறிக்கப்பட்டன. இவ்வாறான குகைச் சித்திரங்கள் ஆத்திரேலிய பழங்குடி மக்களிடத்திலும் கையாளப் பட்டுள்ளன. இந்தியாவின் மத்தியப் பகுதிகளிலுள்ள மலைக் குகைகளிலும் பண்டைய மனிதனின் ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இத்தகைய குகைச்சித்திரங்கள் தமிழ் நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மலையிலும், மதுரை மாவட்டம் சிறுமலையிலும் கிடைத்துள்ளன.

இவ்வாறான குகைச் சித்திரங்களின் தோற்றத்தினைக் கொண்டு சிந்திக்கும்போது, அறிவிலும் நாகரிகத்திலும் தெளிவு பெறாத வாழ்க்கையை உடைய ஆதிமனிதனே தான் செய்த அருஞ் செயல்களையும் தான் கண்ட கொடிய மிருகங்களையும், உணவிற்கான மீன் முதலிய பொருள்களையும் தன்னைச் சார்ந்தவர்களும், பிறரும் கண்டறிந்து கொள்வதற்குரிய சுவடாகவே வரைந்து காட்டியுள்ளான் என்பது புலனாகின்றது.

குகைச் சித்திரங்களை எழுதிய மக்களின் காலம் மறைந்தொழிய, பின்னர் தொடர்ந்த மனிதருக்கு அச்சித்திரங்கள் உணர்த்தும் செய்தியினை அறிந்து கொள்வதற்கு இயலாது

போயிருக்கலாம். எனினும் அவற்றைக் கொண்டு அடையாள வடிவங்களை உருவாக்கிக்கொள்ளும் முயற்சி தோன்றியுளது. அவர்கள் பேசிவந்த மொழிக்குரிய சொற்களைச் சித்திரவடிவில் உருவாக்கிக் கொண்டுள்ளனர். அவைகள் அடையாள எழுத்துக் கள் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன.

சீனதேயத்தினர் பண்டைக்காலத்தில் அறிந்திருந்த சித்திர எழுத்துக்களை அறிவு வளர்ச்சிக்கு ஏற்பத் தங்கள் மொழிக்குரிய எழுத்துக்களாக அமைத்துக் கையாண்டுள்ளனர். அவற்றைச் செம்மைப்படுத்தியவர்கள் சொற்களின் பிறப்பொலிகளுக்குரிய ஒலிப்பாகுபாட்டிற்கு வரிவடிவு அமைத்து மொழியை நிலைப் படுத்தியுள்ளனர்.

ஒலி நிலையில் வழங்கப்பட்ட மொழியின் பிறப்பொலிகளின் கூறுபாட்டினை நுண்ணிதின் உணர்ந்து பழங்காலத் தமிழரும் மொழிக்கு வரிவடிவு கண்டுள்ளதனை மிகவும் விளக்கமாகப் பேரறிஞர்பா.வே. மாணிக்கவேல் நாய்க்கர் கூறியுள்ளார்*.

வட இந்தியாவில் சிந்துநதிப் பள்ளத்தாக்கின் நெடுகிலும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் பழமையான மக்கள் நாகரிக நகரப்பகுதிகளை அகழ்ந்து ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். அவை மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகமெனப்பட்டது. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அங்கு வாழ்ந்திருந்த மக்களின் நாகரிகத்தினைப் புலப்படுத்தியுள்ளனர். அகழ்வாய்வில் கிடைத்த பழம்பொருள்களில் சித்திர எழுத்துக்களோடு கூடிய முத்திரை களும், பிற சின்னங்களும் கிடைத்துள்ளன. அவைகள் அங்கு அக்காலத்தில் வாழ்ந்திருந்த தமிழரின மக்களின் எழுத்து வடிவங்கள் என்று கூறப்படுகின்றன.

சீன சித்திர எழுத்துக்கள் காலவளர்ச்சியில், அறிவுத் திறனுக்கு ஏற்ப 200-எழுத்துக்களளவில் வழக்கில் சுருக்கமாக கையாளப்பட்டுள்ளன. இம்முறையிலேயே மொகஞ்சதாரோ எழுத்து முறையும் அடையாளவடிவங்களில் அமைந்துள்ளன.

அடையாள வடிவங்கள், நேர்கோடுகள், குறுக்குக்கோடுகள், குறுக்கும் நெடுக்குமான கோடுகள், வளைவுக் கோடுகள், வட்டங்கள், புள்ளிகள் ஆகிய வரிவடிவங்களாகவே குறிக்கப் பட்டுள்ளன.

---

* தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்; செந்தமிழ்; (இலம்பு-14, பரல்-7).

இதனால் உருவ எழுத்துக்கள் காலஞ் செல்லச் செல்ல அறிவு முயற்சியால் மாற்றமடைந்து உருவங்கள் திரிந்து அடையாள வடிவெழுத்துக்களாக ஆக்கம் பெற்றுள்ள இயல்பினைக் காண முடிகின்றது.

## பழந்தமிழ் நாடு

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழ்ந்த நாடு தமிழ் நாடென்று பெயர்பெற்றது. மக்கள் தமிழர் என்று குறிக்கப்பெற்றனர்.

தமிழ்நாட்டின் பண்டைய எல்லை இன்றைய கன்னியாகுமரி முனை அளவில் இல்லை. இன்று பெருங்கடலாகக் காணப்படும் இந்தியப் பெருங்கடல் (இந்து மகா சமுத்திரம்) முன்னர் நிலப் பகுதியாக இருந்துள்ளது. அங்குப் படைப்புக்காலந்தொட்டுத் தோன்றிய மக்கள் காலவளர்ச்சியில் அறிவுத்திறனும் நாகரிகமும் பெற்றவர்களாக இருந்துள்ளனர். பழமையுடன் திகழ்ந்த அவர் களைக் காத்து நடத்திய தலைவன் பழையன் எனக் குறிப்பிடப் பட்டான். அப்பழையனே பாண்டியனாவான். மூத்த குடி மக்களாகிய அவர்கள் பேசிய மொழி தமிழ் எனப்பட்டது. நாடும் தமிழ் நாடென்று பெயர் பெற்றது இந்தியாவின் தென் பகுதியாக அன்று விரிந்து பரந்திருந்த பழந்தமிழ் நாட்டினை ஆராய்ச்சியாளர்கள் குமரி நாடு, குமரிக் கண்டம், லெமூரியா கண்டம் என்றெல்லாம் குறிப்பிட்டனர்.

பழந்தமிழ் நாடாகிய குமரி நாட்டிற்கு எல்லைகளாக தெற்கே பஃறுளியாறும் வடக்கே குமரிமலைத் தொடரும், குமரியாறும் இருந்துள்ளன. இவற்றின் இடையே ஏழ்தெங்க நாடும், ஏழ்பின் பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்குறும்பனைநாடும் காடும் பதிகளும் இருந்துள்ளன. அரசனாகக் குறிக்கப்பட்ட மக்கள் தலைவன், இருந்து ஆட்சி செய்த தலைநகர் 'கவாடபுரம்' என்று குறிக்கப்பட்டிருந்தது. இதனைக் கபாடபுரமென்றும் கூறுவர்.

குமரிநாடு எழுநூறு காவதம் கொண்ட பரப்பிடமாக இருந்துள்ளது. குமரி நாட்டின் தென்பகுதியில் தலைநகரமாக இருந்த கபாடபுரத்தைப் பற்றி வான்மீக முனிவர் தனது வட மொழி இராமாயணத்தில் விரிவாகக் கூறுகின்றார், கபாடபுர மென ஒரு நகரம் பழந்தமிழ் நாடாகிய குமரிநாட்டில் வளங் களுடன் அவர் காலத்திலோ முன்னரோ இருந்ததினாலேயே

முனிவர் அதனை விரிவாக எடுத்துரைக்கலாயினர். அவர் நகரைச் சிறப்பிக்கும்போது, அரசன் வாழ்ந்த பெருமனையைச் சூழ்ந்திருந்த மதிலின் கதவுகள் இரத்தினங்களாலும் முத்துக் களாலும் ஒப்பனை செய்யப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகின்றார். கபாடபுரமென ஒன்று தென்கோடி நாட்டிடத்தே இருந்த தின்றேல், அவர் அந்நகரைப் பற்றி கூறியிருப்பதற்கில்லை.

'செங்கோன் தரைச் செலவு' என்றதோர் சிறுநூல் இக் காலத்தில் வெளிவந்துளது. அந்நூலில், குமரி நாட்டில் முதலூழியில் தலைச்சங்கத்தார் காலத்தில் குமரியாற்றுக்கும் பஃறுளி ஆற்றுக்கும் இடையேயுள்ள பெருவள நாட்டரசனை முதலூழி தனியூர்ச் சேந்தன் பாடினதாகக் கூறப்பட்டுள்ளது.

## கடற்கோள்கள்

பாண்டிய மன்னனின் ஆட்சியும் மொழி வளர்ச்சியும் செல்வ வளமும் நாகரிக வாழ்க்கையும் பெற்றிருந்த குமரிநாட்டுத் தமிழரின் நிலப்பகுதியினை, இயற்கையின் ஆற்றல் மிகுந்த சீற்றங்களில் வலிதான கடற்கோள்கள் அழித்துள்ளன. கடற் கோள் என்பது, நாட்டைச் சூழ்ந்திருந்த கடல் காலமாற்றத்தால் வானளாவிப் பொங்கி எழுந்து சென்று, நாட்டின் மீது படிந்து அலைத்து அழித்துத் தரையைக் கரைத்துத் தன்னுள் அமிழ்த்தி அமைதி பெறும்கொடிய நிகழ்ச்சியாகும். இவ்வழிவு நிகழ்ச்சியினை, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" (11)

என்னும் அடிகளால் உணர்த்தியுள்ளார்.

இவ்வாறாகக் குமரிநாடு பஃறுளியாற்றுடன் கடலில் அமிழ்ந்து போவதற்கு முன்னர் அங்கு வாழ்ந்திருந்த மொழித்திறன் படைத்த தமிழ்ப் புலவர்கள் அருமையான செய்திகளைத் தமிழால் பாடியுள்ளனர்.
அவற்றுள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள

"எங்கோ வாழிய குடுமீ தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (9:8-11)

என்னும் பாடற்பகுதி குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடல், பாண்டியன் நெடியோன் என்பான் குமரி நாட்டை ஆட்சி செய்த (முதற்சங்க) காலத்தில் அவனைப் புலவர் வாழ்த்தியுள்ள பாடலாகும்.

புறநானூற்றுத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள இப்பாடல் குமரி நாட்டில் நெடியோன் ஆட்சியில் வாழ்ந்திருந்த நெட்டிமையார் என்ற புலவர் என்று குறிக்கப்பெறுகிறார்.

பொய்யாமையிற் சிறந்திருந்த அக்காலப்புலவர், பஃறுளியாறு கடற்கோளால் அழிந்த பன்னூறு யாண்டுகட்குப் பின்னர்' அவ்வியாற்றினைச் சுட்டிக்காட்டிப் பாடியுள்ளார் என்பது அவலந்தருவதாகும்.

எனவே, பஃறுளியாறும் குமரிக்கோடும் கடலால் அழிவு பெறுவதற்கு முன்னரே பாடப்பெற்றுளது. அக்காலத் தமிழ்ப் புலவர்கள் பனை மரங்கள் நிறைந்த ஏழ்பனை நாட்டில், அம் மரத்தின் ஓலைகளின் பயனை உணர்ந்துள்ளனர் எனலாம். எனவே, தமிழ்மொழிக்கமைந்த வரிவடிவ எழுத்துக்களைக் கொண்டு, இலக்கண அமைதிபெறும் சொற்களால் பாடல்கள் செய்துள்ள மொழிவளர்ச்சியினை அறிய முடிகின்றது. எனவே, தொல்காப்பியம், அகநானூறு, குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து, புறநானூற்றிலுள்ள பாடல்கள், திருக்குறள் ஆகிய பண்டைய தமிழ் நூல்கள் எழுத்து வடிவில் ஏடுகளில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்ற கருத்து அமைகின்றது. அக்காலத் தமிழெழுத்துக் களின் வடிவங்களை ஆராய்தல் இன்றியமையாததொன்றாம்.

## நிலப்பாகுபாடும் - வேறுபாடும்

இந்தியா இருபெரும் பாகுபாட்டுடன் கூறப்பெறுவதற்கு இயற்கையிட்ட குறுக்குத் தடையே காரணமாகும். அது விந்திய மலை சாத்பூரா மலை என்னும், உயர்ந்து நெடிதாக நீண்டு குறுக் கிட்டு நிற்கும் மலைகளாகும். இம்மலைகளே வடஇந்தியா தென்னிந்தியா என்று கூறப்பெறுவதற்குரிய நடுவிட எல்லையாகக் குறிக்கப்படுகின்றன. மிகத்தொன்மையான காலத்தில் வட இந்தியாவில் சிந்துநதிப் பள்ளத்தாக்கிலும் கங்கையாற்றின் சமவெளிப்பகுதியிலும் தென்னிந்திய பழங்குடி இனத்தவரின் சார்புடைய மக்களே வாழ்ந்துள்ளனர் என்று கருதப்படினும், ஆரியரின் வருகையால் வடபுல நாகரிகம் வேறாகவும், தென்புல நாகரிகம் வேறாகவும் வளர்ந்து வந்துள்ளதனைக் காணமுடி கின்றது.

குமரிக்கண்டம், கடல்கொள்வதற்கு முன்னர், இன்றுள்ள கன்னியாகுமரிமுனைக்குத் தெற்கே பெரும் பரப்பிடமாக இருந்துள்ளது. இன்று கடலும் நிலமும் தீவுகளுமாகக் காட்சிதரும் பகுதிகள், ஒரு காலத்தில் பெரும் தரைப்பரப்பாகவே இருந்துள்ளன என்பதை நிலமும் கடலுமாகக் காட்சிதரும் வளாகச் சிதைவுகளால் அறியமுடிகின்றது.

மேற்கே மடகாஸ்கர் தீவு உள்ளிட்ட ஆப்பிரிக்கா வரையிலும், கிழக்கே இலங்கைத்தீவு, சுமத்திரா சாவகத்தீவுகள் உள்ளிட்ட ஆஸ்திரேலியாவரையிலும் தெற்கு வடக்கு எழுநூற்றுக்காவதம் விரிந்திருந்த மாபெரும் நிலப்பகுதியாக இருந்துளது என்பதை, நிலமும் கடலும் தீவுகளுமான சிதைவுச் சூழலால் அறியமுடிகின்றது.

மனித இனத்தோற்ற நிலவளாகங்களிலொன்றான குமரிக் கண்டத்து மக்கள் தங்கட்கென தனித்த பழக்க வழக்கமுடைய நாகரிகத்துடன் வளர்ந்து தொடர்ந்துள்ளனர், மக்கள் தலைவனாகத் தொன்றுதொட்டுத் தொடர்ந்த பழையனும் (பாண்டியன்) தாய்மொழித் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கம் செய்யும் நிகழ்ச்சியாகப் புலவர்களைக் கொண்டுத் தமிழ்ச்சங்கங்களை நிகழ்த்தி மொழிவளர்ச்சி செய்துள்ளனர். இதன் பயனாகத் தமிழ்மொழி மொழிவளமும் எழுத்துவளமும் பெற்றிருந்ததனைத் தொல்காப்பியம் தந்துரைக்கின்றது.

முதற் கடற்கோளுக்குப் பின்னர் வடபுலத்தில் வந்தேறிகளாக வந்து சிந்து கங்கை ஆகிய பேராற்றங்கரைகளில் தங்கள் வாழ்க்கையினை நிலைப்படுத்திக்கொண்ட ஆரியரின் இடமாற்றம் தெற்கேயும் திருப்பங்கொண்டு, மிகக்குறைந்த அளவில் ஊடுருவியுள்ளது.

அரசனை அடுத்து நின்ற அவ்வாரிய வடமொழியாளரின் பழக்க வழக்கங்களின் புதுமைகட்கு அரசரும் இடந்தந்துதவியுள்ளமையினைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியனால் அறியமுடிகின்றது. தொல்காப்பியரும் அகத்திணையியலில் அவர்களின் வாழ்க்கை நிலைகளை உணர்த்தியுள்ளார். வையைக்கரை மதுரையில், பாண்டிய அரசு மூன்றாவது சங்கம் நிறுவிய காலம் முதற்கொண்டு ஆரியரின் வருகை தென் புலத்தில் சிறிது சிறிதாகப் பெருகியுள்ளதனை இலக்கியச் செய்திகளால் காணமுடிகின்றது.

தமிழ்நாட்டிற்கு வந்துள்ள ஆரியகுருமார்களும் பிறரும் தமிழரோடு கலந்துரையாடி தங்கட்குத் தேவையானவற்றைப் பெறும் முயற்சிகளின் தாக்கமாகத் தமிழில் பல வடசொற்கள் இடம்பெறலாயின. வடமொழியாகிய சமஸ்கிருதத்திலும் அவர்களின் இன்றியமையாத தேவைகட்கேற்ப தமிழ்ச் சொற்கள் இணைந்து இடம்பெற்று இயங்கியுள்ளன.

இவ்வாறு நாடும் மொழியும் தனித்தனியே இருந்த காலத்தில் மொழிநிலையில் அவற்றின் தனித்தன்மையும், மொழி வேறு பட்டாரின் கூட்டுறவால் தாய் மொழியில் பிறமொழிக்கலப்பும் ஏற்படுதல் இயல்பாகவுளது.

நெடிய மேற்குத் தொடர்ச்சி மலையால் பிரிக்கப்பட்ட பழந் தமிழ் நாட்டின் பகுதியாகிய சேரநாட்டில் தமிழ் வளமுடன் இருந்ததனைச் சிலம்பும் பதிற்றுப்பத்தும் எடுத்துக்காட்டுகின்றன. பின்னர் வடமொழியாளரின் தொடர்பு மிகுந்த நிலையில் தமிழ் நிலைமாறி, மலையாளமாகி, வரிவடிவிலும் எழுத்தச்சனால் உருமாற்றம் பெற்றுள்ளமை நினைவு செய்தற்காகும்.

## பாண்டியரும் - தமிழும்

படைப்புக்காலந்தொட்டுக் குமரிநாடென்ற பழந்தமிழகத்தில் அரசினை உருவாக்கிப் பழையனெனும் பாண்டியமரபினர் வழி வழியாக நடத்திவந்துள்ளனர். அங்கு மக்கள் வழக்கில் தோன்றி வளர்ந்து செம்மையும் செழுமையும் பெற்றிருந்த தங்கள் தாய் மொழிக்கு ஆக்கஞ்செய்யவும் முற்பட்டுள்ளனர். மொழித்திறம் பெற்ற புலவர்கள் தாங்கள் அறிந்த உண்மைகளை, பட்டறிவு களை, கண்ட காட்சிகளை, ஆற்றிய அரும்பணிகளை, கருதிய நீதி நெறிமுறைகளை, தாங்கள் வாழ்ந்திருந்த காலத்து மக்களுக்குப் புலப்படுத்தவும், தங்களுக்குப் பின்வரும் தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கெனவும் முற்பட்டுள்ளனர். அதன் ஆக்கமாகவும் மொழியின் வளத்தினை நிலைப்படுத்திக்காட்டவும் திட்டமிட்டு நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். இவ்வாறு பண்டைத் தமிழகப் புலவர்களின் மொழித்திறன் புலப்பாடுற்றபோது, அதனை நெறிப்படுத்தவும், மொழியை வளர்க்கவும் பாண்டிய மன்னர்கள் முற்பட்டுள்ளனர். அதன் பயனாகவே தமிழ்ச் சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்துள்ளனர். இவ்வாறு

சங்கம் அமைத்துத்தமிழ்மொழிக்கென இலக்கியங்களையும் கலை நூல்களையும் புலவர்கள் எழுதி வழங்கிய காலமே சங்ககாலம் எனப்படுகிறது.

மொழிவளர்ச்சிக்கென அரசினால் உருவாக்கப்பட்ட சங்கம், முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாகக் காலச் சூழலால் அமைய நேர்ந்துளது.

முதற்சங்கம் என்பது குமரிக்கண்டத்தில் தென்மதுரை என்னும் பேரூரில் நிறுவப்பட்டிருந்தது. முதற்சங்கத்தை உருவாக்கித் தமிழ் வளர்த்த பாண்டியன் காய்சின வழுதி என்பவனாவன். இம் முதற்சங்கம் எண்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் ஆட்சிக்காலம் வரையில் நிலைத்திருந்தது.

கடுங்கோன் என்னும் பாண்டியன் ஆட்சிக்காலத்தில் முதல் கடல் வெள்ளம் ஏற்பட்டு, அதனால் தென்மதுரைப் பெருநகரம் உள்ளிட்டக் குமரிநாட்டின் தென்பகுதி கடலுள் அமிழ்ந்து அழிந்தது.

இவ்வாறு நிகழ்ந்த கடற்கோளினின்றும் தப்பிய பாண்டியனும் மக்களும் வடக்கு நோக்கிச் சென்று, வெள்ளத்தால் அழிவுபடாதிருந்த நிலத்தில் தங்கியுள்ளனர். பாண்டியன் அந்நிலப்பகுதியினைத் தன்னுடன் வந்தவர்கட்கு வாழ்விடமாக்கி, புலவர்களையும் மக்களையும் நிலைப்படுத்தி ஆட்சிசெய்துள்ளான்.

இவ்வாறு, வெள்ளத்திற்குத் தப்பி வந்த மக்களுக்கு நிலந்தந்து நிலைப்படுத்திய பாண்டியன் நிலந்தருதிருவிற் பாண்டியன் எனப் பட்டான். இவனது ஆட்சிக்குத் தலைநகராக அமைந்ததே கவாடபுரமெனும் நகரமாகும்.

பின்னர், கால வளர்ச்சியில் வெண்டேர்ச்செழியன் எனும் பாண்டியன் ஆட்சி செய்துள்ளான். அம்மன்னன் கவாடபுரத்தில் புலவர்களைச் சேர்த்து இடைச்சங்கத்தினை நிறுவி நடைபெறச் செய்துள்ளான். இச்சங்கத்திலிருந்தே தொல்காப்பியர் தமிழுக்கு இலக்கணம் செய்துள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றார்.

இச்சங்கத்தினைப் புரந்து வந்த ஐம்பத்தொன்பது பாண்டியரில் இறுதியாக ஆட்சி செய்தவன் முடத்திருமாறன் எனும் பாண்டியன், இவனது காலத்தில் மீண்டும் கடல் பொங்கி எழுந்து கவாடபுரம் உள்ளிட்டப்பகுதிகளை அழித்து அமிழ்த்தி விட்டது.

## தாமிரபரணிக் கரையில் - தமிழர்

கவாடபுரம் வெள்ளத்தில் மூழ்கியபோது முடத்திருமாறனும் மக்கள் சிலரும் தப்பி வடக்கு நோக்கிச் சென்றுள்ளனர். அங்கு நிலத்தை வளஞ்செய்து வற்றாது ஓடிய தாமிரபரணியாற்றங் கரையில் பாண்டியன் மக்களுடன் குடியேறினான். அப்பகுதி திருநெல்வேலி ஆதிச்சநல்லூர் திருச்செந்தூர் உள்ளிட்ட பகுதி யாகக்கருதப்படுகின்றது. கவாடபுரத்திலிருந்து பல்வேறுபட்ட நிலைகளில் தப்பி வந்து சேர்ந்த மக்களின் பெருக்கத்தினால் முடத்திருமாறன் அதற்கமைந்த இடத்தினைத் தேர்ந்து வடக்கே வையையாற்றங்கரையளவும் குடிபெயரச் செய்துள்ளான். அக் காலத்தில் அப்பகுதியளவும் விரிந்திருந்த சேரநாட்டுப் பகுதி யினையும் சோழநாட்டுப்பகுதியினையும் வளைத்துக் கொண்ட இடத்தில் மதுரையைத் தலைநகராக்கிப் புதிய ஆக்கமுடன் ஆட்சி செய்துள்ளான்.

இதனை,

''அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழருக்குரிய முத்தூர்க் கூற்றமும், சேரருக்குரிய குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை, இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்'' என்று அடியார்க்கு நல்லார் (கலி : 104) உரையிற் கூறியுள்ளார்.

வையைக்கரை மதுரையில் மக்கள் நிலையாக வாழ்க்கை நடத்தத் தொடங்கிய பிறகு, தலைநகர் வையைக்கரை மதுரையில் முடத்திருமாறன் மூன்றாவது தமிழ்ச்சங்கத்தினை நிறுவி, தமிழுக்கு மேலும் பல ஆக்கங்களைச் செய்துள்ளான். இச்சங்கமே கடைச் சங்கமாகும்.

கடைச்சங்கம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்காலம்வரை நாற்பத்தொன்பது பாண்டியரின் ஆட்சியளவில் நிகழ்ந்துளது எனப்படுகின்றது. (இறையனார் களவியல்).

இச்சங்ககாலத்தில், அகநானூறு, நற்றிணை ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல், ஆகிய அகப்பொருள் பற்றிய இலக்கியங்களும், கூத்து, வரிநூல், சிற்றிசை, பேரிசை ஆகிய கவின்கலை நூல்களும் தோன்றியுள்ளன.

இவ்வாறு மூன்று தமிழ்ச்சங்கங்களுள் இரண்டு குமரி நாட்டிலும், வைகைக்கரை மதுரையில் கடைச்சங்கமும் தொடர்ந்து பன்னூறு ஆண்டுகளளவில் நிகழ்ந்துள்ளன என்பதை இறையனார் களவியலுரையால் ஒருவாறு அறியமுடிகின்றது.

இச்செய்தியினைப் புனைந்துரையென்று தள்ளுவதற்கில்லை. இதனால், பழந்தமிழ் நாடாகிய குமரிக்கண்டத்தில் தமிழில் இலக்கண இலக்கிய நூல்களும், அவற்றில் வல்ல புலவர்களும் இருந்துள்ளனர். குமரிநாடு மொழிவளம் பெற்ற நாடாகவும், மக்கள் பண்பாட்டுடன் சிறந்த நாகரிக நாடாகவும் இருந்துள்ளது என்பது புலனாகின்றது.

கடைச்சங்க காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரை இருந்து பின் மறைந்தது என்று கூறப்பெறுகின்றது. இக்காலம் வரையில் தமிழ்மொழி எந்த அளவில் நிறைமொழியாக எழுத்தும் சொல்லும் பொருள்வளமும் பெற்றிருந்தது என்பதைத் தொல் காப்பியம் முதலான தமிழ்நூல்களால் நன்கு அறிய முடிகின்றது.

## முந்துநூல் கண்ட தொல்காப்பியன்

கடல்கொண்ட குமரிநாட்டில் நிகழ்ந்த இரண்டாவது தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழ்மொழிக்கு இலக்கணநூல் எழுதியவர் தொல்காப்பியராவர். அவரது நூலும் தொல்காப்பியமென்றே பெயர் பெறுவதாயிற்று.

தொல்காப்பியர் செய்த இலக்கண நூலிற்குப் பாயிரம் உரைத்தவர் அக்காலப் புலவர் பனம்பாரனார் ஆவர். ஐந்திரம் என்னும் தமிழ் இலக்கண நூலைக்கற்ற தொல்காப்பியன் என்று பாயிரத்தால் அறியப்பெறுவதால், தொல்காப்பியர் ஐந்திரத் திற்குப் பின்னர் தோன்றிய பாணிணீயத்திற்கு முந்திய காலத்தில் வாழ்ந்திருந்தாரென்று அறியப்படுகிறது. எனவே, தொல்காப்பியர் காலம் கி. மு. 1000 - என்று குறிக்கலாகும்.

குமரிநாடு எவ்வளவு பழமையானதோ அவ்வளவு, தமிழ்மொழி பழமையானது என்பதை அறிந்தால் தொல்காப்பியர் காலம் இன்னும் முற்பட்டதாகக் கருதப்படும். இதனை, நுண்ணிதின் ஆய்ந்துணர்ந்த பாவாணர் தமது மொழிநூலில் தொல்காப்பியர் காலம் கி, மு. 2000 - என்று குறித்துள்ளார். (ஒப்பியல் மொழி நூல் - பக். 106).

''முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்''

என்பதும் பாயிரம் தரும் செய்தியாகும்.

இதனால், தொல்காப்பியர் அவர்காலத்தே வழக்கிலிருந்த பழமையானதும் தமிழில் எழுதப்பட்டனவுமான இலக்கண

இலக்கிய நூல்களைக் கற்றுத்தேர்ந்த நிலையில், செந்தமிழ் நாட்டிற்கு இயைந்த வழக்கோடு முறைபட எண்ணி இலக்கணம் செய்துள்ளாரென்பதுடன், அவர் கற்றிருந்த முந்துநூல்கள், முதற் சங்ககாலப் புலவர்களால் இயற்றப்பட்ட பரிபாடல்களும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் முதலான நூல் களும், இவற்றிற்கு முந்திய காலத்தில் குமரிநாட்டில் வழக்கி லிருந்த நூல்களும் ஆகுமென்பது அறியத்தக்கதாகும். குமரி நாட்டில் முதற்சங்கத்திற்கு முந்திய புலவர்கள் பாக்களாலேயே பெரும்பாலும் நூல்களைச் செய்துள்ளனர். அவை, அக்காலத்தில் உருவாக்கம் பெற்றிருந்த தமிழ் வரிவடிவில் எழுதப்பட்டுள்ளன.

## காலவழக்கில் - எழுத்து

தொல்காப்பியத்தின் பின்னர் பலகாலங்களில் தோன்றியுள்ள தமிழ் இலக்கண நூல்களிலும், நிகண்டு நூல்களிலும் 'எழுத்து' என்பது பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள், திவாகரம் என்னும் நூலில்,

'பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயரியம் பினரே'

என்று குறிக்கப்பட்டுளது.

உலகில் முதன்முதல் தோன்றியது படவெழுத்தேயாகும். (இது முன்னர் குகையோவியங்கள் பற்றிய பகுதியில் விளக்கப் பட்டுளது.) தமிழகவழக்கிலும் மொழிநிலையில் அவ்வெழுத்து வகையே தோன்றி வளர்ந்துளது.

''உருவே உணர்வே ஒலியே தன்மையென
இருவகை யெழுத்தும் ஈரிரண்டாகும்''

என்று, யாப்பருங்கல விருத்தியில் கூறப்பட்டுளது.

பிங்கலந்தை என்னும் நிகண்டில்,

'வடிவு பெயர் தன்மை முடிவு நான்கெழுத்தே'

என்னும் நூற்பாவினால், தமிழெழுத்தின் இயல்பும் வகையும் உணர்த்தப்பெறுகின்றன. இதற்குச் சொல்லப்பட்டவுரையில்,

'வடிவெழுத்து - செவிப்புலவொலியைக்
கண்களுக்குப் புலப்பட வெழுதும் எழுத்து'

என்று விளக்கம் தரப்பட்டுளது,

'இலக்கணக்கொத்து' என்னும் நூலில்,

''வடிவு பெயர் தன்மையுள் முடிவு நான்கா
நடைபெறும் நாவலர் நாடிய எழுத்தே''

எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் வடிவெழுத்தென்பது உருவெழுத்தினைக் குறிப்பதாம். இதற்கு, 'எழுதப்படுவது உருவெழுத்தாகும்' என்னும் யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல் விளக்கந்தருவதாகும்.

''காணப்பட்ட உருவமெல்லாம்
மாணக்காட்டும் வகைமை நாடி
வழுவிலோவியன் கைவினை போல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்''

இதனால் மொழிக்குரிய சொல்லுறுப்பாகும் எழுத்து உருவெனக் கட்புலனாகும் வரிவடிவிலாதல் குறிக்கப்படுவதாம்.

## எழுத்துமுறை காட்டல்

மேலும் பனம் பாரனார் தமது பாயிரத்தில், ''தமிழ் கூறும் நல்லுலகத்து— எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி— முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந் தொகுத்தோன்'' என்ற அளவில் கூறாது ''மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி'' என்றும் கூறப்பெறுவதேன்? என்பதனைக் கொண்டு சிந்திக்கின்,

''எழுத்து மொழிக்கு உறுப்பாகவும் கருவியாகவும் பயன்படும் சிறப்பினைக் கண்டும் 'எழுதப் படுவது எழுத்தெனப்படுமே' என்பது கருதியும் ஒலிநிலைக்கு உருவாக்கமான வரிவடிவினை எத்தகைய வேறுபாட்டு மயக்கமும் ஏற்படாத முறைமையால் அவர் காலத்தில் வழக்கிலிருந்த அவ்வரிவடிவாகிய தமிழ் எழுத்தின் நியதிகளையும் தெளிவாக எடுத்துக் காட்டி இலக்கணம் நிறுவினான்'' என்பதாகக் கருத முடிகின்றது.

இதனை ஆசிரியர்,

''மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்''
(தொல் - எழுத்து - 15.)

''எகர ஒகரத் தியற்கையும் அற்றே''
(தொல் - எழுத்து - 16.)

என்னும் நூற்பாக்களால் மயங்கா மரபினைப் புலப்படுத்தியதோடு அடுத்துக் கூறிய நூற்பாவில்,

''புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீரியல் உயிர்த்த வாறே,'' (தொல் - எழுத்து - 17.)

என்று மெய்யும் உயிரும் கூடிய காலத்துப் பெறும் வரிவடிவினதாய எழுத்துக்களின் வேறுபாட்டினைக் கூறுவதாலும் அறியலாகும்.

இதற்கு விளக்கவுரை தந்தருளிய நச்சினார்க்கினியர்,'' உருவு திரிந்து உயிர்த்தலாவது மேலுங் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளிபெற்றும், புள்ளியுங் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம். கி,கீ - முதலியன மேல்விலங்கு பெற்றன. கு,கூ - முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ,கே - முதலியன கோடு பெற்றன. கா, ஙா (க.,ங.) முதலியன புள்ளிபெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார். மகரம் உட் பெறு புள்ளியை (ப்) வளைத்தெழுதினார். கொ கோ ஙொ ஙோ முதலியன புள்ளியுங் கோடும் உடன் பெற்றன. இங்ஙனந் திரிந்து ஒலிப்பவே உயிர்மெய் பன்னிரு பதினெட்டு இருநூற்றொருபத்தா றாயிற்று; ஆகவே உயிர்மெய்க்கு வடிவம் ஒருவாற்றால் கூறினா ராயிற்று.'' என்று விளக்கந் தந்துள்ளார்.

மற்றும் உச்சிமேற் புலவராக விளங்கிய இவ்வுரையாசிரியர் எழுத்ததிகார முதல் நூற்பாவிற்கு விளக்கந்தரும் போது, ''இவ் வெழுத்தெனப் பட்ட ஓசையை அருவென்பார் அறியாதார் அதனை உருவென்றே கோடும்'' என்று கூறியிருப்பது நோக்கத் தக்கதாகும்.

இவ்வாறு நூலாசிரியர் வழிநின்று உரையாசிரியரும் எழுத்திற் காம் வடிவினைக் காட்டியும், ஆசிரியர் ஒலிநிலைக்கே அனைத்தும் காட்டினாரென்பதாயின், கோடென்றும் விலங்கென்றும் குறிக்கப் பெறும் எழுத்தின் அடையாள உறுப்புகள், ஒலிநிலையில் வேறு பாடின்றி உணர்த்தவியலுமா? அந்நிலை திரியாது மயங்காது வழக்கில் தொடருமா? என்பது சிந்திக்கத் தக்கதாகும்.

எனவே, உயிர்மெய் புணர்ப்பால் ஆகின்ற தமிழ் எழுத்துக் களின்நெடுங்கணக்கு நன்முறையில் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கில் எழுதப்பட்ட வரிவடிவில் இருந்தன என்பதும். அதனை அவர் கற்றறிந்த திறனால் முறைப்படுத்தியும் நிலைப்படுத்தியும் நூலின் எழுத்து முறை காட்டி வரையறை செய்துள்ளாரென்பதும் நுண்ணிதின் அறிதற்காகின்றது.

மேலும், ஆசிரியர் நூன்முதல் நூற்பா, ''எழுத்தெனப்படுப'' என்றே தொடங்கியதனால் வரிவடிவினதாய்த் தமிழ் எழுத்தினைக் குறிப்பாலுணர்த்தியுள்ளமையால் புலப்படுவதாகும்.

இதனால், குமரி நாடாகும் பழந்தமிழ் நாட்டில் மக்கள் வழக்கிலும் புலமை நெறியிலும் தமிழுக்குரிய வரிவடிவ எழுத்துக் கள் செயற்பட்டுள்ளன என்பது போதரும். ஆயினும், அக் காலத்தில் தமிழ்மொழிக் கமைந்த வரிவடிவ எழுத்துக்கள் எவ்வா றானவை? எம்முறையிலமைந்தவை என்பன பற்றிய ஆய்வுரைகள் தொடர்வதாகும்.

## கல்லில் எழுத்து

''நல்லார் ஒருவருக்குச் செய்தவுபகாரம் கல்மேல் எழுத்துப் போல் காணுமே'' என்பது பிற்காலப் பாடலின் பகுதியாகும். கல்லில் உளியால் பொறித்துக் குறிக்கப்படும் எழுத்து காலத்தால் அழிவுபெறாத நிலைப்பு உடையதாகுமென்பதை உவமையாக்கி உரைக்கப்பட்டுளது.

பண்டைய தமிழகத்தில் கருங்கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் வழக்கம் இருந்துளது. போரில் வீரம்புரிந்து இறந்த வீரர்களுக்கு நடுகல் என்ற பெயரால் அரசும் மக்களும் நினைவுச் சின்னம் நட்டு வழிபாடு செய்துள்ளனர். நடுகல்லில் அவ் வீரனுடைய பெயரும், அவன் போரில் புரிந்த வீரச்செயலையும் உளியால் பொறித்து, கல்லிற்கு ஒப்பனை செய்து வீரவழிபாடு செய்துள்ளனர். வீரனின் உருவத்தினையும் புடைப்புச் சிற்பமாகச் செய்து அதில் பெயரும் பீடும் பொறித்து நடப்பட்ட நடுகற்களும் இருந்துள்ளன.

தொல்காப்பியர், நடுகல் பற்றிய செய்தியினை,

''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்'' (1006.)

என்று குறிப்பிடுகின்றார்.

நடுகல்லில் பீடும் பெயரும் பொறித்தலை, சங்க இலக்கிய மாகிய அகநானூற்றுப்பாடல்,

''நல்லமர் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்'' (அகம் - 67.)

தெளிவாகக் குறிக்கின்றது.

பழந்தமிழ்ப் பாடல்களின் தொகுப்பாகிய புற நானூற்றில்'

''பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்து
மரல் வகுத்து தொடுத்த செம்பீங் கண்ணியோ
டணி மயிற்பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்'' (புறம் - 264.)

என்று, நடுகல்லில் பெயர் பொறித்து நட்டுள்ள செய்தி புலப் படுத்தப்பட்டுளது.

மற்றும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினரான சேரமான் பெருமாள் நாயனார் பாடிய 'திருவாரூர் மும்மணிக்கோவை' என்னும் நூலில்,

''பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும்''

என்று கூறப்பட்டுளது.

இச்சான்றுகள், பழங்காலம் முதற்கொண்டே தமிழ்மொழி வரிவடிவு பெற்ற செம்மொழியாகத் திகழ்ந்திருந்ததினாலேயே நடு கல்லில் பெயரும் பீடும் பொறித்துள்ளனர் என்பது அறிதற்காம். பொறித்தலென்பது, கல்லில் உளியின்த் தொழில் திறனால் சுவடு வடிவில் எழுத்துக்களைப் பதிப்பித்தல்.

## ஏட்டில் எழுத்து

கல்லில் எழுத்துக்களை உருவாக்குதற்கு கூரிய உளியால் பொறிக்கும் உத்தியினைக் கையாண்டிருந்த அக்காலக் கலைஞர் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே குமரி நாட்டில் இருந்துள்ளனர்.

கல்லில் உளியால் எழுத்துக்களை அடையாளமாகப் பொறிக்கும் திறனைப் பெற்றிருந்த அவர்கள், கூரிப ஆணியால் பனை ஓலை ஏடுகளில் வருவி எழுதும் முறைமையினையும் கற்றிருப்பது இயல்பேயாகும்.

பழந்தமிழ் நாடாகும் குமரிநாட்டில் ஒரு பகுதி, பனை மரங்கள் வளர்வதற்கமைந்த மண்வளமுடன் இருந்ததோடு, பனை மரங்கள் மிகுந்துவளர்ந்திருந்த காரணத்தினால் 'ஏழ்பனை நாடு என்று பெயர்பெற்றுளது.

பனை ஓலையின் பயனைப் பட்டறிவாலுணர்ந்த நிலையில் அக்காலத் தமிழர், ஓலையில் கூரிய ஆணியால் வருவி எழுத்துக் களை எழுதும் முறையினைக் கற்றுத்தேர்ந்திருக்க வேண்டும். அம் முறையிலேயே ஏடுகளில் நூல்கள் எழுதப்பெறும் 'ஏட்டுச்சுவடி' வழக்குத் தோன்றித் தொடர்ந்துளது.

கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவரான திருவள்ளுவரும் கல்வியின் சிறப்பினை உணர்த்தும் குறளொன்றில்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று, தமிழ்மொழி வரிவடிவில் எழுத்துத்திறத்துடன் அன்றைய வழக்கில் கண்ணெனச் சிறந்து வளர்ந்திருந்ததனைக் குறிப்பிடு கின்றார். வள்ளுவரும் தமது திருக்குறள் நூலினைப் பனை ஓலைச் சுவடியாகவே எழுதி உருவாக்கியிருக்க வேண்டுமென்பது இதனால் கருதத்தக்கதாகும்.

இவ்வாறாகப் பண்டைத் தமிழகத்தில் தமிழ்மொழி வரி வடிவில் எழுத்துநிலை வழக்கில் இருந்துள்ளதனை நடுகற் பொறிப்பு, ஏட்டுச் சுவடி ஆகியவற்றால் அறிய முடிகின்றது.

அக்காலத்தில் தமிழ்மொழிக்கு வரிவடிவு இல்லையெனில், அகநானூறும், புறநானூறும் குறிக்கும் எழுத்து, பொறிப்பு என்ற சொற்களும், நடுகல்லில் பீடும் பெயரும் பொறிக்கும் வரிவடிவும் உண்டாதற்கியலுமா? என்பது கருதத்தக்கதாகும்.

இவ்வாறாகப் பண்டைய தமிழ்நாட்டில் மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழுக்கு எழுத்துவடிவினதாய வரிவடிவினைக் கற்றிருந்தார்கள் என்பதும், அக்காலப் புலவர்கள் நூல்களைச் சுவடிகளாகவே உருவாக்கியுள்ளதும் போதரும். ஆயினும், அப்பழைய எழுத்து வடிவம் யாதென்பது குறித்து எழும் ஐயத்திற்கு, ஏற்புடைய சான்றுகளால் விளக்கம் தருவது தொடரும் ஆய்வுரைகளாகும்.

## தமிழ்—பிறமொழியில்

இந்திய பெருநாட்டில் நிலவிய மொழிகளின் பெயர்களைக் கணித்துக் கூறிய 'சமவயங்க சுத்த' என்னும் சமணநூல் பாலி மொழியில் எழுதப்பட்டதாகும். இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்பர். இந்நூலில் பதினெட்டுவகை மொழிகளின் பெயர்த்தொகுப்பு கூறப்பட்டுளது.

இப்பட்டியலில் முதலில் 'பம்மி' என்ற பெயரும் இரண்டா வதாகக் 'கரோஷ்டி' என்ற மொழியும் கூறப்பட்டுள்ளன. பிற்பகுதியில் 'தம்ளி' என்ற மொழி குறிக்கப்பட்டுளது. பம்மி என்று கூறப்படுவது பிராம்மி என்ற பெயரின் திரிபாகும். தமிழ் என்ற சொல்லொலியை அக்காலச் சமணர் தம்ளி என்று ஒலித்துள்ளனர் என்பதே இதனால் பெறப்படுகிறது. பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளை அறிந்து பேசி வந்தவரான அக்

காலச் சமணர், தமிழ் என்ற சொல்லொலியைத் தம்ளி என்ற அளவில்தான் கூற முடிந்துளது.

கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகச் சொல்லப்பெறும் 'லலித விஸ்தாரம்' என்ற பௌத்த நூலில் அறுபத்து நான்குவகை மொழிப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வகையினை எழுத்துவகை என்றும் கூறுவர். இத்தொகுப்புப் பட்டியலில் 'திராவிடி' என்ற பெயரும் இடம் பெற்றுளது. சமஸ்கிருதமறிந்து பேசிய பௌத்தர் திராவிடம் என்ற பெயரைத் திராவிடி என்ற அளவில் கூறியுள்ளனர்.

இவ்வாறு, பாலிமொழி பேசிய சமணர், சமஸ்கிருதம் பேசிய பௌத்தர் ஆகியோர் தமிழ், திராவிடம் என்ற மொழிப் பெயர் களைத் தாமறிந்த மொழியில் சொல்லும்போது எழுத்து நிலையில் தம்ளி, திராவிடி என்ற அளவில்தான் திரிபாக எழுத முடிந்துள்ளது என்பது அறியலாகும்.

## செய்தியும்—நோக்கும்

பண்டைத் தமிழ்நாடாகிய குமரிக்கண்டத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வாழ்ந்து வந்த மக்கள் தமிழர் என்பதும், அவர்கள் சிறந்த தனித்தன்மை வாய்ந்த பண் பாட்டுடன் வளர்ச்சி பெற்றிருந்தனர் என்பதும் தங்கள் தாய் மொழியாகிய தமிழ்மொழியில் ஆக்கம் உடையவர்களாகவும், வரிவடிவில் எழுதும் திறனுடையவர்களாகவும் இருந்து அதனை நிலைப்படுத்தும் முயற்சியாகத் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி, இலக்கண இலக்கிய கலை நூல்கள் பலவற்றை இயற்றி மொழிக்கு வளம் கண்டுள்ளனர் என்பதும் புலப்படுத்தப்பட்டன.

தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு ஆகிய பழைய தமிழ் நூல்களில், கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் திறனுடன், பனை ஏடுகளில் எழுதும் முறையினையும் தமிழர் அறிந்து நூல்கள் பல எழுதியுள்ளனர். பனை ஓலை ஏடுகளில் எழுத்துக்களைச் சுவடுபட எழுதப்பட்ட நூல் அமைப்பு சுவடி யென்றும், ஏடுகளைக் கொண்டதால் நூல் ஏட்டுச் சுவடி என்றும் பெயர் பெற்றுளது.

மேல், கல்லிலும் ஏடுகளிலும் அக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்து எவ்வகைப்பட்டது? அதற்குரிய பெயர் யாது? என்பது பற்றிய ஆய்வுரையினை, அதற்கமைந்த சான்றுகளைக் கொண்டு தருவது தொடரும் நோக்காகும்.

## கல்லில்—வரிவடிவில் எழுத்துக்கள்

இந்திய பெருநாட்டில் கற்பாறைகளில், மலைக் குகைகளில், கல் தூண்களில், கருங்கல்லால் கட்டப்பட்ட கோயில்கள் ஆகியவற்றில் கல்லெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

உருவங்கள் பல்வேறுபட்ட நிலைகளில் புடைப்புச் சிற்பமாக உருவாக்கப்பட்ட தனிக் கற்களும் கிடைத்துள்ளன. இவை, நடுகற்கள், வீரக் கற்கள், சதிக்கற்கள் எனப் பெயர்பெறுவனவாகும், இவைகளில் வரிவடிவில் எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன,

காலத்தாலும் பிறவாலும் எளிதில் அழிவு பெறாமல் நிலைத்து நின்று, வருங்கால மக்களும் அறிந்து தெளிந்து கொள்வதற்கு ஏதுவாகவே கல்லெழுத்துக்கள் தோன்றியுள்ளன.

இத்தகைய கல்வெட்டுகளில், காணப்பெறும் செய்திகள் முற்கால நிகழ்ச்சிகளை இக்காலத்தவர் அறிந்து கொள்வதற்கு இடனாக இருப்பதுடன், அக்கால எழுத்துக்களின் வரிவடிவ நிலைகளையும் அறிந்து கொள்வதற்குச் சான்றாகவும் உள்ளன.

கல்லெழுத்தின் கால வளர்ச்சியாகச் சாசனங்கள் செப்பேடுகளில் பொறிக்கப்பெறும் வழக்கும் வரலாற்றுக் காலங்களில் வழக்கில் தொடர்ந்துளது.

இந்திய வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் திட்டமாகச் சான்றுகளுடன் எழுதுவதற்குக் கல்லெழுத்துக்களும், செப்பேடுகளும் பெரிதும் பயன்பட்டுள்ளன. சென்றகால நிகழ்ச்சிகளை அறிவிக்கும் பாங்கினைப் போன்றே, அக்கால எழுத்து முறைகளையும் அறிந்து கொள்வதற்கு இவை ஆதாரமாகவுள்ளன. மற்றும், அக்கால வழக்கில் உருவாக்கப்பட்ட ஏட்டுச் சுவடிகளில் காணப்படும் எழுத்து வடிவங்களும், பல்வேறுபட்ட காலங்களில் அரசுகள் வெளியிட்ட நாணயங்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களும், பண்டைய எழுத்து வடிவங்களை அறிவிக்கின்றன.

## கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

இந்திய நாட்டிலுள்ள கல்வெட்டுகளையெல்லாம் படியெடுக்க வேண்டும் என்ற திட்டத்தினை முதன் முதலில் செயல்படுத்தியவர், 'ஜேம்ஸ் பிரின்ஸப்' என்பவராவர். இவரது திட்டம் ஆங்கில அரசின் வழி கி.பி. 1837-இல் செயல்பட்டது. பழமையான

வற்றைக் கண்டுபிடிக்கும் ஆர்வம் மிகுந்தது. அதன் பயனாகத் தொல்பொருள் ஆய்வுத்துறை அமைந்தது. சென்னை மாநிலக் கல்வெட்டு ஆய்வுத்துறையும் அதன் கிளையாக இயங்கியது. வரலாற்றுச் சான்றுகளை, தொல்பொருள், கல்வெட்டு ஆகிய வற்றைக் கண்டுபிடித்து, அவற்றை அறிந்து 'தென்னிந்திய கல் வெட்டுத் தொகுதி'களாவும் 'இந்திய கல்வெட்டுகளின் ஆண்டறிக்கை' என்ற வெளியீடுகளாகவும் அரசு வெளியிட்ட அரும்பணியில் பயன் கருதாது பாடுபட்ட பேரறிஞர்கள் பலராவர்.

திரு. ஹூல்ஷ், கன்னிங்காம், டாக்டர் பூலர், டாக்டர் பர்னல், டாக்டர் கீல் ஹார்ன், பேராசிரியர் துப்ராய் போன்றவர் கள பல மொழிகளைக் கற்றுணர்ந்து கல்வெட்டுகளைப் படித் தறிந்து வெளியிட்ட அறிஞர்களாவர். இவர்களது வரிசையில் எண்ணத்தக்கவராக இருந்து தமிழ்நாட்டில் எத்தகைய சாதனங் களும் இல்லாத நிலையில் கருமமே கண்ணாக உழைத்துக் கல் வெட்டுகளைக் கண்டுபிடித்து; படித்தறிந்து ஆய்வுரைகளுடன் வெளியிட்ட பேரறிஞர் திரு.டி ஏ. கோபி நாதராயர் அவர்கள் நினைவு கூரத்தக்கவராவர். இம்முறையில் தனி ஆர்வமுடன் பல தமிழ்ப் பெரியார்கள் பாடுபட்டுள்ளனர். அவர்களது மதிப்பிட முடியாத தியாகவுழைப்பினால் தமிழக வரலாறு சிறந்த முறையில் எழுதப்பட்டுளது.

## தமிழ்நாட்டில் கல்வெட்டுகள்

இந்திய கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் இதுவரையில் முப்பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் பல்வேறுபட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளவைகளாகும்.

ஆராய்ச்சியாளர்கள் கல்வெட்டுகளை ஆராய்ந்து அவற்றின் காலத்தைக் கணக்கிட்டுள்ளனர். கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ள அரசன், அவனது ஆட்சியாண்டு, செய்தி ஆகிய வற்றைக் கொண்டு கணக்கிட்டு காலத்தினை வரையறை செய்வது நேர் முறையாகும். கல்வெட்டில் உள்ள எழுத்துக்களின் வரிவடிவினைக் கொண்டும், பிற கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக் களை ஒப்பிட்டும் காலத்தினைக் குறிப்பாகக் கூறுவது மற்றொரு முறையாகும்,

இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள முறைக்குரிய கல்லெழுத்துக்களில் பழமையான எழுத்துக்களும் உண்டு. அவற்றை இனம் கண்டு படித்தறியும் ஆற்றலையும் பழைய கல்வெட்டாய்வாளர்கள் பெற்றிருந்தார்கள். தாம் இனம் கண்ட எழுத்து வகைகளுள் பண்டைய தமிழ் எழுத்தின் வரிவடிவினை முறைப்படுத்தி விளக்கமுடன் எழுதி வெளியிட்ட பேரறிஞர்கள் பர்னல், ஹூல்ஷ், டி.ஏ. கோபி நாதராவ் ஆகியோரின் அரும் பணிக்கு நிகர் மற்றொன்று அமைந்திலது.

பர்னல் எழுதியுள்ள, "தென்னிந்திய எழுத்தியல்" (South Indian Paliography). டி.ஏ, கோபிநாதராவ் எழுதியுள்ள "திருவாங்கூர் தொல் பொருள் தொகுதி" (Travancore Archaeoloigacl Series) இவ்விரண்டு நூல்களிலும் தென்னிந்தியாவில் சிறப்பாக தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய கல்வெட்டுகள், செப்பேட்டுச் சாசனங்கள், பழமையான சுவடிகள் ஆகியவற்றிலுள்ள எழுத்து வடிவங்கள், அவற்றின் வளர்ச்சி நிலைகளைக் சுட்டும் வரைபடங்களுடன் மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. தமிழெழுத்தின் பழமையினைப் பற்றியும் அவ்வெழுத்துக்களின் வளர்ச்சிநிலைகளைப் பற்றியும் டாக்டர் பர்னல்அவர்கள் நூலின் முன்னுரையில்தந்துள்ள கருத்துகள் குறிப்பிடத் தக்கனவாகும்.

## பழைய கல்வெட்டு

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு வடமேற்கே சித்தன்னவாசல் என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூரைச் சார்ந்துள்ள மலை சித்தன்னவாசல் மலை என்றே பெயர் பெற்றுளது. இம்மலையின் மேற்பகுதியில் நீண்ட மலைப் பிளவொன்று இயற்கையாகவே அமைந்துள்ளது. அப்பிளவிடத்தை பாழி என்று கூறுவர், அப்பாழியில் கிறித்து காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து சமண சமய முனிவர்களும், ஆசிரியர்களும் சமணச் சாரணர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். ஆடையின்றிய நிலையில் ஆன்ம சக்தியும், அறிவாற்றலும் தெல்வீகமும் பெற்றிருந்த முனிவர்கட்கு, பாழியின் கீழ்தளப் பாறைகளில் நீண்ட சதுரமானதும் சிறிதளவு குழிப்பானதுமான கற்படுக்கைகளைச் செய்தமைத்துத் தந்துள்ளனர். அக்கற் படுக்கையில் நடுவிலமைந்த கற்படுக்கை அளவில் பெரியதாகச் செய்யப்பட்டுள்ளது. அப்படுக்கையின் விளிம்புப் பகுதியில் கல்

வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், வடக்கே அசோக மன்னன் கையாண்ட பிராமி எழுத்துக்களில் உள்ள கல்வெட்டினை ஆராய்ச்சியாளர்கள் குறிக்கின்றனர். அதனைச் சார்ந்துள்ள பழைய தமிழெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினையும் அதனால் பெறப்படும் செய்தியினையும் குறிக்கப் பெறாமல் பிராமி எழுத்திலான கல்வெட்டே எடுத்துக் காட்டப்பெறுகின்றது. இக்கல்வெட்டின் காலம் இரண்டாயிரத்துக்கு முற்பட்ட காலமென்று குறிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, செஞ்சிக்கு அடுத்துள்ள திருநாதர் குன்றிலுள்ள பழமையான கல்வெட்டாகும். இதனைக் கண்டு பிடித்துக் படியெடுத்து எழுத்துக்களைப் படித்தறிந்து வெளியிட்டவர் கோபிநாதராவ். இக்கல்வெட்டில், சந்திர நந்தி எனும் சமண ஆசிரியர் ஐம்பத்தேழுநாட்கள் உண்ணா நோன்பாகிய சல்லேகணம் இருந்து உயிர் நீத்தாருக்குச் செய்யப் பட்ட நிசிதிகை என்னும் கற்படையினைக் குறிக்கும் செய்தி புலனாகின்றது.

இவ்விரண்டு கல்வெட்டுகள் தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில் வீரசிகாமணி மலை என்று பெயர்பெறும் மலையில் முதல் பாழியிலுள்ள பழைய தமிழெழுத்திலான கல் வெட்டும் கோயில்பட்டிக்கு மேற்கே உள்ள கழுகு மலையில் சமண முனிவர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் மிகப் பழைய தமிழெழுத்துக்களைக் கொண்டதாகவே காணப்படு கின்றன. வீரசிகாமணி மலைப் பாழியில் சமண முனிவர்கள் வாழ்ந்துள்ளார்கள். பழைய தமிழெழுத்திலான கல்வெட்டினைச் சார்ந்து சங்கு இலச்சினை குடை இலச்சினை ஆகிய சின்னங்களையும் தளப்பாறையில் சமணர் பொறித் துள்ளனர். இச்சின்னங்களைக் கொண்டு இப்பாழியில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சமண தீர்த்தங்கரிலொருவரான நேமிநாதர் வழிவந்த சமண முனிவர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது அறியப்பெறுகின்றது.

## பிராமியின் தாய்மை

அசோக மன்னன் பௌத்த சமயத்தைப் பின்பற்றுவதற்கு முன்னர் (கி.மு. 262.) பல கல்வெட்டுக்களைத் தோற்று வித்துள்ளான். அவை பலவகையான பிராகிருத வடிவெழுத்துக் களில் காணப்படுகின்றன. அசோகன் பௌத்த தர்மத்தினை

மேற்கொண்ட பின்னர், பௌத்த தர்மத்தினையும் நன்னெறி களையும் கல்வெட்டுகளாகப் பொறிப்பதற்குப் பிராமி என்று அக்காலத்தில் வட இந்தியாவில் குறிக்கப்பட்ட மொழிக்கமைந் திருந்த வரிவடிவினைச் சீர் செய்து, சமஸ்கிருத சொற்களுக்கேற்பக் கையாளச் செய்துள்ளான். திருத்தமாக்கப்பட்ட பிராமி எழுத்துக்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நாட்டு வழக்கில் செல்வாக்குற்றதால், அசோகன் பிராமி என்ற சிறப்புப் பெயரால் குறிப்பதாயிற்று.

அசோக பிராமி எழுத்துக்கள் சமஸ்கிருத சொற்களுக்குரிய தாகவே அமைக்கப்பட்டு வந்துள்ளதனை அசோகனது கல்வெட்டுக் களால் அறிய முடிகின்றது.

## பிராமியின் கிளைநிலை

அசோகனது பிராமி கல்வெட்டுகள் பிஷாவர் மாவட்டம் முதல் தெற்கே மைசூர், கிழக்கே ஒரிசா, மேற்கே கத்தியவார் ஆகிய நாடுகளில் காணப்பட்டுள்ளன. அசோகன் பேரரசனாதலின் அவனது ஆட்சியில் வட இந்தியாவின் பெரும்பகுதி இருந்துள்ள தனை இதனால் அறிய முடிகின்றது.

இவ்வாறு அசோகனால் பரவச் செய்த பிராமி மொழி கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதலாகப் பல காலங்களில் வட இந்திய மொழி இனங்களுக்குத் தாய்மொழியாகியதோடு வரி வடிவினையும் திரிந்தநிலையில் தந்துளது.

கி.மு. முதல் நூற்றாண்டில் அசோக பிராமி குசானர் பிராமி யாகத் திரிபுற்றுளது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் குப்தபிராமி யாகக் கிளைத்துளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சித்தமாத்ரிகா பிராமியாக மாறுதலடைந்துளது. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் நாகரிவரிவடிவமாகவும், குடிலா வரிவடிவமாகவும் திரிந்து தொடர்ந்துளது,

இவ்வாறு, அசோக பிராமி எழுத்துக்கள் கிளைத்துத் திரிந்த நிலையில் வங்காளி, அசாமி, ஒரியா, காஷ்மீரி முதலான வட இந்திய மொழிகளின் வரிவடிவங்களுக்குத் தாயாக அமைந்துள்ள தனைக் காண முடிகின்றது.

வட இந்தியாவில் வளர்ச்சி பெற்ற பிராமி எழுத்துக்கள், அங்கே தோன்றி வளர்ந்த சமண பௌத்த சமயங்கள் தென்னிந்தி யாவில் பரவிய காலங்களில், அவ்வச்சமய குருமார்கள், முனிவர்

கள், தொண்டர்கள் ஆகியோரின் முயற்சியாக அவர்கள் தங்கி யிருந்த மலைகளிலும், குகைகளிலும் காணப்படுகின்றன. சமணச் சார்புடைய கல்வெட்டுகளே இவற்றுள் பெரும்பான்மையாக வுள்ளன. இவ்வெழுத்துக்களைக் கண்டு வெளியிட்ட அறிஞர்கள் தென்னிந்திய பிராமி என்று பெயர் குறித்தனர்.

இதன் அமைப்பினைப் பற்றி, பேரறிஞர் பர்னல் தமது தென்னிந்திய எழுத்துக்கலை என்ற நூலின் முகவுரையில் கூறியுள்ளமைக் காணத்தக்கதாகும்.

இதனால், அசோகன் கண்ட பிராமி வட மொழி சொற்களுக் குரிய எழுத்து வடிவமான மூலத்தினை உடையதோடு, ஆரியமொழி இனத்தின் வரிவடிவங்களுக்குத் தாய் நிலையாக அமைந்த நிலையில், அதனைக் கற்றிருந்த பௌத்த சமண பெரியார்களின் வழியாகத் தென்னிந்தியாவில் இடம் பெற்றுளது.

வட இந்திய பிராமி எழுத்துக்கள், தென்னிந்திய பிராமி எழுத்தானபோது வடிவில் மாறுபாட்டினை ஒரு சில எழுத்துக்கள் பெற்றுள்ளன. இது காலவழக்கில் மாற்றம் பெற்ற நிலை என்று கொள்ளலாகும்.

தென்னிந்தியாவில் பரவிய பிராமி எழுத்துக்கள், ஆங்காங்கே மக்கள் பேசிவந்த மொழிகளின் சொற்களுக்கேற்ற எழுத்துக்களை இயன்ற வழிக் கையாண்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

தென்னிந்தியாவில் பரவிய பிராமி எழுத்துக்கள் வடிவில் மாற்றம் கொண்ட நிலையில் சொற்களைக் குறைத்தும் குன்றியு தாகவும் பெற்றிருக்கின்றன. ஆனால், வட இந்திய பிராமி ஆரிய மொழியினங்களுக்கு ஏற்ற ஒலி நிலைகட்கு ஏற்புடைய எழுத்துக் களை உடையதாகவே உள்ளன.

## கிரந்தத் தமிழ் எழுத்துக்கள்

ஆரியரது வாழ்வியல் கோட்பாடுகள் வேத வேள்வி வேதிய பிராமணீயமாகத் திடம் பெறுவதற்குத் தமிழகத்தின் வரலாற்றில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலாக முன்னூறு ஆண்டுகள் தங்கு தடையேற்படாமல் அமைந்திருந்தது. இக்காலத்தினை வரலாற்றில் இருண்ட காலம் என்றும், வடமொழியைத் தமிழகத்தில் ஆட்சி வழிவளர்த்த களப்பிரர் காலமென்றும் கூறுவர். களப்பிரர் ஆட்சியில் வடமொழி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகளின் இணைப்பிற்கானதாகப் புதியதொரு எழுத்து முறை உருவாக்கப்பட்டுளது.

அவ்வெழுத்துருவாக்கத்திற்கு முன்னர் ஆந்திரப் பேரரசாகும் சாதவாகனர் பயன்படுத்தியதும் வடமொழிச் சொற்களுக்கு உருவளித்து நின்றதுமாகிய எழுத்துக்கள் பங்கேற்பதாயிற்று. எனவே, அவ்வெழுத்துக்களையும், தமிழ் உயிர்மெய் எழுத்துக்களில் சிலவற்றையும் கொண்ட நிலையில் அப்புதிய எழுத்து முறை தமிழகத்தில் பயன்படுத்தப் பெற்றுளது.

இவ்வாறமைந்து தமிழகத்தில் ஏட்டு வழக்கில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் 'கிரந்த எழுத்து' என்றும் கிரந்தத் தமிழ் எழுத்து' என்றும் பெயர் பெற்றன.

இவ்வாறு தமிழகத்தில் களப்பிரர் ஆட்சிக்காலத்தில் வடக்கே கன்னட ஆந்திர நாடுகளின் தென்பகுதியில் உருவான பல்லவரின் செல்வாக்கில் வழங்கப்பட்ட சமஸ்கிருத ஒலிகளுக்கமைந்த கிரந்த எழுத்துக்கள் ஓரளவு மூலமாக இருப்பதையும் அறிய முடிகின்றது.

பல்லவர் தெற்கே காஞ்சிபுரம் அளவிலும் தங்களது ஆட்சியை கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து வளர்த்துக் கொண்டுள்ளனர். சமஸ்கிருத மொழியையே தங்கள் ஆட்சிக்குரிய மொழியாகக் கொண்ட அம் முற்காலப் பல்லவர், அக் காலத்தில் சமண பௌத்த சமயத்தார் கையாண்டு வந்த பிராமி மொழி எழுத்துக்களைக் கொண்டு, தமிழ் போன்ற மொழிக்குரிய சொல்லொலிகளை முழுமையாக எழுதவியலாத நிலையில் கிரந்த எழுத்துக்களோடு தமிழ் எழுத்துக்களையும் தேவையான அமைப்பில் கையாண்டு, புதியதொரு எழுத்துருவாக்கத்தினை வடமொழி ஒலிகட்கும் தமிழ் மொழி ஒலிகட்கும் ஏற்ப படைத்துள்ளனர்.

இவ்வாறு, வடமொழிச் சொற்களையும் சுலோகங்களையும் எழுதவும், தமிழ் மொழிச் செய்திகளைச் சொல்லொலிகள் குறையாமல் எழுதவும் பல்லவ அரசு படைத்து, நாட்டில் நடைமுறைப் படுத்தியதால் அப்புதுமை பெற்ற எழுத்துக்கள் பல்லவ கிரந்த எழுத்துக்கள் என்று பெயர் பெற்றுள்ளன என்று கருத முடிகின்றது.

கி பி ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தின் வடபகுதியைக் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவப் பேரரசர்கள் தங்கள் ஆட்சியில் வெளியிட்ட கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் கிரந்த எழுத்துக்களையே பயன்படுத்தியுள்ளனர்.

சமஸ்கிருதச் சொற்களையும் சுலோகங்களையும் கிரந்த எழுத்துக்களினாலேயே எழுதியுள்ளனர்.

அக்காலத்தில் பல்லவர் ஆட்சியின்கீழ் உருவானவரும் சோழ நாட்டினைக் கண்காணித்தவருமான முத்தரையர் தங்கள் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்துக்களையே பயன்படுத்தி யுள்ளனர்,

முற்காலப் பல்லவர் கையாண்ட கிரந்த எழுத்து முறையினை அப்பொழுது பாண்டிய நாட்டில் ஆட்சி நிறுவி நடத்திய களப்பிர ரும் கையாண்டுள்ளனர். எனவே தான் பாண்டிய நாட்டுக் கொடும்பாளூர் வேளிரும் தங்கள் கல்வெட்டுகளைக் கிரந்த எழுத்துக்களிலேயே பொறித்துள்ளனர்.

பாண்டிய நாட்டில் மாறவர்மன் அரிகேசரி பாண்டியன் (கி.பி. 640-670.) காலத்திலேயே கிரந்த எழுத்துக்கள் கல்வெட்டு களில் இடம் பெற்றுள்ளன. இவ்வழக்கு பாண்டிய நாட்டில் தமிழ் எழுத்து முறையோடு தொடர, கிரந்த எழுத்துமுறையும் வடமொழி பகுதிகளுக்குரியதாகக் கையாளப்பட்டுள்ளது இதனைப் பராந்தகன் வீர நாராயணின் தளவாய்புரச் செப்பேட்டில் சமஸ் கிருத பகுதி கிரந்த எழுத்துக்களால் படைக்கப்பட்டுள்ளதால் அறிய முடிகின்றது.

பிற்காலச் சோழர் மரபின் முதல்வனாகிய பரகேசரி விசயாலய சோழன் (கி.பி. 846-881.) முதலான சோழ மன்னர்களின் செப்புப் பட்டயங்களின் முற்பகுதியாகும் சமஸ்கிருதப் பகுதியைக் கிரந்த எழுத்தினாலேயே காண முடிகின்றது.

முதல் இராசராசனது கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திக்கு முன் கிரந்த எழுத்தினாலான சுலோகம், இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு தமிழ்மொழி, சிறப்புடன் நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் பாண்டிய நாட்டிலும் சோழர் ஆட்சியிலும் சிறப்புற்றி ருந்த நிலையில் வடமொழிக்கமைந்த கிரந்த எழுத்துக்கள் பயன் படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் காணலாகும்.

பாண்டிய அரசிலும் சோழர் ஆட்சியிலும் அரச குருமார்கள் அரசர்களின் மரியாதைக் குரியவர்களாக இருந்துள்ளமையினாலும்' செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் அரசனின் அறச் செயல் களைக் குறிப்பதற்குரிய ஓலையினை எழுதியவர்கள் அரச குருமார் களின் பார்வையிலிருந்த அந்தணர்களாக இருந்தமையில் பிரசஸ்தி என்னும் வாழ்த்துரை அவர்களால் கிரந்த எழுத்துக்களில் வட மொழிச் சுலோகங்களாக வரையப்பட்டுளது. பாண்டியர்

கல்வெட்டுகளிலும் சமஸ்கிருத மொழி கையாளப்படும் இடங்களில் கிரந்த எழுத்தினையே பயன்படுத்தியுள்ளனர்.

பல்லவர் ஆட்சிக் காலமாகிய கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு அளவிலும் பல்லவ கிரந்த எழுத்துக்கள் பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகளிலும், செப்பேட்டுச் சாசனங்களிலும் கையாளப்பட்டுள்ளன. சாசனச் செய்திகளில் வரும் சமஸ்கிருதச் சொற்களும் கிரந்த எழுத்துக்களினாலேயே குறிக்கப்பட்டன.

இவ்வாறு பல்லவர் காலத்தில் செம்மையும் சிறப்பும் பெற்ற நிலையில் அரசியலிலும் நாட்டிலும் தொடர்ந்து கையாளப்பட்ட கிரந்தத் தமிழ் எழுத்துக்கள், பாண்டியர் நாட்டிலும், சோழர் நாட்டிலும் பரவிய பின்னர் விசய நகர மன்னர்களின் ஆட்சி தமிழகத்தில் நிலவிய கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதலாக மொழிவழக்கிலும் எழுத்துவழக்கிலும் சமஸ்கிருதத்தின் இடத்தைப் பெற்றுச் செல்வாக்குடன் இருந்துளது. இதற்குக் காரணம் சமஸ்கிருத மொழியைப் போற்றிய பல்லவர்களைப் போன்றே விசயநகர மன்னர்களும் இருந்ததுடன் சமஸ்கிருதப் பண்டிதர்களை அரசகுருவாகக் கொண்டு அரசியல் நடத்தியதுமாகும். இம்முறையினைப் பின்னர் தமிழகத்தினை ஆட்சி செய்த நாயக்க மன்னர்களும் கையாண்டுள்ளனர்.

தமிழகத்தில் சமணசமயம் கி.மு. ஒன்றிரண்டு ஆண்டுகளளவிலிருந்தே இடம் பெற்றுள்ளதனைப் பல்வேறுபட்ட அடையாளங்களால் அறிய முடிகின்றது. தமிழகத்திற்கு வருகைதந்த சமணர்கள் சமஸ்கிருத மொழியாளராகவும் பிராமி எழுத்துக்களை அறிந்தவராகவும் இருந்துள்ளனர். அவர்கள் சமண சங்கத்தின் திகம்பர முனிவராகவும், ஆசாரியராகவும். உபாத்தியாயராகவும் இவர்கட்குப் பணிவிடை செய்யும் மாணாக்கர்களாகவும் இருந்துள்ளனர்.

அவர்கள் தங்கியிருந்த மலைகள், மலைப்பாழிகள், குகைகள் ஆகியவற்றில் அவர்கள் அமர்வதற்கும் படுப்பதற்கும் ஏற்றவடிவில் தளப் பாறைகளில் கற்படுக்கைகளும் குழிப்புத் தடங்களும் செய்யப்பட்டுள்ளன. அவற்றைச் செய்தளித்தாரின் பெயருடன் இன்னார்க்கு இன்னது செய்தளித்தான் என்ற அளவிலான செய்திகள் தமிழ்ச் சொற்களுக்கு பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் தமிழ்ச் சொற்களுக்கு ஏற்ற எழுத்துக்

களைக் கொண்டதாக இல்லை, எனவே தமிழ்ச் சொற்களின் குறைந்த திரிந்த வேறுபட்ட ஒலி நிலையிலேயே வாசிப்பதாக அமையலாயிற்று.

எடுத்துக்காட்டாக, ஆங்கில மொழியை மட்டும் பேசிய எழுதிய ஆங்கிலேயர், 'நாகப்பட்டினம்' என்ற ஊரின் பெயரை 'நெகபடாம்' என்று கூறியும் எழுதியும் வந்த இயல்பினைக் காட்டலாகும்.

எழுத்து நிலையில் தமிழ்ச் சொற்களுக்கு ஈடு செய்ய முடியாத சூழ்நிலையால் தமிழகத்தில் நிறைவான மொழித் திறத்துடன் ஏட்டிலும் நாட்டிலும் வளமுடன் வழக்கில் நிலவிய தமிழ் மொழியை அக்காலச் சமணர்கள் கற்கும் முயற்சியில் ஓரளவு புலமை படைத்த நிலையில் தமிழ்ச் சொற்களையும் செய்திகளையும் எழுதுவதற்குரியதாக புதியதொரு எழுத்து முறையினைத் தமிழ் நெடுங்கணக்கின் சார்பாக உருவாக்கியுள்ளனரென்றும், அவ்வெழுத்துக்களாலேயே சமஸ்கிருதசொற்களையும், தமிழ்ச் சொற்களையும் கொண்டதாகப்பலநூல்கள் எழுதப்பட்டுள்ளன என்பதும் அறியத்தக்கதாகவுளது.

தமிழகத்தில் வாழ்ந்திருந்த சமணப் பெரியார்களால் அப்புதிய எழுத்துக்களில் நூல்கள் பல எழுதப்பட்டன. நூல் கிரந்தம் எனப் பெயர் குறிக்கப்பட்டது. நூலிற்கமைந்த பெயர் காலவழக்கில் அதிலமைந்த புதிய எழுத்துக்கட்காகி, எழுத்துக்கள் கிரந்தம் எனப் பெயர் பெற்றுள்ளன.

கிரந்த எழுத்துக்களால் சமண ஆசாரியர்கள் எழுதிய நூல்கள் பலவுள்ளன. சமண சமயப் பெரு நூல்களுள் சிறந்த ஸ்ரீபுராணம், சமண சமயக் கோட்பாடுகளை விளக்கமுடன் தரும் ஸ்ரீமாகநந்தி, ஆசாரியரால் செய்யப்பட்ட பரமாகமம் என்னும் ஸ்ரீ பதார்த்த சாரகிரந்தம் ஆகிய சமண சமயப் பெரு நூல்கள் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் கொண்டு சிந்திக்கும்போது, தமிழகத்திற்கு வந்த சமணர்களின் வழித் தோன்றலாயினார். கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில், கிரந்த எழுத்துக்களைச் சமஸ்கிருதம் தமிழ் ஆகிய மொழிகளின் சொற்களுக்கேற்பப் படைத்து பல நூல்களையும் எழுதி வழக்கில் தொடருமாறு வழி காட்டியுள்ளனரென்று கருத முடிகின்றது.

பக்தி நெறியில் சிறந்த வைணவப் பெரியார்கள் திருவாய் மொழிப் பாடல்களுக்கு எழுதிய விரிவுரைகளும், உரைவளமாகும் வியாக்யானங்களும் கிரந்த எழுத்துக்களிலேயே சொல்லப் பட்டுள்ளன. பக்தி மார்க்கம் தமிழகத்தில் பரவிய கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலாகக் கிரந்தம் தெய்வ மொழியாகவும் கருதப் பட்டுளது. இவ்வாறு, கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் பாண்டிய நாட்டில் தங்கியிருந்த சமண ஆசாரியர் களின் முயற்சியாலேயே கிரந்த எழுத்துக்கள் உருவாக்கப் பட்டிருக்க வேண்டுமென்பதற்கு நாட்டின் சூழலும், அரசியல் நிலையும் ஏற்புடையதாக இருந்துள்ளன என்பதைக் கொண்டு கருத முடிகின்றது.

கிரந்த எழுத்துக்கள் கால வளர்ச்சிக்கேற்ப மூன்று வகை யினைப் பெற்றுள்ளன. தொடக்கத்தில் இவ்வெழுத்துக்கள் வட மொழிச் சார்பினுக்கு அமைந்ததாகவே இருந்துளது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் தொடர்ந்த பல்லவர் ஆட்சிக் காலங்களில் கிரந்த எழுத்துக்கள் சித்திரிப்புடன் பொறிக்கப் பட்டுள்ளன,

மேல் தொடர்ந்த காலத்தில் திருந்திய வடிவங்களுடன் தமிழ் மெய் எழுத்துக்களிலும் உயிரெழுத்துக்களிலும் சில எழுத்துக் களில் வடிவம் மாறாமல் கொண்ட தமிழ் கிரந்தமாக இருந்துள்ள தனைக் காண முடிகின்றது.

தமிழ் எழுத்துக்கள் கிரந்த எழுத்து வரிசையில் தொடக்க முதலாகவே இடம் பெற்றிருந்ததாயினும் தெளிவான தமிழ் எழுத்துக்களைக் கொண்ட கிரந்த எழுத்து முறை பல்லவர் காலத்தின் பிற்பகுதியிலிருந்தே கையாளப்பட்டுள்ளது. அவற்றுள் தமிழ் உயிரெழுத்துப் பன்னிரண்டில், ஈ, உ, ஊ, ஒ, ஔ என்ற ஐந்தெழுத்துக்களும், தமிழ் மெய்யெழுத்துப் பதினெட்டனுள், க, ஞ, ட, ண, த, ந, ய, ர, வ, ஆகிய ஒன்பது எழுத்துக்களும் குறிப்பிடத் தக்கவைகளாகும். இவற்றுள் க, ஞ, ட ஆகிய மூன்றெழுத்துக்கள் சிறிது கோடுகளால் வளையப்பட்ட நிலையில் கையாளப் பெற்றுள்ளன.

தொடக்ககால கிரந்த எழுத்துக்களில் உயிரெழுத்து வரிசையில் முதல் எழுத்தான, அ எழுத்து, மேலே சிறிய படுக்கைக் கோடுகள்

இரண்டினைப் பெற்ற நிலையில், அடிப்படையான செங்குத்துக் கோட்டின் கீழ்முனை சிறிது வளைந்து மேலெழுந்ததாகவும் உருப் பெற்றுளது. இந்நிலை மாற்றம் பெற்றதாகக் க-வடிவின் முன் வளைவு நீள் சதுரமாக உள்ளது. இவ்வடிவங்களின் அடிப்படைக் கோட்டுரு தமிழ் அ-விற்குரிய பழைய வடிவினைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறையிலேயே ஆ எழுத்தும் அமைந்து திருத்தம் பெற்றுளது. இ. ஈ, எழுத்துக்களில் இகர வெழுத்து கவிழ்ந்த கோட்டுருவில் நின்று, பின்னர் ஐகாரத்தின் மேற்பகுதியோடு குறுக்கிட்ட கோட்டுருவில் வளர்ந்துளது.

ஈ எழுத்து இருபுறமும் புள்ளிகள் பெற்ற செங்குத்துக் கோட்டுருவில் தமிழெழுத்தின் வடி விலேயே உள்ளன.

உ, ஊ ஆகிய இரண்டெழுத்துக்களும் தமிழ் வரிவடிவிலேயே கையாளப்பட்டுள்ளன.

எ, ஏ இரண்டு எழுத்துக்களும் தமிழ்க் கல்வெட்டுகளில் சோழர் காலத்தில் பொறிக்கப்பட்ட இரு சுழி னை எழுத்தினைப் போன்ற வடிவங்களில் அமைந்துள்ளன.

ஒ. ஔ, ஆகிய இரண்டெழுத்துக்களும் தமிழில் உள்ளவாறே இடம் பெற்றுள்ளன. ஓ காரத்திற்கு ஒ கரமே இடம் பெற்று ஒலிநிலை பெற்றுள்ளது.

தமிழ் எழுத்துக்கள் கிரந்த எழுத்துக்களின் படைப்பில், சுவடு மாற்றம் பெறாமல் உள்ள வடிவில் எடுத்தாளப்பட்டுள்ளது மேலே குறிப்பிடப்பட்டுளது.

இம்முறையிலேயே தமிழுக்குரிய மெய்யெழுத்துக்களில் ண், த, ந. ய, ர. வ ஆகிய எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. க, ட, ர, ஆகிய எழுத்துக்களில் க எழுத்து இணை வளைவுக் கோடுகள் கூட்டல் அடையாளம் போல் அமைந்துள்ளன. ட-எழுத்தின் கீழ்க் கோட்டின் நடுவில் அடிப்புறம் சிறிய கோடு இணைக்கப் பட்டுளது. ர-எழுத்தின் வடிவில் வலப்புறக்கோட்டின் அடி நுனி வளைந்து உள்ளடங்கி எழுந்துள்ள பாங்கில் வரையப்பட்டுளது.

தமிழுக்குரிய உயிரெழுத்துக்கள் பன்னிரண்டாகும். கிரந்தப் படைப்பில் உயிரெழுத்துக்கள் பதினாறாகவுள்ளன,

அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ர்ரு, லு, ல்லு, ஏ, ஐ, ஓ, ஔ, அம், அஹ என்பனவாகும். வடமொழிக்குரிய சார்பும் கிரந்தம் பெறுவதற்கு ஏதுவாகவே நான்கு எழுத்துக்கள் ஒலிநிலைக்கேற்ப படைக்கப்பட்டுள்ளன.

மெய்யெழுத்துக்கள் வடமொழிக்குரிய முறையில் ஒவ்வோரெழுத்தும் நான்கு நிலையில் உருவிலும் ஒலிப்பிலும் மாற்றம் பெற்றதாக உருவாக்கப்பட்டுளது. சான்றாக க-எழுத்திற்கு, Ka, Kha, ga, gha என்ற வகைநிலை அமைப்பினைக் காணலாகும்.

தமிழ் மெய்யெழுத்தினத்தின் சிறப்பு எழுத்துக்களாகும் ழ, ற, ன ஆகிய மூன்றெழுத்துக்களுக்கும் கிரந்தத்தில் எழுத்துக்கள் உருவாக்கப் பெறவில்லை. மற்றும் ங, ஞ, ண, ந, ம என்ற மெல்லினங்கள் ஐந்தெழுத்துக்கும் தமிழொலிக்குரிய முதல் வடிவ எழுத்துக்களொன்றே இடம் பெற்றுள்ளன. வடமொழிக்குரியதாக ஒவ்வோரெழுத்திற்கும் நான்குவகைப் பரிவொலி எழுத்துக்கள் உருவாக்கப் பெறவில்லை. தமிழொலி எழுத்தொன்றே இடம் பெற்றுளது. இவ்வாறே இடையின எழுத்துக்களில் ய, ர, ல, வ ள ஆகிய ஐந்தெழுத்துக்களும் வல்லொலி, பரிவொலி, கணவொலி ஆகிய மூன்று நிலைகளுக்குரிய எழுத்துக்கள் படைக்கப் பெறாமல் முதலொலி எழுத்துக்களளவில் உள்ளன. (வல்லொலி—Pa, பரிவொலி—Ba, கணவொலி—Bha. (ப) )

இவ்வாறாகக் கிரந்த எழுத்துக்கள் சமஸ்கிருதச் சொல்லொலிகளுக்கேற்ப படைக்கப்பட்டிருப்பதில், உயிர் எழுத்துக் களில் அம், அஹ என்ற ஈற்றெழுத்துக்களுடன் ரு, ர்ரு, லு, ல்லு, ஆகிய ஒலிநிலை எழுத்துக்களும், ஸ, ஷ, க்ஷ, ஹ ஆகிய எழுத்துக் களும் அமைந்திருப்பதைத் தவிர மற்றைய எழுத்துக்களும், அவ் வவற்றிற்குரிய நெடுங் கணக்காகும் உயிர் மெய் எழுத்துக்களும் தமிழ் மொழிக்கமைந்த வகைமையாகவே அமைக்கப்பட்டிருப்பதி னாலேயே 'தமிழ் கிரந்தம்' (Tamil Grantha) என்று முன்னோர்கள் பெயரிட்டுள்ளனர்.

## கிரந்தத் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழகத்திற்கு கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலாகப் படிப் படியாக வந்து குடியேறிய பிற மொழியாளர்கள், தமிழகத்தில் மக்கள் வளர்த்திருந்த கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை ஆகிய நுண்கலைகளின் மேம் பாட்டினைக்கால வழக்கில் உணர்வாராயினர்.

இவற்றையெல்லாம், கண்டும் கேட்டும் வியப்புற்ற நிலையில் அவற்றின் அமைப்பினையும், உருவாக்க முறைமைகளையும் ஆங்காங்கே தமிழ்க் கலைஞரிடம் கேட்டறிந்த அளவில், அவற்றைத் தாங்கள் அறிந்திருந்த வடபுல எழுத்துக்களில் எழுதித் தொகுப்பாக்க முயற்சி செய்துள்ளனர். அதற்கு வட மொழியில் சில சொற்கள் இல்லை. பிராமி எழுத்துக்களாலும் சொற்களை முழுமையாகக் குறிக்கவியலவில்லை. எனவே. தமிழர் வழங்கிவந்த கலைச் சொல்லொலிகளெல்லாம் தங்களிடம் இருக்க வேண்டிய இன்றியமையாமையினைச் சிந்திக்கலாயினர், தமிழ் எழுத்துக்களுடன் சில எழுத்துக்களையும் புதுமையான வடிவங்களில் சேர்த்து கிரந்தத் தமிழ் எழுத்துக்களை உண்டாக்கி யுள்ளனர்.

இம்முயற்சிக்குப் பல்லவர் தமிழகத்தின் வட பகுதியில் அடி வைத்து அரசியலையும் உருவாக்கிய கி.பி. மூன்றாம் நூற்றாண்டு ஏற்புடையதாக அமைந்திருந்துளது. தமிழரல்லாத பல்லவர் சமஸ்கிருத மொழியாளராகவும் சமஸ்கிருதத்தைப் போற்றி வளர்ப்பவராகவும் இருந்துள்ளதே இதற்குக் காரணம் எனலாம்.

இக்காலம் கி.பி, மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டளவும் கொண்டதாகும். இக்கால அளவிற்றான் தமிழை யும் கிரந்த எழுத்தையும் பின்பற்றிய வரிவடிவில் தெலுங்குமொழி எழுத்துக்கள் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. எழுத்துருவைச் சிராகப்பெற்ற தெலுங்கினைப் பார்த்தே கன்னட மொழிக்கு வரி வடிவெழுத்துக்கள் படைக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் மலையாள எழுத்துக்களும் தமிழ், தெலுங்கு, கன்னடம், கிரந்தம் ஆகிய மொழிகளின் எழுத்துவடிவங்களில் தேவைக்கேற்ற உருவங் களில் எழுத்தச்சனால் படைக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழி குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளாகவே இலக்கியவளம் பெற்று வளர்ந்து வந்த செம்மொழி. அதனால் எழுத்துக்கள் மாற்றமோ திரிபோ பெறுவதற்கு முடியவில்லை கிரந்த எழுத்து எவ்வளவோ வேகமாகத் தமிழகத்தில் அரசியல் வழிப் பரவியுள்ளது. பல்லவர் காலக் கோயில்களிலிருந்து பாண்டியர் சோழர் நாயக்கர் ஆகிய மன்னர்களின் கோயில் களிலுள்ள கல்வெட்டுகளில் கிரந்த சுலோகங்களையும் சொற் களையும் காணமுடிகின்றது. ஆனாலும் இன்று தமிழகத்தில்

கிரந்த எழுத்து வழக்கு இன்னதென்றே தெரியாமல் வழக்கொழிந்துளது. தமிழெழுத்து செம்மையான வடிவங்களில் வளர்ந்து வந்ததால் மாறுதலுக்கு இயல்பின்றி ஒரே தரமாக வந்துளது. கிரந்தம் போன்ற எழுத்துக்கள் பல்லவ கிரந்தம், பழைய கிரந்தம் பிற்கால கிரந்தம் என்பன போன்ற பெயர்களுக்குரியதாக வரிவடிவில் திரிந்து வந்துள்ளதனைக் காண முடிகின்றது.

தமிழ் ஒரே நிலையில் மொழிக்கமைந்த ஒலி நிலைகளை ஒரெழுத்தின் திறமே பெற்றுள்ளதனைக் கொண்டு அதன் தனித் தன்மையினைக் காண முடிகின்றது.

சமஸ்கிருதத்திற்குரிய தேவநாகரி எழுத்திலும் கிரந்த எழுத்திலும், க- என்ற எழுத்திற்கு வடமொழிக்குரிய சொல்லொலிகளை அமைக்க நான்கு வகை - க - எழுத்துக்கள் உள்ளன. தமிழெழுத்துக்குரிய தனித் திறன், நான்கு வகை ஒலிநிலைகளையும் சொல்லின் எழுத்துச் சேர்க்கையாலும் தனி நிலையாலும் ஒரெழுத்தே பெற்று நிற்பதால் அறியலாகும். இதுவே, தமிழெழுத்தின் தொன்மைக்கும் தனித் தன்மைக்கும் உரிய சான்றாகும்.

கதவு - என்ற பொருட் பெயரின் சொல்லொலியில் க, (Ka) என்பது வன்மையாக ஒலிக்கின்றது. நகம் என்ற சொல்லில் க - (ga) பரிவொலியில் விளங்குகிறது. ஒட்டகம் என்ற சொல்லில் க . (gha) கனவொலியில் இயங்குகிறது. இவ்வாறு எழுத்து வடிவில் திரியாமல் சொல்லில் நின்று ஒலிநிலையில் ஏற்புடையதாக ஒலித்து, ஒரே எழுத்து பலவகை ஒலிகட்குச் சொல்லில் இடனாகி நிற்கும் பாங்கு வட மொழிக்கும், அதன் சார்புடைய பிற மொழிக்கும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்,

## பாண்டிய நாட்டில் - பழைய தமிழ் எழுத்துக்கள்

பாண்டிய நாட்டில் புதுக்கோட்டைக்கு மேற்கே குடுமியான் மலைக்கு முன்னர் சித்தன்ன வாசல் மலை நீண்டு உயர்ந்துளது. மலையின் மேல் பகுதியில் கிழக்கு முகப்பில் இயற்கையானதும் வாயகன்றும் உட்குவிந்து குழிந்ததுமான நீண்ட பாழி உள்ளது. தமிழகத்திற்கு வந்த சமணத் துறவிகளில் சிலர் இங்குத் தங்கியிருந்துள்ளனர். அவர்கட்குப் பாழியின் தளப் பகுதியில் பல கற்படுக்கைகள் செய்தளிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தலைமையானதாகக் காணப்படும் அழகிய பெரும் படுக்கையின் வலப்புற விளிம்பில்,

"எருமி நாடு குமிழ் ஊர் பிறந்த
காவுடி ஈதென்கு சிறுபோசில் இளயர்
செய்த அதிட் அனம்"

என்று, அறிஞர் படித்துள்ள பிராமி எழுத்துக்களாலான கல்வெட்டுளது.

இக் கல்வெட்டினைத் தொடர்ந்து பழைய தமிழ் எழுத்துக் களால் குறிக்கப்பட்ட ஏழு தமிழ்ப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள் ளன. இக்கல்வெட்டாலான பெயர்களை, பிராமி கல்வெட்டுக்குப் பிற்பட்ட 4-5 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல்வெட்டுகள் என்று கூறப்படுகிறது.

பிராமி எழுத்துக்களைப் புரிந்து கொண்டு படித்தறிவதற் கமைந்த முயற்சியே, சார்ந்துள்ள தமிழெழுத்துக்களாலான கல்வெட்டுப் பெயர்களையும் முயன்று எழுத்தின் இனம் கண்டு படித்தறிய வேண்டியுளது.

பிராமி எழுத்தாலான தமிழ்ச் சொற்கள் எழுத்துப் பிழை களுடன் சொற் பிழைகளாகவும் உள்ளன. தமிழ்க் கல்வெட்டுப் பெயர்கள் பிழையின்றி நிறைவாகவுள்ளன.

தமிழ் எழுத்துக்களாலான கல்வெட்டுகளில் தொழக் குன்றத்துக் கடவுளன், திரு நீலன், திருப்பூரணன், திருச்சாத்தன், திட்டைச்சாணன், ஸ்ரீ பூரண சந்திரன், நியத்தகரன் என்ற பெயர்கள் உள்ளன.

இக்கல்வெட்டிலுள்ள தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் மிகப் பழமையானதாகக் காணப்படுகின்றன. பாண்டிய நாட்டில் சிறப்புடன் வழக்கிலிருந்த தமிழ் வட்டெழுத்துக்களுக்கு மூலமான பழைய எழுத்துக்களாகவே காணப்படுகின்றன.

பாண்டிய நாட்டில் சமய வளர்ச்சிக்குரியாராகக் கங்கநாட்டு "சரவணபெள கொள" என்ற சமணத் தலைமை இடத்திலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலாகவே சமணர்கள் வந்துள்ளனர். அவர்களில் திகம்பரர்களான துறவிகள் மலைக் குகைகளிலும் பாழி களிலும் தங்கியுள்ளனர். அவர்கட்கு ஆதரவு செய்த தமிழ்த் தொண்டர்கள் சமணச் சமயக் கொள்கையினை ஏற்றுச் சாரணர் களாகச் சமயத் தொண்டு செய்துள்ளனர்.

இவ்வாறமைந்த நிலைமையில்தான் சித்தன்ன வாசல் பாழியில் வந்து தங்கிய சமணத்துறவியாகிய எருமி நாட்டுக் குமுழூர்

பிறந்த காவுடி ஈதெனன் என்பாருக்கு, அங்குச் சமயத்தொண்டாற்றியிருந்த இளையரெனும் சமணர்கள் கற்படுக்கை அமைத்துத் தந்துள்ளனர். அப்பணியாளராகிய சமணத் தொண்டர்களின் பெயர்களை, பிராமி கல்வெட்டினைத் தொடர்ந்து அக்கால வழக்கில் தமிழெழுத்துக்களுக்கிருந்த வரிவடிவ அமைப்பில் வெட்டியுள்ளனர்.

சமணத் துறவியரின் விருப்பப்படி, அவர் வழியே அறிந்திருந்த பிராமி எழுத்துக்களைக் கொண்ட தமிழ்ச் சொற்களால் பிராமி கல்வெட்டினைப் பெரிய எழுத்துக்களில் வெட்டியதுடன், தங்கள் பெயர்களையும் தாமறிந்திருந்த பழையதமிழ் எழுத்துக்களால் தொடர்ந்தே வெட்டி வைத்துள்ளனர்.

இவ்வாறு, உதவி இன்ன தென்பதுடன் பெற்றாரின் பெயரும் அதனைச் செய்தாரின் பெயரும் ஒன்றாகவே கல்வெட்டில் பொறிக்கப்பெறும் வழக்கம், சமணருக்குரிய கல்வெட்டுகளில் தொடர்ந்து வந்துள்ளன. இதனை,

> ''ஸ்ரீ அட்டோபவாஸி கனகவீரர்
> மாணாக்கர் அரிட்ட நேமிப்
> பெரியார் செய்த திருமேனி''
> (வட்டெழுத்து - ஐவர்மலை)

சித்தன்னவாசல் பாழியிலிருந்த இளையர் செய்தளித்த கற்படுக்கை என்பன போன்ற சமண சமய வளர்ச்சிக் காலங்களில் உண்டான கல்வெட்டுச் செய்திகளால் அறியலாகும்.

மாங்குளம் பிராமி கல்வெட்டுச் செய்தியால் செய்தார் பெயருடன் பெற்றார் பெயரும் ஒருங்கு செய்தியாகக் கல்லில் வெட்டப் பட்டுள்ளதனைக் காணலாகும். சித்தன்னவாசல் பாழியிலுள்ள சமணத் தொண்டர்களின் தமிழ் எழுத்துக்களாலான கல்வெட்டின் காலமும் அதே வரிசையிலுள்ள பிராமி கல்வெட்டின் காலமும் ஒரே காலத்தினைக் கொண்டதாகும். இக் காலம் கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டெனலாம்.

பாண்டிய நாட்டில் உள்ள மலைக் குகைகளிலுள்ள பிராமி கல்வெட்டுகள் அனைத்தும் பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி நிலவிய கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு மேல் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றியுள்ள கல்வெட்டுகளேயாகும்.

இக்கால அளவில், களப்பிரர் பாண்டிய நாட்டில் சமண சமய வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்துள்ளனர். வட புலத்திலிருந்து சமணத் துறவியரின் வருகையும் மிகுந்துள்ளது.

இவ்வாறு களப்பிரரின் ஆதரவினைப் பெற்றிருந்ததினாலேயே, தமிழகத்தில் பாண்டிய நாட்டளவில் சமணர் வாழ்ந்திருந்த மலைக் குகைத் தடங்களும், பிராமி கல்வெட்டுகளும் மிகுதியாகத் தோன்றியுள்ளன.

பாண்டிய நாட்டில் சமணரின் கல்வெட்டுகள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்திருந்ததோடு, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் கி-பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவிலும் தொடர்ந்துள்ளன.

இவ்வாறமைந்த காலக்கட்டத்தினை மூன்று வகையாகக் கொள்ள முடிகின்றது.

1. பிராமி எழுத்தறிவுடன், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளைக் கற்றிருந்த சமண முனிவர்கள் காலம் கி.பி. 3-6 நூற்றாண்டு.

2. பிராமி எழுத்தறிவுடன் பாண்டிய நாட்டுத் தமிழ் வட்டெழுத்து முறைகளையும் ஓரளவு அறிந்திருந்த சமணத் துறவிகள். காலம் - கி.பி. 6-9. நூற்றாண்டு.

3. தமிழகத்தில் பாண்டிய நாட்டில் வழிவழியாகத் தொடர்ந்த சமணரில் தமிழர்களும் சமயத்தை மேற் கொண்டு, வட்டெழுத்தும் - தெளிதமிழெழுத்தும் உணர்ந் தவராக இருந்தவர்கள் காலம் கி.பி. 9-13, நூற்றாண்டு வரையில்.

இவ்வாறான மொழியறிவுப் பாகுபாட்டுடன் சமண சமயம் தமிழகத்தில் தொடர்ந்திருந்ததினால், அவர்கள் காலங்களில் தோற்றுவித்த கல்வெட்டுகள் எழுத்து வகையில் மூன்று வகையாக வுள்ளதனைக் கல்வெட்டுகளால் காண முடிகின்றது.

1. பிராமி எழுத்தில் தமிழ்ச்சொற்கள்.

2. பிராமி எழுத்தும் வட்டெழுத்தும் கலந்த தமிழ் மொழி நடை. வட்டெழுத்து நடை.

3. வட்டெழுத்தாலும் தெளிதமிழெழுத்தாலும் கூடிய தமிழ் மொழி நடை (தனித்தமிழ் நடை) வரிவடிவில் ஒழுங்கு பட்ட தமிழ் எழுத்து முறை.

## தமிழகத்தில், பிராமி எழுத்துக்களில் கல்வெட்டுகள்

தமிழ்ச் சொல்லொலிகட்கு ஏற்ப இயன்ற பிராமி எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளதால், தென்னிந்திய பிராமி எழுத்துக்கள் என்று பெயர் சுட்டிய இப்பிராமி கல்வெட்டுகள், தமிழ்-பிராமி கல்வெட்டு கள் என்று பெயர் பெற்றுள்ளன.

1, மதுரை மாவட்டம் — அழகர் மலை

மத்திரைய் பொன் கொல்வான் அதான் அதான்
மாதவிரைகெ உபு வாணிகன்
வீயகான் காணதிகன்
ஸபமிதா ஈன் பொமித்தி
பாணித வாணிகன் நெடுமலான்
கொழு வணிகன் எளசாந்தன்
ஞ்சி கழுமாறன் தான்,
தார அணிச கொடுபிதா அவன்.
காஸபின் அதவீர அ...
அவரும் கு டு பி தொ—
வெண்பளி ஈ அறுவை வணிகன் இள அ அடன்

2. மதுரை மாவட்டம்—ஆனைமலை. (குகை)

ஈ வ குன்றது உறையுள் பாதந்தான்,
அத்து வாயி அரட்ட காயிபன்.

3. மதுரை மாவட்டம்—கருங்காலக்குடி. (குகை)

எழைய் ஊர் ஆரிதின் பாளி

4. மதுரை மாவட்டம்—கீழவளவு (குகை)

உபா கொ அன் தொண்டு
லா வான் கொடு பாளி ஈ.

இக்கல்வெட்டில் - கொ, ன், தொ, ஆகிய பிராமி எழுத்துக்கள் தலைகீழாக வெட்டப்பட்டுள்ளன.

5. பாண்டிநாடு—குன்றக்குடி (குகைத்தளம்)

...பிஊரா ஆதன் சாத்தான்
...குடு......தா...

6. மதுரை மாவட்டம்—கொங்கர்புளியகுளம் (குகை)

குற கொடு பிதா வான்
ஊ பா சாஅன் ஊ பா றுவ
குற கொடில குஈத்தாவான் சொற அதான் என்

பாகான் ஊர் பெதாதன் பிடான் ஈத்தா வெ பொன், ன்

இக் கல்வெட்டில், 3,4, ஆம் வரியின் இறுதியில் 

என்றஅடையாள எழுத்துக்கள் உள்ளன,

7. பாண்டியநாடு—சித்தன்னவாசல் மலை.(குகை)

எ ரு மி நாடு குழம் ஊர் பிறாந்தா
கா வு டி ஈ ஞன்கு சிறு பொசில்
ஈ ள ய ர் செய்தா அ அதிட் அனாம்

பழந்தமிழ் எழுத்தில் - கல்வெட்டு.

தொழக் குன்றத்துக் கடவுளன் திருநீலன்.
திருப் பூரணன்.
திருச் சாத்தன்.
திட்டைச் சாணன்.
ஸ்ரீ பூரண சந்திரன்.
நியத்திகரன்.
கிளக்கு கடவுள்.

8. பாண்டியநாடு—திருவாதவூர்—குன்று (குகைத்தளம்)

பாங்காடி அர் ஈதன் கொட்டுபிதோன்.
ஊ பாசன் பார அ கூ
ஊ றை கொட் டுபி தொன்.

9. மதுரை மாவட்டம்—திருப்பரங்குன்றம்(குகைத்தளம்)

எரு காடூர் ஈழ குடும்பிகன்
பொலா லா யன் செய்தா அய் சயன் நெடு வீரான்.
அந்துவான் கொடு பிதாவான்.

இக் கல்வெட்டில் 'செய்' என்ற இரண்டு எழுத்துக்கள் கூட்டெழுத்தாக வெட்டப்பட்டுள்ளன.

10, பாண்டியநாடு—பிள்ளையார்பட்டி.
(குன்றின் குடைவரைத்தளம்)

எரு காட் டூ ரு
க் கோன் பெருந்த (ச்) சன்

இக் கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் மிகப் பழைய வட்டெழுத்துக்களுக்குச் சான்றாகவுள்ளன. 'ட' எழுத்து தமிழ்ப் பிராமி எழுத்தாகப் பாண்டிய நாட்டு மலைக்குகைகளில் சமண சமயச் சார்புடையாரால் பின்பற்றப்பட்ட எழுத்தாகத் தோன்றுகிறது இக்குடைவரை கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில்

சிறிய வடிவில் குடையப்பட்ட குடைவரையாகவும், பாண்டிய நாட்டில் மலைத்தடங்களில் உளியால் வெட்டிக் குடைந்து சிறு கோயில்களைப் படைக்கும் முதல் முயற்சியாகவும், கல் தச்சன் முயன்று வெற்றி கண்டுள்ளதால், அவன் தனது பெயரை கல்வெட்டால் அறிமுகம் செய்துள்ளான். அவன், பாண்டிநாட்டு எருக்காட்டூரில் வாழும் கல்தச்சர்களின் தலைவனாக இருந்துள்ளானென்பதால் 'பெருந்தச்சன்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளான். இவ்வாறு குடையப்பட்ட மிகப்பழய குடவரை பிரான் மலையின் மேல் முகடொன்றில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

11. தென்பாண்டிநாடு—மாறுகால்தலை—குன்று (பாறைமுகப்பு)

வெண் காஸிபன் கொ டு பி த அ கல் கஞ்சணம்,

(கஞ்சணம்—அமருமிடம்)

12. மதுரைவட்டம், முத்துப்பட்டி உம்மணர்மலை (குகைத்தளம்)

சை அளன் விந்தை ஊர் காவிய்
நாக பெருர் அதை சாத்தன் மகன்
...தி... ககாத்தான் ம...ன ம...ய்.

மூன்றாம் வரி சிதைந்துளது.

13. மதுரைவட்டம் வரிச்சியூர்—குன்று. (குகைத்தளம்)

...ப ளி ஈ கொ டு பி......
...ட.........

சொற்கள் சிதைந்துள்ளன.

14. மதுரைவட்டம் உண்டாங்கல் குன்று. (விக்கிரமங்கலம்) (குகைத்தளம்)

அந்தைய் பிகான் மாகான் வொய் அதான்
பெ த லை குவிரன்
செ ங் கு விரன்
கு வி ராதன்
இ ம் ஊர் ச அதான் ஆதான்.

இக் கல்வெட்டில் பிராமி எழுத்துக்கள் பெரிய வடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. யகர மெய்யெழுத்துக்கள் அந்தைய்— என்ற சொல்லில் சிறிய வடிவிலும், வொய்அதான் என்ற சொல்லில் சிறிய வடிவிலும் உள்ளன. ம எழுத்துக்கள் மற்றை எழுத்துக்களைக் காட்டிலும் அகலத்தில் பெரிதாகவே உள்ளன. ஐந்தாவது வரியின் முதலெழுத்து இ என்ற வடிவமாக இருப்பினும் ஏ—என்றும் வாசிப்பதாகும்.

15. மதுரைக்கு வடக்கு மேலூர் வட்டத்திலுள்ள மீனாட்சிபுரம், மாங்குளம், அரிட்டாபட்டி ஆகிய ஊர்கள் சூழ்ந்த மலையின் நெடிய குகைத்தளத்திலுள்ள தென்னிந்திய பிராமியெனும் தமிழ்ப் பிராமி கல்வெட்டுகள்.

இம்மலையின் பழைய பெயர், கழுகுமலை, ஓவாமலை என்பன வாகும்.

பகுதி—1

*காணிய் நாந்தா அ ஸிரிய் ஈ*
*கு வ அன் கெ இம்மாம் ஈ*
*த்தா அ நெடுஞ்சாழியான்பா*
*ணா அன் கா டா லெ அன் வாழத்தி*
*ய்கொட்டுபித்தா அ பாளி ஈய்.*

பகுதி—2

*காணிய் நாந்தா ஸிரிய் கு அன்*
*இமாம் ஈதா நெடுஞ்சாழியான் பொலாகான்*
*ஈளஞ் சாடிகான் தாந்தைய் சடிகான்*
*செ ஈ யா பா ளி ய்.*

இக்கல்வெட்டில் இரண்டாம் வரியில் முதலெழுத்து இ-வடிவில் இருப்பினும் எ—என்றும் படிக்கலாம். பொலாகான் என்பதை பொலொகான் என்றும் படிக்கலாகும்.

பகுதி—3

*காணி ஈ நா தா ஸிரிய் கு வ*
*வெள் அறைய் நிகாமது*
*காவிதி ஈய் கழிதிகா அந்தை*
*அஸுதான் பிணா ஊகொடு பி தொன்.*

பகுதி—4

*சாந்தாரிதான் கொ டு பி தொ ன்*
*வெள் அறை நிகாமா தொர் கொடி ஓர்*

இக்கல்வெட்டுகளில் எழுத்துக்கள் பெரியதும் சிறியதுமாக வெட்டப்பட்டுள்ளன. வரிசை நிலை ஒழுங்கு பெறாமல் மேலும் கீழும் எழுத்துக்கள்உள்ளன. சில எழுத்துக்கள் ஆழப்பதிவாகவும் சில எழுத்துக்கள் மேலோட்டமாகவும் வெட்டப்பட்டுள்ளன.

16: திருச்சி மாவட்டம் கருவூரிற்கு வடக்கே உள்ள புகளூர் ஆறு நாட்டான் மலைக்குகைகளிலுள்ள தென்னிந்திய பிராமி யெனும்தமிழ் பிராமி எழுத்துக்களிலுள்ள கல்வெட்டுகள்.

தென்புறக்குகை—கல்வெட்டு. (பகுதி—1)

தா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கொன் மகன் ளங்
கடுங் கோ ளங் கோ ஆக அறுத்த கல்.

(பகுதி—2)

...மண்......யாற்று செங்கா
கா ஆ......ல்லிரு மபுதை மகன் பெருங்
கடுங்கோன் மகன் ளங்கடுங்
கடுங்கோ ஆக அறுபித கல்

(பகுதி —3)

நல்லிபா ஊர் அபடந்தை மகள் கீரன்கொற்றி.
நல்லி ஊர் அபடன் குறும்மகள்
கீரன் கொற்றி செய் பித பளி.

(பகுதி—4)

கரு ஊர் பொன் வாணிகன்
நத்தி அதிட்டானம்
ளாகன் மகன் ஈளங்கிரன்

கல்வெட்டுக் கருத்தரங்கு—ஆய்வுரைகள் தொகுப்பு நூல், பக்கம் 75—76 - ல் உள்ள கல்லெழுத்து மூலத்தின் படி வாசகங்கள் தரப்பட்டுள்ளன. (புகளூர்)

17 கொங்குநாடு - அரச்சலூர், மலை (குகைத்தளம்)

1,

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

2.

| | | | | |
|---|---|---|---|---|
| கை | த | தை | த | கை |
| த | தை | த | தை | த |
| தை | த | தை | த | தை |
| த | தை | த | தை | த |
| கை | த | தை | த | கை |

3. மத்திய கல்வெட்டாய்வினர் படித்துள்ளபடி;

"எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்."

இரண்டு வரிகளிலுள்ள இக்கல்வெட்டினை,

"எழுத்தும் புணர்த்தான் மணிய
வண்ணக்கன் ஆதன் சாத்தன்"

என்று தி. நா. இராமச்சந்திரன் படித்துள்ளார்.

பேராசிரியர் மகாலிங்கம் இம்மலை சமணராகிய ஆசீவகர் வாழ்ந்த இடம் என்பதைக் கொண்டு

'சித்தம் தீத்தம் பூண தத்தான்'

என்று படித்தறிவித்ததுடன், 'தவம் பூண தேவன் சாத்தன் இதை அளித்தான்' என்றும் விளக்கம் தந்துள்ளார்.

ஐ. மகாதேவன்,

'ஏழு தானம் பண்வித்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்'

எனப் படித்துள்ளார். இதற்குப் பொருள் விளக்கமாக, "மணிகளைச் சோதிக்கும் தேவன் சாத்தன் ஏழு படுக்கைகளைச் செய்தளித்தான்" என்றும் கூறியுள்ளார்.

மத்திய கல்வெட்டு ஆய்வுத் துறையினர் முன்னர் குறித்தபடி படித்துள்ளனர். இவ்வாறு, தமிழ்ப்பிராமி எழுத்துக்களும் தமிழ் வட்டெழுத்தும் கலந்துள்ள இவ்விரண்டு வரிக் கல்வெட்டினை, நான்கு வகையில் படித்து வெளியிட்டுள்ளனர்.

தமிழ்ப் பிராமி கல்வெட்டுகள் தமிழ் நாட்டில் பதினேழுக்கும் மேற்பட்ட மலைத் தடங்களில் கிடைத்துள்ளன. அவற்றுள் பதினைந்து கல்வெட்டுகள் பாண்டிய நாட்டில் உள்ளன. இரண்டு கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் உள்ளன.

தமிழ் நாட்டில் மலைக் குகைத் தடங்களில் அங்குத் தங்கியிருந்த சமண சமயத்தவர் தமிழ்ச் சொற்களைப் பிராமி எழுத்துக்களைக் கொண்டும், தமிழுக்கே உரியதாக அக்காலத்தில் வழங்கப் பட்ட எழுத்துக்களைத் தேவையான இடத்தில் சேர்த்துக் கொண்டும் கல்வெட்டுகளின் வழியே தாம் கருதிய செய்தியினைப் புலப்படுத்தியுள்ளதால், முன்னோர் தென்னிந்திய பிராமியென்றும், தமிழ்ப் பிராமி என்றும் இவ்வெழுத்துக்களுக்குப் பெயரிட்டுள்ளனர்.

தென்னிந்திய பிராமி என்ற பெயர், தென்னிந்தியாவில் பழங் காலத்தில் சிறப்பாக வழங்கப்பட்ட கன்னடம், தெலுங்கு (வடுகு), தமிழ் ஆகிய மொழிகளின் சொற்களைப் பிராமி எழுத்துக்களில் எழுத முயன்றுள்ளதால் பெற்ற பெயரெனலாம். தமிழ் நாட்டில் கிடைத்துள்ள பிராமி கல்லெழுத்துக்களில் பெரும்பான்மை தமிழ்ச் சொல்லொலிகளைப் பெற்றிருப்பதால் ஆய்வாளர்கள் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் என்று பெயரி குறித்துள்ளனர்.

## பிராமி எழுத்தில் தமிழ்ச் சொற்கள்

இவ்வாறானதும் முன்னர் காட்டப்பட்டுள்ளவைகளான பிராமி கல்வெட்டுகளில் உள்ள சொற்களின் வடிவினையும் திரிபான ஒலி நிலைகளையும், சொற்களின் முதல் இடை கடை ஆகிய பகுதிகளின் எழுத்துச் சேர்க்கைகளையும் உள்ளவாறு காண்போம்,

1. மத்திரைய்
   மாதவிரைகே
   உபு வாணிகன்
   எள சாத்தன்
   அணி ஈ
   கொடுபீதா அவன்
   குடுபிதொன்
   வெண்பளி ஈ
   தார அணி ஈ
   இளஅஅடன்
2. ஈவ
   குன்றது
   காயிபன்
3. எழை ஊர்
   பாளி
4. பாளி ஈ
5. ஊரா ஆதன்
6. கொடுபிதாவான்
   உபாசா அன்
   ஈத்தாவான்
   பாகன் ஊர்
   ஈத்தா
7. குமுழ் ஊர்
   பிறந்தா
   காவுடி
   ஈஞன்கு
   ஈளயர்
   செய்தா அ
   அதிட் அனாம்
8. அர் ஈதன்
   கொட்டுபிதொன்
   அரூ உறை
9. காடூர்
   செய்தா
   அய்சயன்
   கொடுபிதாவான்
10. காட்டூரு
11. கொடுபித அ
12. சை அளன்
    விந்தை ஊர்
    காவிய்
13. பளி ஈ
    கொடுபி
14. இம் ஊர்

| | |
|---|---|
| ச அதான் | காணி ஈ |
| 15. காணிய் | நாதா |
| நாந்தா அ | வெள் அறைய் |
| ஸிரிய் ஈ | நிகாமது |
| குவ அன்கே | காவிதி ஈய் |
| இம்மாம் | பிணா ஊ |
| ஈத்தா அ | 16. தா அமண்ணன் |
| நெடுஞ்சாழியான் | உறைய் |
| பாணா அன் | ளங்கடுங்கோ |
| வாழுத்திய் | ளங்கோ |
| கொட்டுபித்தா அ | அறுத்த கல் |
| பாளி ஈய் | நல்லிபா ஊரி |
| இமாம் | அபடந்தை |
| சளஞ்சாடிகான் | செய்பித |
| தாந்தைய் | பளி |
| சடிகான் | கரு ஊரி |
| செ ஈயா | ணாகன் மகன் |
| பாளிய் | ஈளங் கீரன் |

இவ்வாறு தென்னிந்திய பிராமி எழுத்துக்களாலும் வட்டெழுத்தோடு கூடிய தமிழ்ப் பிராமி எழுத்துக்களாகவும் சமண சமயச் சார்பில் தமிழகத்திலும் அதன் வடபுறத்திலும் உள்ள மலைக் குகைத் தடங்களில் மட்டும் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுச் சொற்களின் அமைப்பினைப் பற்றிய ஒரு சில செய்திகளைக் காணலாகும்.

முதலாவதாகச் சமணர் தங்கியிருந்த குகைத் தடத்தில், அவர்கள் அமர்வதற்கும் படுப்பதற்கும் ஓரளவு பொருந்தியதாகப் பாறைத் தளத்தில் நீண்ட சதுரவடிவில் ஒன்று அல்லது இரண்டு விரற்கடைக் குழிப்புள்ளதாகவும் மேடுபள்ளமின்றிச் சமன் செய்யப்பட்டதாகவும் உளியால் கல்தச்சு முறையில், செய்யப்பட்டதாகவும் உள்ள கற்படுக்கைத் தளங்களையே 'பாளி' என்று குறிப்பிட்டுள்ளனர். இப்பாளி என்ற பெயர்ச் சொல், மேலே கண்ட கல்வெட்டுகளில்,

| | | |
|---|---|---|
| புகளூர் | — | பளி |
| கருங்காலக்குடி | — | பாளி |
| கிழவளவு, அழகர் மலை | — | பாளி ஈ |
| மாங்குளம் | — | பாளிச, பாளிசய் |

என்றெலாம் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் மொழியின் ஈற்றிற்குரிய ளி - யோடு. ஈ. என்பதும் ஈய் என்பதும் நீட்டொலிகளாக உள்ளன.

சொல்லின் இறுதியாக உயிர் மெய் அளவில் நின்ற எழுத்துக்களைச் சார்ந்து அ, ஆ, இ, ஈ, ஐ - ஆகிய எழுத்தொலிகள் தொடர்ந்துள்ளன.

பாளிஈ, காணிஈ, ஸிரிய்ஈ, ஸபமிதாஈ,
தார அணிஈ, வெண்பளிஈ, பாளிஈய்,

என்றவாறு சொல்லில் எழுத்துக்கள் இறுதியில் தொடர்ந்துள்ளன.

காணிய், காணிஈ, பாளிஈய் என்றெலாம் சொல்லப்பட்டுள்ள மொழி நிலைக்கு, தொல்காப்பியம் மொழிமரபு தரும் இலக்கணமாகிய,

"இகர யகரம் இறுதி விரவும்"

என்னும் நூற்பாவால் அமைதி காணவியலவில்லை. போலி நிலையில் விகாரித்து வரும் மொழியிறுதிக்குப் பாளிஈய் எவ்வாறு பொருந்தும், எழுத்தின் மேல் எழுத்து போலி நிலை பெறுதல் தமிழில் மரபில்லை. உரை எழுதிய நச்சினார்க்கினியர், "இகரமும் யகரமும் ஒரு மொழியின் இறுதிக்கண் ஓசை விரவி வரும், அவ்விகாரம் கொள்ளற்க" என்று கூறியுள்ளார். எனவே இவ்வாறு மொழியிறுதி பெறுதல் எவ்வாற்றானும் தமிழ் மரபுக்கு இல்லை.

மற்றும் இப்பிராமி கல்வெட்டுகளில் சொல்லப்பட்டுள்ள ஊர்ப்பெயர்களில், உயிர்மெய்யெழுத்தாகவும், உடம்படுமெய்யெழுத்தாகவும் பெற்று வர வேண்டிய எழுத்து முறையினின்றும் மாறுபட்ட நிலையில் ஊர் என்பது மொழியிறுதியில் முழுவடிவில் உள்ளன.

| | |
|---|---|
| பாகன் ஊர் - | இம் ஊர் |
| எழை ஊர் | நல்லியா ஊர் |
| விந்தை ஊர் | |

ஊ - உள்ள இடத்தில் முறையே, னூ, யூ, யூ, இவ்வூர், வூ. என்ற எழுத்துக்கள் எழுதப்படாமல் தனிச் சொற்களாக ஊர் என்று உள்ளது. இம்மரபு தமிழ் இலக்கண மரபிலில்லை.

அகர ஈற்றொலி பெற்றுத் தமிழ்ச்சொற்கள் உண்டாகும். ஆனால் இப்பிராமிச் சொற்களில் சொல் இறுதியில் அகரம் எழுதப்பட்டுளது.

அதவிர அ கொடுபிதா அ
இள அ

பெயர்ச் சொல்லில் தலைப்பகுதி இல்லாத சொற்களாக,

மகன்ளங்கீரன் (இளங்கீரன்)
ளங்கடுங்கோ (இளங்கடுங்கோ)
ளங்கோ (இளங்கோ)

இவ்வாறன வந்துள்ளன. மொழியறியாதார் செய்யும் எழுத்துப் பிழையாக இவற்றைக் கருதமுடிகின்றது.

மொழியறியா குறைக்கு இலக்காக அன் விகுதி தனித்தே எழுதப்பட்ட திரி சொற்கள் இப்பிராமிக் கல்லெழுத்துக்களில் மாறாமல் ஒன்று போல் உள்ளன.

பாணா அன் காடாலெ அன்
உபாகோ அன் காடில அன்
உபாசா அன்

மேலும் இப்பிராமி கல்வெட்டுகளில் கன்னடம், தெலுங்கு (வடுகு) ஆகிய மொழிச் சொற்கள் வழக்கில் ஒலிக்கும் அ, ஆ, ஊ, ஈ, கு, ஈய், என்ற எழுத்தொலிகளைக் கொண்ட சொற்கள் பலவாக இடம் பெற்றுள்ளன. அவை;

ஈவ பாளி ஈய்
இந்தா காட்டூரு
ஈத்தா ஈளுன் கு
கொட்டு அன்கே

என்பனவாகும்.

இவ்வாறாக, பிழையான சொல்லும் தொடரும் உள்ளதுடன், செய்தியினை அரை குறையாகத் தெரிவிப்பனவாகவுள்ளதுமான இத் தமிழ் - பிராமி கல்வெட்டுகளைப் பற்றி தெரிவிப்பதாயின்

1. எழுத்துப் பிழைகளோடு சொற்கள் பெரும்பான்மையும் உள்ளன.
2. வடிவமைப்பில் எழுத்துக்கள் ஒன்று போல் இல்லை.
3. ஒரெழுத்து வடிவில் பெரியதாக வெட்டப்பட்டு அடுத்த எழுத்து அதனடியில் குன்றிய வடிவில் வெட்டப்பட்டுள்ளது.
4. வரிசையாக, சொற்கள் அமையாமல் ஏற்றத்தாழ்வுடன் உள்ளன,

5. ச - வ, ல - ப, ந - ன ஆகிய எழுத்துக்கள் அடிப்படை வடிவில் ஒன்று போல் இருப்பதால் கல்லில் வெட்டும்போது மாற்றம் பெற்றுள்ளன. எனவே வேறுபட்ட தொடர்களாகப் படித்துள்ளனர்,

6. நி - னி எழுத்துக்களின் தலைப்பில் பெறும் கோடு திரிபான வடிவங்களில் உள்ளன.

7. இ - எ. எழுத்துக்களுக்கு ஒரே மாதிரியான வடிவங்களே கையாளப்பட்டுளது.

8. ண - எழுத்து பல்வேறுபட்ட வடிவங்களில் உள்ளன.

9. விரும்பிய கருத்தினைத் தெரிந்த பிராமி எழுத்துக்களால் சொற்களாகப் படைத்துள்ளனர்.

10. மொழி நிலையில் விரும்பியபடிச் சொற்களுக்கு எழுத்துக் களைச் சேர்த்துள்ளதால், தமிழ் இலக்கண மரபினைக் கொண்டு வலிந்து இயைபு காணுதற்குத் தேவையில்லாத நிலையில் உள்ளன.

என்ற கருத்துகளைக் கூறுதற்குரியதாகவே இக்கல்லெழுத்துக்கள் உள்ளன.

மற்றும், அரச்சலூரில் உள்ள நடன அடைவு எழுத்துக்களைக் காட்டும் கல்வெட்டின் மூன்றாம் பகுதியாகவுள்ளதும் இருபத்தேழு பிராமி எழுத்துக்களால் இரண்டுவரியில் உள்ளதுமான கல்வெட்டுக் குரிய வாசகத்தினை நால்வர் நான்கு வகையாகப் படித்துள்ளனர். இவ்வாறு அரைகுறையும் திரிபுமயக்கும் கொண்ட தென்னகப் பிராமி குகைக் கல்லெழுத்துக்கள், பழமையில் மிகுந்துள்ளதும் சங்கங்கள் நிறுவி பலதுறைகளில் வளர்ச்சியினைப் பெற்று, ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நிலையிலிருந்து மக்கள் வழக்கில் தொடர்ந்ததுமான தமிழ் மொழிக்குரிய எழுத்து வரிவடிவங்கட்கு முதலாக இருக்க முடியுமா என்பதை அறிஞர்கள் சிந்திக்க வேண்டும்.

இவற்றுள் ஈ, ஈவ. என்பது தெலுங்கு கன்னட சொற்களில் கொடு, கொடுத்த என்பதற்காகும்.

கொட்டு, கொட்டுபித்த என்பது அடித்த, அடிப்பித்த என்ற பொருள்களில் வருவனவாகும். இவ்வாறான சொற்கள் கன்னட வடுகு மொழிகளுக்குரியவைகளாகும்.

காட்டுரு, அன்கே, ஈஞன்கு, என்ற உ, ஏ இறுதி ஒலி சொற்களும் மேலேகண்ட மொழிகள் வழக்கில் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சொற்களைக் கொண்டதும் தமிழகத்தில் உள்ளனவுமான பிராமி கல்வெட்டுகளைக் கொண்டு அவற்றிற் கமைந்துள்ள மொழி நிலைகளை ஆய்ந்து அறிதல் வேண்டும்.

இது வரையில் இவ்வாறான தென்னிந்திய பிராமி எழுத்துக் களாலான குகைக் கல்வெட்டுகளைப் பற்றி அறிஞர் பலர் கூறி யுள்ள கருத்துக்களில் சிலவற்றைக் காண்பது இன்றியமை யாததாகும்.

## பிராமி எழுத்து பற்றிய கருத்துரைகள்

''இன்றைக்கு வழக்கில் உள்ள தமிழ் எழுத்தின் பழைய வடிவத் தைத்தான் 'தமிழி' எழுத்து என்கிறோம். சங்ககால நூல்கள் அனைத்தும் இந்த எழுத்தில்தான் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும்.''

'தமிழி எழுத்தை முன்பெல்லாம் தென் இந்திய பிராமி என்று அழைத்தனர்.'

''தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களான ழ, ள, ற ன, ஆகிய நான்கு எழுத்துக்களையும் பெற்றிருக்கிறது. இந்த வகையில் இவ்வெழுத்து அசோகன் காலத்திய பிராமி எழுத்தில் இருந்து வேறுபடுகிறது.''

''தமிழெழுத்தின் பழமைக்கு மற்றொரு காரணத்தையும் கூறலாம். தமிழகத்து மலைக் குகைகளில் காணப்பெறும் கல்வெட்டுக்கள் அனைத்தும் (மாங்குளம், புகளூர், கல்வெட்டைத் தவிர) ஓரிரு வரிகளிலேயே காணப்படுகின்றன.''

''அவைகளின் மொழிகூட நல்ல வளர்ச்சி யடைந்த ஒன்றாகத் தெரியவில்லை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து, கி.பி. மூன்றாம் நூற்றாண்டெனச் சங்க காலத்தைக் குறிப்பிடுகின்றனர். சங்க காலத்து இலக்கியங்களில் ஒரு பண்பட்ட மொழி நடையை நாம் காண முடிகிறது.''

"ஆனால் மாங்குளம் போன்ற கல்வெட்டுகளில் பயிலப் பட்டுள்ள சொற்றொடர் வளர்ச்சியடைந்த ஒன்றாகத் தெரிய வில்லை. தொடக்க கட்டத்தில் உள்ளதாகவே தோன்றுகிறது. (கல்லெழுத்துக்கலை - நடன காசிநாதன், பக். 4 - 5)

இவ்வெழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியில் இருவேறு வடிவான எழுத்துக்கள் உருவாகின்றன. ஒன்று நேர்க்கோடுகள் அப்படியே இருக்கபடுக்கைக் கோடுகள்மட்டும் வளைந்து வளர்வது. இரண்டாவது, நேர்க் கோடுகளும் படுக்கைக் கோடுகளும் வளைந்து வளைந்து வளர்வது. இவ்வளர்ச்சி கி.பி. 1-2 - ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகிறது. கி.பி. 3-4 - ஆம் நூற்றாண்டளவில் ஒரு கட்டத்தை அடைகிறது. அப்பொழுது ஒருவகை எழுத்துக்குக் (வளைவு வளைவாக உள்ள எழுத்துக்கு) "கண்ணெழுத்து" என்று பெயர் வழங்கியிருக்கிறது, இந்த வகை எழுத்தில்தான் சிலம்பு, மணிமேகலை போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வெழுத்து மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதற்கு வட்டெழுத்து என்றும் பெயர். (கல்லெழுத்துக்கலை -நடன காசிநாதன் ப. 124)

"இது வரையில் கிடைத்துள்ள சான்றுகளின்படி 'தமிழி' எழுத்துக்கள்தான், தமிழ் மொழியின் தொன்மையான எழுத்து வடிவம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்."

'தமிழ் மொழிக்கு இக்காலத்திற்கு முன் வேறு வகையான எழுத்து வடிவம் இருந்திருக்கலாம்'. (தமிழ் வட்டெழுத்து— இரா. கிருஷ்ண மூர்த்தி).

"பிராமி வடிவங்களினின்று பினீசிய வடிவங்களும், பினீசிய வரிவடிவினின்று கிரேக்க உரோம வடிவங்களும், இவைகளினின்று பல ஐரோப்பிய வரிவடிவங்களும் பிறந்தன.

பிராமியினின்று வட்டெழுத்தும், அதினின்று இன்றைய தமிழ் வரிவடிவங்களும் ளளர்ச்சி பெற்றன," (அ. இராகவன் கல்வெட்டுக் கருத்தரங்கு)

"வட்டெழுத்து, பிராமியினின்று தோன்றிய வரிவடிவம் என்று கூறுவதற்கில்லை. பிராமிக்கு மூலாதாரமாக விளங்கிய பினீசிய எழுத்தினின்று நேராகத் தமிழர்கள் தங்களின் வரிவடிவங்களை அமைத்துள்ளார்கள்."

"ஆரியர்கள் பாரத நாட்டில் அடியெடுத்து வைப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தமிழர்கள் தங்கள் மொழிக்கு வரிவடி

வத்தை உருவாக்கி விட்டனர். எனவே அது பிராமியின் வழிவந்த வரிவடிவமாக இருக்க முடியாது.''

(ஏ. சி. பர்னல் தென்னிந்திய எழுத்துக்கள்)

''சங்க காலத்திலே தமிழர்கள் எழுதக்கற்றிருந்தனர். எழுத்து என்னும் தமிழ்ப்பதம் எழுது என்ற வினையின் அடியாகப் பிறந்தது. ஆதியில் தமிழர்கள் தங்கள் மொழிக்கேற்ப வரிவடிவங் களைச் சித்திரக் குறியீடுகளினின்று கண்டு அதற்கு எழுத்து என்ற பெயரைச் சூட்டினர்''. (அ. இராகவன்)

''தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்தது
பிராமியாக இருக்கலாம்''

(தி. நா, சுப்பிரமணியம். கல்வெட்டுக் கருத்தரங்கு. ப. 49)

புதுவையை அடுத்த அரிக்கமேட்டில் கிடைத்துள்ள பழைய பானை ஓடுகளிலுள்ள எழுத்துக்கள் பிராமி மொழியினுடையது என்பர்.

பிராமி மொழி எழுத்துக்கள் எனப்படும் அந்தக் கல்வெட்டு களில் உள்ள எழுத்துக்கள், தமிழ் வடிவ எழுத்துக்களே என்று உறுதிப்படுத்துகின்றனர்.

அறிஞர்கள் அந்த எழுத்துக்களை 'தாமிளி' என்றும், 'தாமிழி' என்றும் குறிப்பிட்டனர். இப்போது 'தமிழி' எழுத்துக்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

(வெ. சுந்தரம், கல்சொல்லும் கதை - ப. 29.)

இவ்வாறான பல்வேறுபட்ட கருத்துக்களை அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர்.

இவற்றைக் கொண்டு சிந்திப்போமாயின் தென்னிந்திய பிராமி யெனும் தமிழ் - பிராமி எழுத்துக்களைக் கொண்ட கல்வெட்டு களால் இரண்டு கொள்கைகள் தெரிகின்றன. அவற்றுள் ஒன்று :

1. அசோக மன்னனால் வட இந்தியாவில் கையாளப்பட்ட பிராமி எழுத்துக்கள், கால வளர்ச்சியில், தென்னாட்டிற்குச் சமயச் சார்பில் வந்த சமணர்களால் திரிந்த வடிவுடையதாகி, பின்னர் வட்டெழுத்தாகத் தொடர்ந்து தமிழெழுத்தாக மாறி யுள்ளது என்பதாம்.

2. சமணர்களால் பிராமி எழுத்துக்களில் தமிழகத்தில் சிறப்பாகப் பாண்டிய நாட்டு மலைக் குகைகளில் தமிழ்ச் சொற்கள்

படைக்கப்பட்டு, கல்வெட்டுகள் தோன்றுவதற்கு முன்னரே தமிழுக்கென்று ஏதோவொரு வடிவெழுத்துக்கள் வழக்கில் இருந்த தென்பதும், அவ்வெழுத்து முறையே வளர்ச்சிபெற்ற நிலையில் கண்ணெழுத்தென்று பெயர் பெற்ற பின்னர் வட்டெழுத்தென்று பெயர் பெற்றுளது என்றும், அவ்வெழுத்து முறையே தெளிவான எழுத்து முறையாக வளர்ச்சி பெற்று வந்துளது என்பதும் அறியப்பெறுகின்றது.

இவற்றால், பிராமி எழுத்துக்களே தமிழுக்குத் தாய் எழுத்துக் களாகி வரிவடிவம் தந்துள்ளன என்ற கருத்தும்,

பிராமிக்கு முன்னரே தமிழகத்தில் தமிழ் மொழிக்கிருந்த எழுத்து வரிவடிவங்களே கால வளர்ச்சியில் தேவைகட்கேற்ப திருந்திய வடிவில் உருவாக்கம் பெற்றுள்ளன என்ற கருத்தும், மாறுபடு நிலையில் பெறப்படுகின்றன.

## தமிழ் வட்டெழுத்து வரலாறு

தமிழெழுத்துக்களில் தொன்மையான எழுத்துக்களாகக் காணப்பெறுவது வட்டெழுத்துக்களாகும். வட்டெழுத்துக்கள் பாண்டிய நாட்டில் சிறப்புடன் வழக்கில் இருந்துள்ளது என்பது பழைய செய்தியாகியுளது. இவ்வெழுத்துக்களில் பழமையான கல்வெட்டுகள் தமிழகத்தின் வடக்குப்புறமாகும் வடஆற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் கிடைத் துள்ளன. அவை, கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரியவை என்று குறிப்பிடுகின்றனர்.

இதுவரையில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டதாகக் கூறப் பெற்ற கல்வெட்டு, செஞ்சிக்கு அருகிலுள்ள திருநாதர்குன்று என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டாகும். இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டென்று கருதப்பட்டது. இதுபோது செஞ்சிக்கு வடக்கே தருமபுரி மாவட்டத்தில் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. தமிழகத்தின் வடபகுதியாகும் கன்னடம் தெலுங்கு ஆகிய மொழிகள் நிலவும் பகுதிகளினிடையே பழமை யான வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. மற்றும், வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, கோவை, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளிலும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன.

பல்லவர் ஆட்சியில் தொண்டை மண்டலத்தில் வட்டெழுத்து வழக்கில் இருந்துள்ளதனைக் கிடைத்துள்ள கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது. எனவே, கிடைத்துள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகளால், கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் வடக்கே தருமபுரி முதலாகத் தெற்கே கன்னியாகுமரி வரையில் வட்டெழுத்து வழக்கில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

இவ்வெழுத்துக்கள் வளைந்த கோடுகளின் வடிவமைப்பில் எழுதப்பட்டுள்ளதால் வட்டெழுத்து என்று குறிப்பிடப்பட்டுளது. இது 'வட்டம்' என்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுளது.

தென்காசியைச் சார்ந்த திருக்குற்றாலநாதர் கோயில் கல்வெட்டொன்றில்,

''வட்டம் நீங்கலாக மற்றெல்லா கல்வெட்டுகளும்''
என்ற செய்தியால் இப்பெயர் அறியப்பெறுகின்றது.

வட்டெழுத்துக்களைப் பற்றி பல கருத்துகள் இதுவரையில் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் சில :

'வட்டெழுத்து பிராமி எழுத்திலிருந்தே வளர்ச்சி அடைந்தது' (கோபிநாதராவ்)

''வடமொழிக்கு வரிவடிவு ஏற்படுவதற்கு முன்னரே வட்டெழுத்து வழக்கிலிருந்ததால் பிராம்மியிலிருந்து வட்டெழுத்து வளர்ந்தது என்னும் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததாகும்'' (பர்னல்)

'வட்டெழுத்து தமிழியினுடைய (தென்னிந்திய பிராமி) ஒரு மாறுபட்ட வடிவம்தான்' (பூலர்)

''இக்கருத்துக்கள் அனைத்தும் எழுத்தாராய்ச்சித் தொடக்க நிலையில் இருந்தபோது தெரிவிக்கப்பட்ட கருத்துகள்''
(கல்வெட்டியல்—இரா. நாகசாமி)

வட்டெழுத்தைப் பற்றி இவ்வாறான கருத்துகள் நிலவுவதால், வட்டெழுத்தின் பழைய நிலை என்ன என்பது பற்றியும், அதன் சார்பில் வளர்ந்த தெளிவான தமிழ் எழுத்துக்களைப் பற்றியும் அறிதல் இன்றியமையாததாகும்.

1. வடஆற்காடு மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட நடுகற்கள், தருமபுரி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழமையான நடுகற்கள் ஆகியவற்றில் பிராமி எழுத்துக்களோடு வட்டெழுத்தும் கலந்த தமிழ்ச் சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

2. பல்லவர் ஆட்சிக்காலங்களில் தோன்றியுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்தாலான சொற்கள்கலந்துள்ளன.

3. பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட வட்டெழுத்துச் சாசனங்கள் அனைத்தும் நல்ல தமிழ்ச் சொற்றொடர்களில், இலக்கண அமைதிபெற்ற நிலையில் உள்ளன.

4. சோழநாட்டில் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் காணப் பெறவில்லை.

5. சேரநாடாகும் கேரளத்தில் தொன்று தொட்டு தமிழ் வட்டெழுத்துக்கள் நாட்டிலும் ஏட்டிலும் சிறந்த முறையில் வழக்கில் இருந்துள்ளன, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் அவ்வெழுத்து முறை திரிந்து பின்னர் புதியதொரு எழுத்து முறை நடைமுறைக்கு வந்துளது.

இவ்வாறாகத் தமிழகப் பகுதிகளில் வட்டெழுத்து பிறமொழிக்குரிய எழுத்துக்களோடு கலந்த நிலையிலும் திரிந்த நிலையிலும் தனித்தும் காணப்படுவதின் காரணத்தினைக் காண்பது இன்றியமையாததாகும்.

தமிழகத்தின் வடபகுதியில் வட்டெழுத்தோடு திரிந்த பிராமி எழுத்துக்கள் கலந்திருப்பது, அசோகனுடைய முயற்சியால் அப்பகுதியளவும், கன்னடம் தெலுங்கு நாடுகளில் பிராமி எழுத்துக்கள் பரவலாகக் குருமார்களாலும், வைதிக நெறியாளர்களாலும் கையாளப்பட்டு, நாளடைவில் திரிந்த நிலையில் தென்னிந்திய பிராமி என்ற பெயருக்குரியதாக இருந்துளது. பிராமி எழுத்துக்களை அறிந்திருந்த அவர்கள், ஈமச்சின்னமாகிய நடுகற்களில் பொறிப்பதற்குரியதாக தமிழ்ச் சொற்களில் எழுதியளித்த செய்திகளாகவே உள்ளன.

பிராமி வட்டெழுத்து ஆகிய இரண்டெழுத்தும் கலந்த சொற்களை உடைய கல்வெட்டுகள் நடுகற்களிலேயே கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொங்கு நாட்டில் அரச்சலூர் நாகமலை குகைத்தளத்தில் உள்ள நட்டுவாங்க அடைவுக்குரிய எழுத்து அமைதிகளைக் குறிக்கும் கல்வெட்டுகளிலும் பிராமியும் வட்டும் கலந்துள்ளன. இரா. நாகசாமி இக்கல்வெட்டின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பர்.

இதனால் வட்டெழுத்து வழங்கப்பட்ட கொங்கு நாட்டின் வட பகுதியில் பிராமி எழுத்தறிவு பெற்றிருந்தவர்கள் தமிழ்ச் சொல் வடிவங்களுக்கு வட்டெழுத்தினைக் கையாண்டுள்ள எழுத்து முயற்சி புலப்படுகின்றது.

பல்லவர் ஆட்சியில் வட்டெழுத்துடன் கிரந்தமும் கலந்து சொற்கள் படைக்கப்பட்டிருப்பது, பல்லவர் சமஸ்கிருதத்தினைப் பேசியும் எழுதியும் வந்ததோடு, தமிழ்நாட்டில் அவர்கள் ஆட்சி நிலவியபோது, தமிழ்மொழி வழக்கிற்கேற்ப வடமொழி சொற்களைப் படைப்பதற்குக் கிரந்த எழுத்துக்களைக் கையாண்ட செயலேயாகுமென்று கருதமுடிகின்றது.

பாண்டிய நாடு செந்தமிழ் நாடாதலின் அந்நாட்டில் தமிழுக்குரிய வரிவடிவு வட்டெழுத்தாகவே தொடர்ந்ததால், வட்டெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் தமிழ் இலக்கிய இலக்கண மரபுகளில் பிழையில்லாமல் உள்ளன என்பதைக் காணமுடிகின்றது.

சேரநாட்டில் பண்டைக் காலம் முதலாகத்தமிழ் மொழிக் கமைந்த வட்டெழுத்துக்களாலமைந்த எழுத்து முறையொன்றே வழக்கில் தொடர்ந்துள்ளது. சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் வட்டெழுதுக்களாலேயே படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழகத்தின் தமிழ் மொழிவழக்கில் உயர்ந்திருந்த சேரநாட்டில், வட்டெழுத்தினையே வரிவடிவிற்குரியதாகக் கொண்டிருந்த காலத்தினைத் தொடர்ந்த காலங்களில் தமிழ் சமஸ்கிருத மொழியாளர்களின் வளர்ச்சியும், கிரந்த எழுத்துக் களைப் பின்பற்றும் செயல்களும், சமய வளர்ச்சியும் வேதாகம நெறிகள் சமுதாயத்தில் ஊடுருவி ஆட்சிவழிப் பரவிய விளைவும் இன்ன பலவும் இணைய, காலச் சூழலால் திரிந்து தனிமொழி போன்று ஆகியுள்ளது.

இவ்வாறான தமிழ் வட்டெழுத்து பற்றிய வரலாற்றுச் செய்திகளால் கி. பி. இரண்டு மூன்றாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் வட்டெழுத்து முறை வழக்கில் இருந்துள்ளமை புலப்படுகின்றது.

இக்காலம், பழந்தமிழ் நாடாகிய குமரி நாட்டுப் பழையன் வழிப் பாண்டியரின் தோன்றலாகிய முடத்திருமாறன் வையைக் கரை மதுரையில் நிறுவி செயல்படுத்திய மூன்றாம் தமிழ்ச் சங்க மெனும் கடைச்சங்க காலத்தினைச் சார்ந்த காலமேயாகும்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் வட்டெழுத்து தமிழகத்தின் வடபால் இருந்ததற்குச் சான்றாகக் கல்வெட்டுகள் கிடைத்திருப்பதால், தென்பகுதியில் பாண்டியநாட்டில் தெளிவான முறையில் வட்டெழுத்து தமிழ் வழக்கில் இருந்திருக்க வேண்டுமென்று கருத முடிகின்றது.

எனவே, கி. பி. இரண்டு மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலங்களிலும் தமிழ்மொழிக்கு வட்டெழுத்து முறையே கையாளப் பெற்றுளது என்பதும் அதன் நெறியிலேயே பின்னர் தொடர்ந்துளது என்பதும். தொடர்ந்த காலங்களில் மொழிவேறுபட்டாரின் முயற்சியால் தனித்திறம் பெற்ற வட்டெழுத்துச் சொற்களில் பிற எழுத்துக்கள் இடம்பெற்றதால் சொல்லொலிச் சிதைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதும் காலச்சூழலுக்கு இலக்கான தமிழ் மொழியின் நிலையினால் அறிய முடிகின்றது. எனவே, தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழ்மொழிக்குரிய வரிவடிவு வட்டெழுத்துக்கள் என்பது புலனாவதுடன், அவ்வெழுத்துக்கள் மேல் அரைவட்ட வளைவும் (கோடு) கீழ் அரை வட்ட வடிவும் நெடுங்கணக்கெழுத்துக்களுக்குப் பெற்றிருந்த நிலையில் கோட்டால் வரைந்து காட்டிய கண் போன்று தோற்றம் கொண்டதால் 'கண்ணெழுத்துக்கள்' என்று பெயர் குறிக்கப்பட்டுள்ளன. இதனைச் சிலப்பதிகாரத்தாலும் அறியமுடிகின்றது.

கோபிநாதராவ், 'பிராமி எழுத்துக்களிலிருந்தே வட்டெழுத்துக்கள் தோன்றியுள்ளன' என்று கூறுவது, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் திருநாதர்குன்றிலுள்ள சமணச் சார்புடைய கல்வெட்டினை, அவர் கண்டுபிடித்தறிந்த அளவில் கூறிய கருத்தாகும். இக்கல்வெட்டிற்குக் காலத்தால் முந்திய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்திருப்பதால் அன்றைய நிலையில் அவர் கருதியது என்ற அளவில் உள்ளது. மற்றும் அக்கல்வெட்டு வாசகம்,

'ஐம்பத் தேழன
சனந் நோற்ற
சந்திர நந்தி ஆ
சிரிகர் நிசீதிகை'

என்பதேயாகும். இக்கல்வெட்டில் இருபத்தொன்பது எழுத்துக்கள் உள்ளன. இதில் நகரவரிசைக்குரிய ஆறு எழுத்துக்கள், (ந - 1, நி - 1, நோ - 1, ந் - 3 = 6) தென்னிந்திய பிராமி எழுத்தின்

சாயலில் உள்ளன. ஏனைய இருபத்து மூன்று எழுத்துக்களும் தமிழ் வட்டெழுத்தில் உள்ளன. இக்கூட்டெழுத்து முறையினைக் கொண்டு சிந்திக்கும்போது, பிராமி எழுத்தறிவோடு தமிழ கத்திற்குச் சமணச் சார்பில் வந்த ஒருவர், ஆங்கு வழக்கிலிருந்த வட்டெழுத்து முறையினைக் கற்ற நிலையில் செய்தியினை எழுதி கல்லில் பொறிக்கச் செய்துள்ளார் என்றே கருத முடிகின்றது. காரணம், கல்வெட்டிற்குரியதாக அவர் கருதிய செய்தி,

'சந்திர நந்தி ஆசிரியர், ஐம்பத்தேழு
நாட்கள் உண்ணா நோன்பிருந்த நிசீதிகை'

என்பதேயாகும். ஆனால் கல்வெட்டில் சொற்கள் குறிப்பாகவே அமைந்துள்ளன.

இக்கல்வெட்டிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு இக்கல் வெட்டு வட்டெழுத்தும் பிராமியும் கலந்த கல்வெட்டென்று கூறலாகும்.

வட்டெழுத்துள்ள கல்வெட்டுகள் கி.பி. இரண்டாம் நூற்றாண் டினதாகக் கருதப் பெறும், அரச்சலூர் நடன தாளகால எழுத் தடைவுக் கல்வெட்டு முதலாக, கி பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவும் கிடைத்துள்ளன.

இக்கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு எழுத்து முறையினைக் காலவகைப் பாகுபாடு செய்யலாகும். இப்பாகு பாடு அறிஞர் கூறியுள்ள காலவகைப்படிக் கூறப்பெறுவதாகும்.

1. வட்டெழுத்தும் பிராமியும் கலந்த கல்வெட்டுகள். இவை, கி. பி. 2 - 3 - ஆம் நூற்றாண்டிற்குரியவை.

2. தமிழ் நாட்டில் தனி வட்டெழுத்தில் தெளிவான செய்தி களைத் தரும் கல்வெட்டுகள். இவை கி. பி. 4 - 5 ஆம் நூற்றாண்டிற்குரியவை.

3. சமஸ்கிருத சொற்களைத் தமிழ்க் கல்வெட்டுகளில் குறிப்ப தற்குக் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ள வட்டெழுத் துக் கல்வெட்டுகள். கி.பி. எட்டாம் நூற்றாண்டு.

4. வட்டெழுத்தும் தெளிதமிழும் கலந்துள்ள கல்வெட்டுகள் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் உள்ளவை.

1. வட்டும் பிராமியும் கூடிய அரச்சலூர் கல்வெட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | தை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

முதல் பகுதி, மூன்று பகுதிகளாகவுள்ள இக்கல்வெட்டில் முதல் இரண்டும் நடன அடைவுக்குரிய இசை நிரல் எழுத்த டைவுகளாகவுள்ளன. மூன்றாம் பகுதி, இவ்வாறு எழுத்தடை வினைக் கண்டுபிடித்துக் கல்வெட்டின் வழியே நடனக்கலைக்கு அறிமுகம் செய்தவன் பெயரும் செயலும்

"எழுத்து புண்ருத்தான் மணிய
வண்ணக்கன் தேவன் சாத்தன்."

என்றவாறு குறிக்கப்பட்டுளது.

2. மதுரையைச் சார்ந்த சமணர் குன்றின் மேல்தளத்திலுள்ள தனி வட்டெழுத்துக் கல்வெட்டு.

'ஸ்வஸ்திஸ்ரீ இப்பள்ளி உடைய
குணசேனதேவர் சட்டன் சிங்
கடைப்புறத்து கண்டன் பொற்பட்
டன் செய்வித்த திருமேனிஸ்ரீ'

மதுரையைச்சார்ந்த ஐவர்மலை - சமணர்கல்வெட்டு - தனி வட்டெழுத்து.

'ஸ்ரீ வீரசங்கத்துப் பெருமடை
மல்விசேனப் பெரியான் செயல்'

மதுரையைச் சார்ந்த ஆனைமலையிலுள்ளசமணர் வட்டெழுத் துக் கல்வெட்டு.

"அச்சணந்தி செய்வித்த திருமேனி
யும் பரிவாரமும்"

மதுரை மாவட்டம் உத்தமபாளையம் - பாறையிலுள்ள சமணர் வட்டெழுத்துக் கல்வெட்டு.

'ஸ்ரீ
திருக்குணகிரித் தேவர்க்கு திருவிளக்கு
க்கு அனந்தவீர அடிகள் அட்டின
காசு பதினொன்று"

இக்கல்வெட்டுகள் பழந்தமிழ் வட்டெழுத்துக்களில் உள்ளன வாயினும், சமண சமயத்தவர் போற்றிய மங்கல இலச்சினைச் சொல்லாகும் ஸ்வஸ்தி ஸ்ரீ-யும், எழுத்தாகிய ஸ்ரீ-யும் குறிக்கப்பட்டுள்ளன. மற்றை எழுத்துக்கள் அனைத்தும் வட்டெழுத்துக்களே யாகும். இக்கல்வெட்டுகளால் அறியப்பெறும் சமணப் பெரியார் களும் முனிவர்களும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் - திருஞான சம்பந்தர் காலத்தில் மதுரையைச் சூழ்ந்துள்ள குன்றுகளில் வாழ்ந்திருந்தவர்கள் என்பதை, சம்பந்தரின் மதுரைப் பதிகத்தாலும், பெரியபுராணத்தாலும் அறியலாகும்.

சடையவர்மன் பராந்தக பாண்டியனின் கல்வெட்டு, கி. பி. எட்டாம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டில் கிரந்த எழுத்துக்களில் வடசொற்கள்.

கோமாறஞ்சடையற்கு உ
த்தர மந்திரி களக்குடி வை
த்யங் மூவேந்த மங்கலப்
பேரரையன் ஆகிய மாறங்
காரி இக்கற்றளி செய்து
நீர்த் தெளியாதெய் ஸர்வ்கராரோ
ஹணஞ் செய்த பின்னை அவ
னுக்கு அநுஜங் உத்தர
மந்தரபத மெய்தின பாண்டி
மங்கல விசையரையன்
ஆகிய மாறன் னெஇனன்
முகமண்டபஞ் செ
ய்து நீர்த்தளித்தான்.

சேரநாட்டிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு
திருவிடைக்கோடு - கல்வெட்டு.

ஸ்வஸ்திஸ்ரீ கோகருந்நநந் தடக்கற்கு
ச்செல்லாநின்ற யாண்டு இரண்டு இத
னெதிர் பன்னிரண்டு இவ்வாண்டு திருவிடைக்கோ
ட்டு மாதேவர்க்கு திருநொந்தா விளக்கு
நியதிப்படி எரிவதாக செழிய -
ந்த... உழக்குநெய் அட்டுவதாக ஊ
ரும் இண் ... களும் உள்ளிருக்க சடை ...
இவன் பணிக்கைய்யில் விட்ட பசு
சாவா மூவாப் பேருருவாக அட்டின பசு
இருப்பத்தஞ்சு||

**சுசீந்திரம் கல்வெட்டு - முதல் பராந்தக சோழன்**

ஸ்வஸ்திஶ்ரீ கோப்பரகேசரிவன்ம
ற்கு யாண்டு முப்பத்துநாலு இ
வ்வாண்டு நாஞ்சி நாட்டு திருச்
சிவீந்திரத்து மாதேவர்க்கு தெ
ன் நாட்டு தலைக்குளத்து அரையன
ரவிந்தன் சந்திராதித்த மலு
ம் நியதி உழக்கு நெய் முட்டா
மல் எரிவதாக வைச்ச திருநொ
ந்தா விளக்கு ஒன்றினுக்கு வைச்ச
சாவா மூவா பேர் ஆடு அம்பது|| இவை
ஐம்பதும் பரடை ஸபையார்க்கு

தமிழகத்தின் வடபுறத்தேயுள்ள தருமபுரி மாவட்டத்தில் உள்ள - பல்லவர் காலவட்டெழுத்துக் கல்வெட்டுகள் - நடுகற்கள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு சிம்ம விஷ்ணு பல்லவன் காலத்தில் கி. பி. 589இல் தோன்றியுளது.

நடுகல் - கல்வெட்டு

கோவிசைய சிங்கவி
ண்ணபருமற்குப் பதினான்காவது
பெரும் பாண்ணரைசர் மக்கள் சாத்
தபராவ ணா ர் சேவகன்
வன்ன ஊர் பா
வன் பூசலுட் ப
ட்ட கல்.

சிங்கவிண்ணபருமர் - சிம்மவிஷ்ணு பல்லவன் சேவகன் மெய்க்காவலன். பூசல் - போர்.

செங்கம் - நடுகல் கல்வெட்டு.

வட்டெழுத்து.

மகேந்திரவர்ம பல்லவனது ஆட்சியில், கி. பி. 617இல் இக் கல்வெட்டு தோன்றியுளது.

கோவிசைய மயேந்திர
பருமற்கு [ ] ஆவது க
ங்கரைசரோடு பவ்வது கங்
கரைசரு மக்கள் பொன்
னந்தியாரு பெருமுகை

எறிந்த ஞான்று கங்க
ரைசரு சேவகரு எறிந்து
பட்டாரு' ராராற்றூர் ஆண்ட
குன்றக் கண்ணியார்
கல்.

கோவிசைய மயேந்திர
பருமற்கு முப்பத்திரண்டா
வது பொன்மோதனார் சே
வகன் வின்றண வடுகன்
புலி குத்திப் பட்டான்
கல்.

மகேந்திரவர்மன் காலக்கல்வெட்டு. கி.பி. ஏழாம்நூற்றாண்டு.

இக்கல்வெட்டுகள் இரண்டும் 'செங்கம் நடுகற்கள்' என்னும் நூலில் உள்ளவை.

பல்லவர் ஆட்சியில், பல்லவரின் தாய் மொழியாகிய வடுகும் வழக்கில் கையாண்ட சமஸ்கிருதமும், வட்டெழுத்துத் தமிழில் சொற்கள் நடுகற்களில் பொறிக்கப்பெற்றுளதாயினும், பவ்வது, கங்கரைசரு, பொன்னந்தியாரு, சேவகரு, பட்டாரு, என்ற சொற்கள் உகரவிகுதி ஒலிபெற்றியங்கும் தெலுங்காகிய வடுக மொழி நடையில் அமைந்திருப்பது காணத்தக்கதாகும். இதனால் வடுகமொழியாளன் வட்டெழுத்துத் தமிழில் நடுகற்களுக்கு வாசகம் எழுதித் தந்துள்ளமை புலப்படுகின்றது.

உலகியலைக் கொண்டு இங்கு நாமொரு கருத்தினை நினைவு கொள்ளற்காகும். கல்லில் எழுத்துக்களை வெட்டும் கல்தச்சன், கல்வியாளனாகவும் கல்வி இல்லாதவனாகவும் இருப்பது இயல் பாகும். தொழில்புரிவான் எப்படியிருப்பினும் கல்லில் எழுத வேண்டிய வாசகத்தினை, செய்திக்கு உரியவர்களோ, அவர்களால் திட்டப்படுத்தப்பட்டவர்களோ எழுதித்தர, அவ்வாசகத்தினைக் கல்தச்சன் உள்ளவாறு கல்லில் வெட்டித்தருவது அத்தொழில் நிலையாகும்.

கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டிய நாட்டில் மன்னர்கள் கல்வெட்டில் செய்திகளை வெட்டச் செய்ததுடன், அதற்குப் படியாகச் செப்புத்தகடுகளிலும் சாசனங்களை வெட்டச் செய்துள்ளனர். அச்செப்பேட்டுச் சாசனங்களில், நெடுஞ்சடையன்

பராந்தகன் (கி. பி. 765 - 790) வேள்விக்குடிச் செப்பேடுகளும் இராசசிம்மபாண்டியனது சின்னமனூர்ச் செப்பேடுகளும் வட்டெழுத்துத் தமிழில் சொற்றொடரில் பிழையின்றிய முறையில் வெட்டப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக அச்செப்பேடுகள் தரும் செய்திகளில் ஒவ்வொரு பகுதியினைக் குறிக்கலாகும்.

வேள்விக்குடிச் செப்பேடுகள்
(வட்டெழுத்து)

"கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதி ராசனால்,

நாக மாமலர்ச் சோலை நளிர்சினைமிசை வண்டலம்பவும், பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச் சொற்கணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத கொற்கைக் கிழானற் கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக்

கேள்வியந்தணாளர் முன்பு கேட்கவென்றெடுத்துரைத்து வேள்விச்சாலை முன்பு நின்று வேள்விக்குடியென்றப்பதியைச் சீரோடு திருவளரச் செய்தார் வேந்தனப் பொழுதே

நீரோட்டிக் கொடுத்தமையா னீடுபுக்தி துய்த்தபின், அளவரிய வதிராசரை யகல நீக்கி, யகலிடத்தைக் களப்பிரனெனுங் கலியரைசன் கைக் கொண்டதனை யிறக்கிய பின், படுகடல் முளைத்த பருதி போற் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு—"

வட்டெழுத்துக்களால் எழுதப்பட்ட வேள்விக்குடி செப்பேட்டின் பகுதியினைப் பாடியவன் ஏனாதி சாத்தன் என்பது பட்டயத்தில் குறிக்கப்பட்டுளது.

இவ்வாறு, பாண்டிய நாட்டில் வட்டெழுத்துக்களால் பாடல் முறையில் சிறந்த பழைய தமிழ்ச் சொற்களைக் கொண்டு வேள்விக்குடிச் செப்பேட்டில் தமிழ்ப்பகுதி பிழையின்றி அமைக்கப்பட்டிருக்கும் திறன் கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குரியதாகும். இதைக்கொண்டுச் சிந்திக்கும்போது, இதற்கு முற்பட்ட காலங்களாகிய கி. பி. 7, 6, 5 ஆம் நூற்றாண்டுகளிலும் வட்டெழுத்தால் நல்ல தமிழ்நடைச் சொற்களும் தொடர்களும் பாடல்களும் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று கருதமுடிகின்றது.

பாண்டிய நாட்டினராகிய நம்மாழ்வாரும், சேரமன்னராகிய குலசேகர ஆழ்வாரும் திருமாலின் மீது பாடியருளிய திருவாய்மொழிப் பாடல்களை அக்காலத்தில் பாண்டிய நாட்டில் வளர்ச்சி

யடைந்திருந்த தமிழ்மொழிக்குரிய வரிவடிவங்களாகிய வட்டெழுத்திலேயே எழுதியிருக்கவேண்டுமென்பது அமைகின்றது.

இவ்வாறு தமிழுக்குரிய எழுத்துக்கள் வட்டெழுத்து என்ற காரணப்பெயரால், பண்டைய பாண்டியநாட்டிலும் சேர நாட்டிலும் ஏட்டு வழக்கிலும் நாட்டில் மக்கள் வழக்கிலும் பக்திநெறிப் பாடல் துறையிலும் சிறந்துள்ளன.

## இமயத்தில் வட்டெழுத்து

க. அருணாசலம் தாம் மேற்கொண்ட இமயமலைப் பகுதியிலுள்ள 'பத்ரிநாத்' யாத்திரையின்போது. இமயமலைப் பகுதியிலுள்ள கோபேஸ்வர் என்னும் ஊரின் சிவன் கோவிலில். தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளதைக் கண்டுள்ளார். தாம் எழுதிய 'பிரயாண நினைவுகள்' என்ற நூலில். 30-ஆம் பக்கத்தில் அச்செய்தியினைப் புலப்படுத்தியுள்ளார். செய்தி வருமாறு :

"இந்திய வட எல்லை இமயப்பகுதியிலுள்ள, சமோலி மாவட்டத்தின் தலைநகர் 'கோபேஸ்வர்' என்னும் ஊர். இதில் ஒரு சிவன் கோயிலுள்ளது. இத்தலம் சிவபெருமான் தவமியற்றிய தலம் என்பர். இப்பழமையான கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் யாவும் வட்டெழுத்தால் பொறிக்கப்பட்டுள்ளன. இத்தலம் பத்ரிநாத் யாத்திரை மார்க்கத்தில் இருக்கின்றது."

ஆசிரியர் தரும் இச்செய்தியினால், முன்னொரு காலத்தில் தமிழகத்திலிருந்து 'பத்ரிநாத்' யாத்திரையாக இமயமலைப் பகுதிக்குப் பரிவாரங்களுடன் சென்ற சிவவழிபாட்டுத் தமிழ்ச் செல்வரொருவர், அங்குள்ள கோபேஸ்வர் சிவன் கோயிலுக்குப் பல அறச் செயல்களைச் செய்துள்ளாரென்பதும், தாம் செய்துள்ள அறச் செயல்களைத் தாமறிந்த தமிழ் வட்டெழுத்தில் தமிழக வழக்கில் கல்வெட்டுக்களாக வெட்டச் செய்துள்ளார் என்பதும் புலனாகும். அவ்வறச் செயலாளர் மன்னராகவும் இருக்கலாம். கல்வெட்டுச் செய்திகள் வெளிப்படின் தமிழ் வட்டெழுத்து இமயம் வரையில் சென்றுள்ள வரலாற்றுச் செய்தி விளக்கமாக அமையும்

## வட்டெழுத்து பற்றிய - ஆய்வுரை

தமிழ் மொழியின் தொன்மையான எழுத்து வடிவங்களில் ஒன்றாக அமைந்திருப்பது, வட்டெழுத்துக்களாகும். மற்றொன்று தெளி தமிழெழுத்துக்களாகும்.

வளைந்த கோடுகளால் அதன் வடிவம் அமைந்திருப்பதால் வட்டெழுத்து என்று பெயர் பெற்றுளது. இவ்வெழுத்துக்களைக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் 'கண்ணெழுத்துக்கள்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

வட்டெழுத்து கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய பிராமி எழுத்துக்களோடு கலந்த நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் நடுகற்களில் கிடைத்துள்ளன.

பாண்டிய நாட்டில் வட்டெழுத்துமொழி நிலையே தமிழுக்கு வழங்கப்பட்டுளது.

முற்காலப் பாண்டியரின் ஆட்சி தமிழகத்தின் வடபால் தர்மபுரி மாவட்டம் அளவில் பரவியிருந்தது. அக்காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையில் ஆகும். இக் கால அளவில் தர்மபுரி பகுதிகளிலும் கொங்கு நாட்டிலும் வட்டெழுத்து வளர்ச்சி பெற்றுளது.

பாண்டிய நாட்டில் அரசியல் பற்றியும் அறச் செயல்களைப் பற்றியும் தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் எழுத்துப் பிழை, சொற் பிழை, இன்றிய நிலையில் உள்ளன.

கி.பி. 8-9- ஆம் நூற்றாண்டுகளில் உண்டான பாண்டியர் காலத்திய செப்பேடுகள் அனைத்தும் தனித்தமிழ் வட்டெழுத்துக் களிலேயே செம்மையான தொடர்களைக் கொண்டனவாக உள்ளன.

தருமபுரி நடுகற்களிலும், பாண்டிய நாட்டுக் கல்வெட்டு, செப்பேட்டுச் சாசனங்களிலும் தமிழ் வட்டெழுத்துக்கள் வரிகளிட்டு வரிசை முறையில் அழகாக வெட்டப்பட்டுள்ளன.

சேர நாட்டின் தொன்மையான எழுத்து முறை தமிழ் வட்டெழுத்து முறையாகவே இருந்துளது.

சேரரின் ஆட்சி கருவூர் அளவிலும் பரவி இருந்ததால் கோயம் புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களாகிய கொங்கு நாட்டிலும் சேர அரசின் வழி தமிழ் வட்டெழுத்து முறை நாட்டு வழக்கில் சிறந்திருந்தது.

தமிழகம் முழுவதிலும் கி.பி. இரண்டு மூன்றாம் நூற்றாண்டில் சிறந்திருந்த வட்டெழுத்து மொழி மரபில் இணை வளர்ச்சியாகத் தெளிதமிழ் வரிவடிவங்கள் தோன்றித் தொடர்ந்துள்ளதைச் சிற்றண்ணவாயில் குகைக்கல்வெட்டுப் பெயர்களால் அறியமுடி கின்றது.

வட்டெழுத்தின் இணை எழுத்தாகும் தெளிதமிழ் எழுத்து முறை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் தக்க உருவமைப்புடன் சோழர் காலத்தில் ஒருங்கமைந்த நிலையில் வளர்ச்சி பெற்றுளது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதலாக, கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவிலும் எழுத்து முறையில் வடிவ வளர்ச்சியுடன் தமிழ் வட்டெழுத்து சிறப்பாகப் பாண்டிய சேரநாட்டிலும், பரவலாகத் தமிழகம் முழுவதும் நாட்டிலும் ஏட்டிலும் வீட்டிலும் வழங்கப்பட்டுள்ள மொழி நிலை எழுத்தாக இருந்துள்ளமையினைக் கல்வெட்டுகள், செப்பேடுகள், பனைஓலைச்சுவடிகள் ஆகியவற்றால் அறிய முடிகின்றது.

தமிழகத்தில் தனித்தன்மையுடன் தமிழுக்குரித்தான எழுத்தாகத் தமிழ் வட்டெழுத்து முறை இருந்திருப்பதைக் கொண்டு சிந்திப்போமாயின், கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலாகக் கி.பி. எட்டாம் நூற்றாண்டினரான திருமங்கை ஆழ்வார் வரையிலான பன்னிரு வைணவ ஆழ்வார்கள் அவ்வப்போது பாடிய திருவாய் மொழிப் பாடல்கள் அனைத்தும் செம்மையான வட்டெழுத்துக் களைக் கொண்டதாகவே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதும்,

கி,பி. நான்கு - ஐந்தாம் நூற்றாண்டினராகக் கருதப்பெறும் காரைக்காலம்மையார் தமது பதிகங்களை வட்டெழுத்தில்தான் எழுதி இருக்க வேண்டுமென்பதும்,

கி.பி. ஏழாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரும் பாடியுள்ள தேவாரப் பதிகங்கள் அனைத்தும் வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பதும் புலப்படுவதாகும்.

இவ்வாறாகத் தமிழகத்தில் தமிழுக்கென தமிழர் உருவாக்கிய எழுத்து முறையாகும் வட்டெழுத்து, வழக்கு, நன்முறையில் மொழி வளத்தின் சுவடுகளுக்கு இலக்காக வளர்ந்துள்ளது.

தென்னிந்தியாவில் சமண சமயத்தைப் பரப்பும் நோக்குடன் அவ்வப்போது வந்த திகம்பரர்களான சமண முனிவர்களும் சமணர்களும் மலைக்குகைகளில் தங்கியிருந்த தடங்களில் தாமறிந்திருந்த பிராமி எழுத்துக்களைக் கொண்டு, தமிழ்ச் சொற்களைக் கற்பித்து, எழுத்துப் பிழைகளுடன் சொற் சிதைவுகளுமாக வெட்டச் செய் துள்ள குகைக் கல்வெட்டுகளைக் கொண்டு, அதிலுள்ள எழுத்து

முறையிலிருந்தே வட்டெழுத்து வடிவு தோன்றி வளர்ந்து தமிழெழுத்துக்களாக உருவெடுத்துவந்துளது என்று காணும் கருத்துகள் தமிழகத்தின் பழமையினைக் கொண்டு சிந்திக்க வேண்டிய செயலாகவுள்ளமை அறியத் தக்கதாகும்.

மேலும் வட்டெழுத்து நிலவிய காலத்திலேயே அதற்கு இணையான தெளிதமிழ் எழுத்துக்கள் வழக்கில் வந்துள்ளன. நுண்ணிதின் காணும் போது, அவ்வெழுத்து முறை சோழ நாட்டில் தோன்றி கால வளர்ச்சியில் பாண்டிய நாட்டில் வளர்ந்து- தமிழக வழக்கில் சிறந்துள்ளது என்பது புலனாகின்றது.

## சோழநாட்டில் தெளிதமிழ் எழுத்து

சோழ நாட்டில், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். குடவாயிற் கீரத்தனார், சோழ நாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார், எருக்காட்டூர் தாயங்கண்ணனார், சோழநாட்டு பெருஞ்சாத்தன், மாங்குடி மருதனார். அரிசில் கிழார், உறையூர் இளம்பொன் வாணிகனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், உறையூர் முதுகூத்தனார், உறையூர் முது கண்ணன் சாத்தனார் ஆகிய புலவர்களும், சோழன் கிள்ளி வளவன், கோப்பெருஞ் சோழன் ஆகிய அரசர்களும் தமிழ்ப் புலமையிற் சிறந்தவர்களாக இருந்துள்ளனர்.

சங்க இலக்கியங்களில் இவர்களின் பாடல்கள் உள்ளன. இவர்கள் யாவரும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டமரபினர். இவர்கள் எந்த எழுத்து முறையினைக் கையாண்டு பாடல்களை எழுதியிருப்பார்கள்? என்று சிந்திக்க வேண்டும்.

தென்னிந்தியாவில் அருகிய நிலையில் சமண பௌத்த மதச் சார்பில் வரத்தொடங்கிய பிராமி எழுத்துக்களைக் கொண்டு பாடல்கள் எழுதவியலுமா? இயலாது.

எனவே புலவர்கள் சோழ நாட்டில் வழங்கப்பட்ட இலக்கண அமைதியோடு கூடிய எழுத்து முறையினைக் கற்றிருந்த புலமையினாலேயே எழுதியிருக்க முடியும். அவ்வெழுத்து முறையினையே தெளிதமிழ் எழுத்து முறை என்று சுட்டியுள்ளேன்.

அந்த எழுத்துமுறை வட்டெழுத்தின் ஒரு பிரிவாகச் சோழ நாட்டில் தொன்று தொட்டே தமிழ் மொழி வழக்கில் தொடர்ந் துள்ளது. அத் தெளிதமிழ் எழுத்து முறை கி. பி. ஒன்பதாம் நூற்

றாண்டிலிருந்து மேலும் வளர்ச்சி பெற்றதாக இருந்துள்ளமையினை முதல் இராசராசனது தஞ்சைப் பெரிய கோயில் கல்லெழுத்துக் களின் சிறப்பமைந்த வடிவங்களால் அறிய முடிகின்றது.

சோழ நாட்டில் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைக்க வில்லை, இதனால் எதனைக் கருதி அறிய முடிகின்றது? சோழ நாட்டில் சங்ககாலம் முதற்கொண்டே தமிழெழுத்தின் ஒருபிரிவாக எழுத்து முறையொன்று அரசியலிலும் மக்கள் வழக்கிலும் கையாளப்பட்டு வந்ததால் பாண்டிய நாட்டில் வளர்ச்சியடைந்தி ருந்த வட்டெழுத்து முறையோ பிற எழுத்து முறையோ வழக்கில் தொடர்வதற்குத் தேவையின்றிய நிலையில் இருந்துளது.

எனினும் வட்டெழுத்தின் தொன்மையினைக் கொண்டு பார்க்கும்போது சோழ நாட்டில் திகழ்ந்த தமிழெழுத்து வடிவங்கள் வட்டெழுத்தின் திருந்திய வடிவங்களாகவும் வட்டெழுத்தின் ஒரு பிரிவான தெளிதமிழ் எழுத்துக்களாகவும் இருந்துள்ளன என்பதைக் காண முடிகின்றது.

அறிஞர்களும் தமிழ்ப்பிராமி எழுத்தினின்றும் வட்டெழுத்தி னின்றும் வேறான ஒருதமிழ் வரிவடிவ முறைமை இருந்துள்ளது, என்று கருதியுள்ளனர்.

## இலக்கண வழக்கில் வட்டெழுத்து

தமிழ்மொழிக்குத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ள இலக்கணநெறிகட்கு வட்டெழுத்துக்கள் இடனாகவுள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில்,

> "ஔகார விறுவாய்
> பன்னீரெழுத்து முயிரென மொழிப"

என்று கூறப்பட்டுளது. வட்டெழுத்துக்களில் உயிரெழுத்து வகையில் "ஔ" வடிவம் இல்லை. ஆயினும் ஒ கரவடிவில் கீழ் வளைவுக் கோட்டில் ஒரு சிறு கோட்டுருவுள்ள எழுத்துக்கள் உள்ளன. அந்த வடிவமே ஔகாரமாக அமைந்திருக்கலாம்.

"மெய்யின் இயற்கைப் புள்ளியொடு நிலையல்" என்ற தொல்காப்பியநெறியினை உடையதாகவே வட்டெழுத்தில் மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றதாக உள்ளன. பதினெட்டு எழுத்துக்களாகவும் இருக்கின்றன.

'உட்பெறுபுள்ளி உருவாகும்மே' என்ற மரபிற்கேற்ப தலைப்பில் புள்ளியுடன் உள்ள பகர மெய்யெழுத்தைப் போன்றல்லாது புள்ளியை நடுவில் பெற்ற பகர வடிவம் மகரமாகும் என்பதையும் வட்டெழுத்தில் காண முடிகின்றது.

'எகர ஒகரத்தியற்கையுமற்றே' என்பதற்குரியதாகக் குறில் எ - யின் தலைப்பிலும் குறில் ஒ - வின் தலைப்பிலும் புள்ளியிட்டு எழுதும் வழக்கு வட்டெழுத்திலும் நிலைப்பாக உளது. எனவே, தொல்காப்பிய இலக்கண மரபில் உயிர் மெய் எழுத்துக்களுக்குச் சொல்லப்பட்ட வடிவங்கள் வட்டெழுத்தில் உள்ளன.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தமிழ் இலக்கணமாகிய நன்னூலிலும் வட்டெழுத்துக்களின் வடிவங்களுக் கேற்ப இலக்கணம் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள்

''தொல் வடிவின வெல்லா வெழுத்தும்
ஆண்டெய்தும் எகர ஒகர மெய்புள்ளி''

என்ற நூற்பா குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களின் வடிவங்கட்குச்சொல்லிய இலக்கணம் நன்னூலிலும் சொல்லப்பட்டுளது. இதனால் நாம் அறிவதென்ன?

தொல்காப்பியர் தமிழுக்கு அளவிட்டுரைத்த வரிவடிவம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவிலும் வடிவம் திரியாது பிழையாது தொடர்ந்திருந்தது என்பதனை அறிய முடிகின்றது.

வட்டெழுத்து வரிவடிவங்கள் தமிழ் இலக்கண மரபிற்குரிய தாகத் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே நன்னூலார் காலத்திலும் தொடர்ந்திருந்ததினாலேயே,

'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்று அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் சுட்டிக் கூறியுள்ளார்.

## பல்லவர் காலத் தமிழ் எழுத்துக்கள்

தமிழகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் இடம் பெற்ற பல்லவர்கள் வெளியிட்ட செப்பேடுகளைப் பிராகிருத எழுத்துக்களிலும் சமஸ்கிருத எழுத்துக்களிலும் வெளியிட் டுள்ளனர். பின்னர் தமிழகத்தில் நிலையான ஆட்சியினை உண்டாக்கிய சிம்ம விஷ்ணு முதலான பல்லவர்கள் சமஸ்கிருத மொழியை எழுத கிரந்த எழுத்துக்களைப் படைத்துள்ளனர். செப்புப் பட்டயங்களிலும் கல்வெட்டுகளிலும் சமஸ்கிருத கிரந்த

எழுத்துக்களையே கையாண்டுள்ளனர். சில கல்வெட்டுகளில் சமஸ்கிருத எழுத்துக்களையும் கிரந்த எழுத்துக்களையும் பயன் படுத்தியுள்ளனர். நடுகற்களில் கி.பி. 3-6 ஆம் நூற்றாண்டுகளில் பிராமி எழுத்துக்களோடு வட்டெழுத்துக்கள் கலந்த சொற்களை உடைய கல்வெட்டுகள் தோன்றியுள்ளன. பல்லவர்கள் சாத வாகனப் பேரரசின் மறைவினையொட்டி, தமிழகத்திற்கு வந்த காலக்கட்டத்தில் இத்தகைய எழுத்து முறைக் கல்வெட்டுகள் உண்டாக்கப் பெற்றுள்ளதனைக் காண முடிகின்றது.

சிம்மவிஷ்ணுவின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 575—615) தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நடுகல்லில் தமிழ்ப் பிராமியும் வட்டெழுத்தும் இடம் பெற்றுள்ளன.

சிம்மவிஷ்ணுவின் மகன் மகேந்திரவர்மன் காலத்தில் (கி.பி. 615—630) உண்டான வடஆற்காடு மாவட்டத்திலுள்ள நடு கற்களில் வட்டெழுத்திலும் அதினின்றும் திருத்தமான தமிழ் எழுத்திலும் சொற்கள் வெட்டப்பட்டுள்ளன. திருத்தமான தமிழ் எழுத்துக்களையே தெளிதமிழ்எழுத்துக்கள் என்று குறிப்பிட் டுள்ளேன்.

இத்தகைய திருத்தமான வடிவமைப்புடைய தமிழ் எழுத்துக் கள் பழைய தமிழ் வட்டெழுத்துக்களின் சாயலினின்றும் திருந்திய வடிவங்களைப் பெற்றுள்ளன.

வட்டெழுத்துக்களின் தொன்மைக் காலம் முதலாகத் தமிழகத்தில் தமிழெழுத்துக்களாகத் தொடர்ந்து வந்துள்ள தெளி தமிழ் எழுத்துக்கள் இரண்டாம் நந்தி வர்மன் காலத்தில் கி.பி. (710—775) கல்வெட்டுகளில் பெருமளவில் உள்ளன.

பல்லவர்கள் துங்கபத்திரை, கிருஷ்ணா ஆறுகளுக்குத் தெற்கே இடம் பிடித்த பகுதிகளிலும் அப்பகுதிகளைச் சார்ந்த தென் பகுதிகளிலும், தமிழர் அக்காலத்தில் மொழிக்கு உரிய வரிவடிவங்களாகத் தொடர்ந்திருந்த தமிழ் வட்டெழுத்துக்கள் மக்கள் வழக்கில் இருந்துள்ளன. எனவே தான் பல்லவர்கள் அக்காலத்தில் (கி.பி. 2-5) உண்டாக்கிய நடுகற்களில் தமிழ் வட்டெழுத்துக்களை உடைய பிராமி எழுத்துக்களோடு கூடிய கல்வெட்டுகளைத் தோற்றுவித்தனர்.

அக்காலத்திலேயே வட்டெழுத்தின் திருத்திய வடிவமாகத் தெளிவான வடிவங்கள் தமிழ் மொழிக்குத் தோன்றித்தமிழ் வட்டெழுத்தோடு நாட்டு வழக்கில் நன்முறையில் தொடர்ந் துள்ளன,

பனை ஓலைகளைப் பதன் செய்து எழுத்தாணியால் எழுதும் எழுத்துமுறை குமரி நாட்டுத் தமிழர் முதலாகத் தொடர்ந்த எழுத்துமுறையாக அமைந்திருந்ததால் வட்டெழுத்தினோடு அதன் சாயலுடன் திருந்திய வடிவமாக வளர்ந்து வந்த தெளி தமிழ் எழுத்து முறை, வடிவில் முழுத்திறனுடைய வடிவங்களாகக் கி.பி. ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில், ஓலையில் எழுதும் வழக்கின் பெருக்கத்தால் ஆகியுள்ளன, அத்திருத்தமான தெளி தமிழ் எழுத்துக்களைப் பிற்காலப் பல்லவர்களுள் நிருபதுங்கவர்மன் காலத்திய (கி.பி. 850—882) கல்வெட்டுகளில் காண முடிகின்றது.

பல்லவர்காலத் தமிழ்க்கல்வெட்டுகள் தொண்டை மண்டலத்திலும் சோழமண்டலப் பகுதிகளிலும் பரவலாகக் கிடைத்துள்ளன. தென்னார்க்காடு மாவட்டம் தளவானூரில் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு கி.பி. எட்டாம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகும்.

பொதுவாகப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் பழமையான தமிழ் மொழிக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் வட்டெழுத்துக்களிலேயே பொறிக்கப்பட்டுள்ளன.

## பாண்டியர்காலத் தமிழெழுத்துக்கள்

பாண்டியநாடு பழம்பெரும் நாடு, குமரிநாட்டின் நாகரிகத்துடன் வளர்ச்சி பெற்ற நாடு. மூன்றாம் தமிழ்ச்சங்கத்தினை நிறுவித் தமிழ் வளர்த்த நாடு. முடத்திருமாறன் முதலாகத் தோன்றி, பழையரெனும் மரபில் வந்த பாண்டியமன்னர்கள் ஆட்சி புரிந்த நாடு. தமிழ்மொழி முத்தமிழாக வளர்ந்து பெருகிய நாடு, 'தமிழ் நாடு' என்ற சிறப்புப் பெயரினைத் தமிழகத்தில் பெற்ற தனித்தன்மையான நாடு.

பாண்டிய நாடு, தமிழ்நாடு என்று தனிப்பெயர் பெற்றிருந்ததைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுகின்றார். ஞானசம்பந்தர் சோழநாட்டினின்றும் பாண்டியநாட்டிற்குச் சென்ற நிகழ்ச்சியினை நெறிமுறையோடு கூறும்போது, கொடுங்குன்றம் சென்று இறைவனை வழிபட்ட பின்னர் ஞானசம்பந்தர் புனல் நாடு நீங்கி—தமிழ் நாடு சென்றடைந்தார் என்று அறிமுகம் செய்துள்ளார்.

இவ்வாறு தமிழ்மொழியால் பெயர் சிறந்த அளவில் மொழி வளம் பெற்றிருந்த பாண்டிய மன்னர்கள் ஆட்சி இருத்துவுக்கு

முற்பட்ட ஆயிரம் ஆண்டுகளளவிலிருந்தே தமிழ்மொழியில் சிறந்திருந்ததனைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

பாண்டியர்கள் தமது தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கு எழுத்து வடிவங்களை மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வழக்கில் தொடர்ந்திருந்ததால் வேற்று மொழிக்குரிய எழுத்துருவங்களைக் கொண்டு எழுதும் நிலை அவர்கட்கு ஏற்படவில்லை.

பண்டு தொட்டுப் பாண்டி நாட்டின் வழக்கில் தொடர்ந்த தமிழ் எழுத்து முறை மேலே கொம்பும் கீழே விலங்கும் ஆகிய வளைவுக் கோடுகளைப் பெற்ற உயிர்மெய் எழுத்துக்களால் எழுதப்பட்டதால், எழுத்துக்களின் தோற்றத்தால் கண்ணெழுத்தென்று பெயர் குறித்தனர், அவ்வெழுத்தே வட்டெழுத்து என்று பெயர் பெறுவதாயிற்று.

பாண்டியரின் மிகப் பழமையான தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தும் வட்டெழுத்திலேயே உள்ளன. களப்பிரர் ஆட்சியில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையில் பாண்டியநாடு சிக்கியதால் மொழிநிலையில் சீர்குலைந்து களப்பிரர், சமணர்வழி வளரவிட்ட பிராமி எழுத்தும் சமஸ்கிருதமும் பரவியுள்ளது.

இந்நிகழ்ச்சியினால் பாண்டிய நாட்டில் சமணர் வழியில் பிராமிக் கல்வெட்டுகள் தோன்றியுள்ளன. சமஸ்கிருத நெறியில் பிராமணக் கலாச்சாரங்களும் கிரந்த எழுத்து வழக்கும் பெருகியுள்ளன.

இவ்வாறாகச் சமணம். வைதிகம் ஆகிய இருவேறுபட்ட சமய வளர்ச்சிகளின் செல்வாக்குகள் மாறி மாறி நாட்டில் வந்துளது. ஆயினும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வேத நெறி அரசியல் வழியே செல்வாக்கினைப் பெற்றிருப்பதை நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

இவ்வாறு வேதநெறி முறைகள் சைவத்துறைகளில் ஆக்கம் பெற்றதால், பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட கல்வெட்டுகளிலும் செப்பேட்டுச் சாசனங்களிலும், முதலில் மங்கலவுரையும் தொடர்ந்து பிரசஸ்தி என்னும் அரசரின் மரபுவழிப் புகழ்ச்சியுரையும் கிரந்த எழுத்தாலான சமஸ்கிருதச் சுலோகங்களாக அமைய அதைத் தொடர்ந்து தமிழ்எழுத்துக்களில் மன்னனின்

வென்றி மேம்பாடுகளைக் கூறும் மெய்க்கீர்த்தியும் அறச் செயலும் அமைக்கப்படும் முறை தொடர்ந்துளது.

ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக் குடி செப்பேடுகள், சின்னமனூர் பெரிய செப்பேடுகள் ஆகியவற்றில் இவ்வாறமைந்த மொழிநிலை வேறுபாட்டினை நன்கு காண முடி கின்றது. கல்வெட்டுகளில் முதற் பகுதியாக மங்கல வாசகங்கள் சுலோகங்களாக உள்ளன. தொடர்ந்து அரசனின் மெய்க் கீர்த்தியோ அறச் செயலோ தமிழ் வட்டெழுத்திலும் தெளி தமிழ் எழுத்திலும் உள்ளன.

இவ்வாறாக, கிரந்த எழுத்தில் சுலோகங்களும் தமிழ் எழுத்தில் மெய்க்கீர்த்தியுடன் அறச்செயல்களும் தோன்றி வளர்ந்த பாண்டியர் ஆட்சிக்காலத்தின் முற்பகுதி கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையில் எனலாம்.

இக்காலத்தில் முத்தமிழிலும் வல்லவராகப் பாண்டிய நாட்டில் பெரும் புலவர்கள் இருந்துள்ளார்கள் என்பதைத் 'தமிழவேள்' என்னும் பட்டம் பெற்றாரைப் பற்றிக் கல்வெட்டு களால் அறிய முடிகின்றது. ஆயினும் அரசு வழி வேதநெறி முறைகள் ஆதிக்கம் பெற்றதால் கிரந்த எழுத்துக்களாலான சுலோகங்கள் கல்வெட்டு, செப்பேடுகளில் முதலிடம் பெற்றுத் தொடர்ந்துள்ளன.

கிரந்த சுலோகங்களுடன் தமிழ் வாசகமும் உள்ள மாறஞ் சடையன் வரகுண பாண்டியனின் திருச்சிராப்பள்ளி மலை குடைவறைக் கல்வெட்டு.



இவ்வாறு பாண்டியர்காலக் கல்வெட்டுகள் முற்பகுதி கிரந்த எழுத்திலுள்ள வடமொழிச் சுலோகங்களாகவும் பிற்பகுதி நல்ல தமிழ் நடையில் வட்டெழுத்துக்களாலான செய்திகளாகவும் பொறிக்கப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டில், தமிழ் வட்டெழுத்துக்களில் உள்ள கல்வெட்டுகளில், செய்திகள் பிழையில்லாத சொற்களை உடைய செம்மையான தமிழ்த் தொடர்களாகவே உள்ளன.

எழுத்துக்கள் வடிவில் திரிபு பெறாமல் உள்ளன. இருபதடிக்கு மேற்பட்ட நீண்ட வரிகளை உடைய கல்வெட்டாயினும், வரிசை பிழையாமல் வரிவொழுங்கில் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன

செப்பேடுகளில் முதலில் வரிகளை வருவுக் கொண்டு, அதன் மேல் ஒரே சீரான வரிசையில் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன.

சொற்களின் மெய்யீறு, உயிர் ஈறு நிலைகட்குத் தமிழ் இலக்கணம் தரும் புணர்ப்புவிதிகளையும். உடம்படுமெய்விதிகளையும் பெற்ற நல்ல தமிழ்நடையிலேயே பாண்டியநாட்டிலுள்ள தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

திருநெல்வேலி அம்பாசமுத்திரத்தைச் சார்ந்துள்ள திருவாலீசுவரத்தின் அடிப்படையில் வெட்டப்பட்டுள்ள தமிழ்வட்டெழுத்துக் கல்வெட்டுகள் வட்டெழுத்தின் உயர்வுக்கோர் சான்றாகும்.

பாண்டிய நாட்டில் இவ்வாறு சிறந்திருந்த தமிழ் எழுத்துக்களாகும் வட்டெழுத்துக்கட்கு முற்பட்ட மூல எழுத்துக்கள், குமரி நாட்டுத் தமிழரும், மூன்றாம் தமிழ்ச் சங்கத்தாரும் வளர்ந்திருந்த கண்ணெழுத்தும் அதன் வளர்ச்சியான பழைய வட்டெழுத்துமே யாகும்.

## சோழர் காலத் தமிழெழுத்துக்கள்

சோழநாட்டில் தென்னிந்திய பிராமி எழுத்துக்களான தமிழ்க் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. தமிழ் வட்டெழுத்துக்களை உடைய கல்வெட்டுகளும் இல்லை என்பது இதுவரையில் அறிஞர்கள் கூறியுள்ள செய்திகளைக் கொண்டு அறியப்பெறும் கருத்தாகும்.

கடைச் சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே சோழ நாடு விளங்கியுளது, சோழ மன்னர்களும் சிபிச் சக்கரவர்த்தி மனு

ஆகிய சோழர்கள் வழியினராக நலங்கிள்ளி நெடுங்கிள்ளி கோப் பெருஞ்சோழன் ஆகியோரின் பாரம்பரியமும் நிகழ்ந்துளது. சங்க காலச் சோழர்கள் உறையூர், திருவாரூர், காவிரிப் பூம்பட்டினம் ஆகிய இடங்களில் தலைநகரங்களை அமைத்து அறநெறியில் ஆட்சி செய்துள்ளனர்.

இவர்களைப் பற்றிய செய்திகள் பண்டைய தமிழ் இலக்கியங் களிலேயே உள்ளன.

பின்னர் கி,பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கி.பி. 846இல் இருந்து புதிய சோழர் மரபு தொடர்ந்துளது. முதற்சோழன் பரகேசரி விசயாலயன் என்று கூறப்பெற்றுளான். இம்மன்னன் முதலானோர் கல்வெட்டுகளைத் தோற்றுவித்துள்ளனர்.

நல்ல தமிழ் எழுத்துக்கள் வரிவடிவிலும் ஒழுங்கு பெற்ற நிலை யில் கல்வெட்டுகளில் உள்ளன. விசயாலயன் முத்தரையர்களை வென்று தஞ்சாவூரைக் கைப்பற்றி ஆண்டவனாதலின் அவனது கல்வெட்டுகளில், 'தஞ்சை கொண்ட பரகேசரி' என்று கூறப் பெற்றுளான்.

அவன் மகன் முதல் ஆதித்தன் தொண்டை நாட்டைக் கைப் பற்றி ஆண்டதால், 'தொண்டை நாடு பரவிய இராஜகேசரி' என்று பெயர் பெற்றுள்ளான். முதல் பராந்தகன் மதுரையைக் கைப்பற்றியதால், 'மதிரை கொண்ட கோப்பரகேசரி, என்றே அழைக்கப்படுகின்றான்.

இவர்கள் வழிவந்த முதல் இராசராச சோழன் (கி.பி. 985 - 1014) ''கோவிராஜராஜ ராஜகேசரி'' என்று தொடக்கத்தில் பெயர் பெற்றுள்ளான். இவ்வாறான சோழ மன்னர்களின் முற்பட்டப் பெயர்களைக் கல்லெழுத்துக்களினாலேயே அறியப்பட்டுளது.

சோழர்காலக் கல்வெட்டுகள் அனைத்தும் நல்ல தமிழ் எழுத்துக்களை உடைய கல்வெட்டுகளாயினும், நாட்டில் சமுதாய நெறியில் வளர்ந்திருந்த வேதாகம நெறிகளில் வந்த கிரந்த எழுத்துக்களாலான சொற்களும், சுலோகங்களும் இடம் பெற்றுள்ளன.

கிரந்த எழுத்துக்களும் ஒரு முறையான திருத்தமுற்ற வடிவங் களைப் பெற்றதாகவே உள்ளன. இவ்வாறமைந்த சோழர் காலக் கல்வெட்டுகளின் வளர்ச்சிக் காலத்தினை இரண்டு வகையாகக் கொள்ளலாகும்.

1. விசயாலயன் முதலாக முதல் இராசராசன் ஆட்சிக்கு வந்த கால அளவிற்குட்பட்ட சோழமன்னர்களின் கல்வெட்டுகள் (கி.பி. 846 முதல் 985 வரை - 140 ஆண்டுகள்)

2. முதல் இராசராசன் காலம் முதல் (கி.பி. 985) பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிவான கால அளவில் தோன்றிய சோழர் கல்வெட்டுகள்

முதல்இராசராசனுக்கு முற்பட்ட சோழ மன்னர்களின் கல்வெட்டுகளிலுள்ள தமிழ்எழுத்துக்கள் வட்டெழுத்தைப் போன்று வளைவுகளை மிகுதியாகப் பெறாமல், நேர்க்கோடு, படுக்கைக் கோடு- நெளிவுக் கோடு ஆகிய வரிவடிவங்களில் உள்ளன. எழுத்துக் கள் ஒரே சீராக இல்லாமல் பெரிய எழுத்துக்களாகவே இருப்பதைக் காண முடிகின்றது.

முதல் இராசராசன் தனது முன்னோர்கள் தொடர்ந்திருந்த தமிழ் எழுத்து வடிவங்களின் அடிப்படை உருவை மாற்றாமல் வரி ஒழுங்கில் எழுத்துக்கள் அமையும் பாங்கில் எழுத்துக்களுக்கு அழகுடன் திருத்தம் கண்டு கல்வெட்டுகளில் வெட்டச் செய்துள்ளான்.

கல்வெட்டுகளில் சிறந்த முறையில் வரி ஒழுங்கும் எழுத்தமைப் பும் கொண்ட முதல் இராசராசன் வளர்த்த தனித்தமிழ்க் கல்வெட்டுகளை அவனால் கட்டப்பட்ட தஞ்சை இராசராசேச்சுரத் தில் காணலாகும்.

இவ்வாறான அழகிய தமிழெழுத்துக்களுக்கு மூலம் சோழ நாட்டில் தொன்று தொட்டு ஏட்டு வழக்கிலும் நாட்டு மக்கள் வழக்கிலும் கையாளப் பெற்று வந்த தமிழெழுத்தின் வரி வடிவங் களேயாகும்.

இவ்வெழுத்துக்கள் பிற மொழி எழுத்துக்களிலிருந்து தோன்றி வளர்ச்சி பெற்ற எழுத்துக்களல்ல. சோழ நாட்டிலேயே பயின்று வந்த மொழி நிலைக்குரிய வரிவடிவங்களேயாகும். அதுவே தெளி தமிழ் எழுத்தென்று கூறப் பெற்றதாகும்.

இராசராசன் காலத்துத் தெளிதமிழ் எழுத்துக்களின் வடிவ மைப்பில் திருத்த வடிவில் அமைக்கப்பட்ட எழுத்துக்கள் ஒரு சில வற்றைக் குறிப்பிடலாகும்.

அவை உயிரெழுத்துக்களில், அ, இ, ஊ, ஐ, ஒ, ஆகிய எழுத்துக் களும், மெய்யெழுத்துக்களில், க, ச, ஞ, ண, ந, ய, ர, ழ, ற ஆகிய

எழுத்துக்கள் குறிப்பிடத் தக்கதாகும். உயிர் மெய் எழுத்துக்களில் உகர ஊகாரம் ஐகாரம் ஆகிய உயிரெழுத்துக்கள் கூடிய கு, கூ, கை, லை, போன்ற உயிர் மெய்யெழுத்துக்களின் வடிவங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

## கிரந்த வரிகளும் சொற்களும்

சோழர் காலக் கல்வெட்டுகளின் அமைப்பிலும் வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் முற்பகுதியாக உள்ளது.

முதல் இராசராசனுடைய தஞ்சை இராசராசேச்சுரக் கல்வெட்டின் தொடக்கமே கிரந்தசுலோகத்திலிருந்துதான் தொடங்குகிறது.

கிரந்த எழுத்திலுள்ள சுலோகம் :

' ஏதத் விஸ்வ ந்ருப ச்ரேணீ
மௌலி மாலோப லாலிதம்
ஸாசனம் ராஜராஜஸ்ய
ராஜகேசரி வர்மண : ''

என்பதாகும். இதனைத் தொடர்ந்தே,

''ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்'' என்ற தமிழ்எழுத்துப் பகுதியாகிய மெய்க்கீர்த்தியும் அதனைத் தொடர்ந்து அறச்செயல்களும் வெட்டப்பட்டுள்ளன.

## முதல் இராஜராஜன் மெய்க்கீர்த்தி (தமிழ்) கல்வெட்டு

'' 1. ஸ்வஸ்திஸ்ரீ
திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்

2. தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழமண் டலமும்
இரட்டபாடி ஏழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமுந்

3, திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராசராச தேவர்க்கு
யாண்டு—''

இராசராசனுக்குரிய வென்றி மேம்பாடுகளைத் தரும் இம் மெய்க் கீர்த்தியில் இடம் பெற்றுள்ள தமிழ்ச் சொற்களும் தொடர்களும் பிழையில்லாமல் இலக்கண முறைமைகளோடு அமைந்திருப்பதைக் காணலாம்.

இத்தகைய செந்தமிழையும்- அத்தமிழுக்குரிய எழுத்து வடிவங்களையும் சோழ நாடு மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே தனித்த நிலையில் வளர்த்துள்ளது.

**சோழ மன்னர்கள் வெளியிட்டுள்ள செப்பேட்டுச் சாசனங்களில் தமிழ் எழுத்துமுறை**

1. சுந்தர சோழனது—அன்பில் செப்பேடுகள்.
2. ஆனை மங்கலச் செப்பேடுகள்—(முதல் இராசேந்திரன்)
3. திருவாலங்காட்டுச் செப்பேடுகள்—முதல் இராசேந்திரன்
4. சாராளச் செப்பேடுகள்—வீரராசேந்திரன்
5. சிறிய ஆனைமங்கலச் செப்பேடுகள்—முதல் குலோத்துங்கன்.
6. கரந்தைச் செப்பேடுகள்—முதல் இராசேந்திர சோழன்

செப்புத் தகடுகளில் சாசனச் செய்திகள் செதுக்கப் பட்டிருப்பதால் செப்பேட்டுச்சாசனம் என்று பெயர் பெற்றுள்ளன.

இரண்டொரு ஏடுகளில் சாசனம் அமைந்தால் ஏடுகள் தனித்தே இருக்கும். பல ஏடுகளாயின், அரச இலச்சினையோடு கூடிய வளையமாக உலோகத்தில் வார்க்கப்பட்ட வளையத்தில் கோர்க்கப்பட்ட செப்பேடுகளாக இருக்கும்.

முதல் இராசேந்திரன் தனது ஆட்சியாண்டு எட்டில் கி.பி. 1020-இல், தன் தாய் திரிபுவனமாதேவியின் பெயரால் பிராமணர் கட்குப் பிரமதேயமாக அளித்த அறச்செயலை விரிவாகவும் தெளிவாகவும் கூறுவது கரந்தைச் செப்பேடுகளாகும். இச் செப்பேட்டின் அமைப்பினையும் எழுத்துக்களின் வடிவினையும் கொண்டு கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில், விளங்கிய தமிழ் எழுத்தின் வரிவடிவ வரலாற்றினை அறிந்து காணலாம்.

## கரந்தைச் செப்பேடுகள்

தமிழகத்தில் இது வரையில் கிடைத்துள்ள செப்பேடுகள் அனைத்தினும், கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி மிகப் பெரிய தாகும். ஐம்பத்தைந்து ஏடுகளைக் கொண்டதாகும்.

செப்பேடுகள் கோர்க்கப்பட்ட வளையத்துடன் கூடிய இத் தொகுப்பினை, எழுத்து வகையில் நான்காகப் பிரிக்கலாம்.

1. வட்டமான முகப்பில் விளிம்பினைச் சார்ந்து உட்புற வட்டத்தில் உள்ள பழைய கிரந்த எழுத்துக்களிலுள்ள சுலோகம்.
2. முதல் மூன்று ஏடுகளில், பழைய கிரந்த எழுத்துக்களில் எழுபத்திரண்டு சுலோகங்களாகவுள்ள மன்னர் மரபுப் புகழ்ச்சியுரைகள் (பிரசஸ்தி)
3. அடுத்துள்ள இருபத்திரண்டு ஏடுகள் பிர்ம தேய தானத்திற்குரிய ஐம்பத்தோரூர்களின் பெயர்கள், எல்லை கள், அவ்வவற்றின் தரம், வருமானம் ஆகியவற்றை விளக்கமாகக் குறிக்கும் பகுதியாகும், இச்செய்திகள் இராசராசன் காலத்தில் கையாளப்பட்ட செம்மையான வடிவங்களுடன் கூடிய தமிழ் எழுத்துக்களைக் கொண்ட தாகும்.
4. எஞ்சிய முப்பது ஏடுகளில் தானம் பெற்ற பிராமணர் களின் பெயர்கள் அவ்வவர்க்குரிய கோத்திர சூத்திரங் களுடன் குறிக்கப்பட்டிருப்பதுடன், தான நிலப்பகுதி கிராம ஊழியர்கள், கைச் சான்று செய்தவர்கள், சாசனம் வெட்டியவர், அவ்வவர்கட்கு உரிய நிலப்பங்கு ஆகிய செய்திகள் கிரந்தம்,தமிழ் ஆகிய இரண்டு வகை எழுத்துக் களிலும் வெட்டப்பட்டுள்ளன.

## வளைய முகப்பில் சுலோகம்

பழைய கிரந்த எழுத்துக்களில் முகப்பின் வட்ட விளிம்பில் இவ்வெழுத்துக்கள் வார்ப்புத் தொழிலால் அரச சின்னத்தினைச் சூழ்ந்ததாக உருவாக்கப்பட்டுளது.

சுலோகம் :
ராஜந்ய மகுடஸ்ரேணி ரத்நேஷு
ஸாஸநம் : ஏதத் ராஜேந்திர சோளஸ்ய
பரகேஸரி வர்மமண : || என்பதாகும்.

இதன் பொருள், "பரகேசரி வர்மனான இராசேந்திர சோழனுடைய இந்த சாசனம் அரசர்களுடைய முடி வரிசையிலுள்ள இரத்தினங்களில் செலுத்தப்பட்டது" என்பது.

'ஏதத் ராஜேந்திர சோளஸ்ய' என்பதினால், ஏதத்-முதன்மை உடைய, என்ற பொருள் நியதி பெறுவதால் அரசர்களிலெல்லாம் ஒரே அரசனாக முதன்மை பெற்ற இராஜேந்திர சோழனுடைய என்ற அளவில் பொருள் விளக்கம் கொள்ளலாகும்.

(செப்பேட்டு வளைய முகப்புப் படத்தில் கிரந்த சுலோகம் உள்ளது).

## ஏடுகளில் எழுத்துக்கள்

கி.பி. பத்து—பதினொன்றாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் சோழ அரசியலில் விளங்கிய தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ அமைப்பினைக் கரந்தைச் செப்பேடுகளில் காணலாகும்.

ஏடுகளில் இருபுறமும் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. பக்கத்திற்கு 24 வரிகட்குக் குறையாமலும், வரிக்கு 45 முதல் 50 - எழுத்துக்களும் உள்ளன.

எழுத்துக்களைச் செப்பேடுகளில் செதுக்குவதற்கு முன்னர் நேர் கோட்டில் தொடர்கள் அமைவதற்குரியதாகச் சிற்பாசாரியன் ஏடுகளில் வரிக்கோடுகள் வரைந்து கொண்டு, அதன் மீதே எழுத்துக்களைச் செதுக்கியுள்ளான். ஏடுகளின் பக்கங்களை அறிவதற்கு, ஒவ்வொரு ஏட்டின் துவாரத்தின் பக்கமாகத் தமிழ் எண்கள் முறையாகக் குறிக்கப்பட்டுள்ளன. இதனால் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் சோழராட்சியில் விளங்கிய ஒன்று மூதலான தமிழ் எண்களின் வரிவடிவினை அறிய முடிகின்றது. (எழுத்துக்களின் வரிவடிவினை நிழற்படத்தில் காணலாம்),

பத்தாம் நூற்றாண்டிலிருந்து சோழ நாட்டில் உண்டான கல்வெட்டுகளில் முதல் இராசராசனுடைய கல்வெட்டுகளிலேயே தமிழ் எழுத்துக்கள் தெளிவான வடிவங்களில் அமைந்துள்ளன. இவ்வாறமைந்த எழுத்துக்களின் தொடர்ச்சியினைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரையில் காண முடிகின்றது.

மேல் பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளில் ஒருசில

எழுத்துக்கள் வடிவில் கூடிய உருவினைப் பெற்றுள்ளன. அவ்வெழுத்துக்கள் அ, ஆ, ஈ, ஏ, ஐ, ஔ ஆகிய உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களில் க, ச, ண, த, ந, ய, ர, ழ, ள ஆகியவைகளுமாகும்.

## சீர்திருத்தமும் புள்ளியும்

இவ்வாறு, எழுத்துக்களின் வடிவில் ஒரு சீர்திருத்தமாக அமைவதற்கு அடிப்படை மூலமாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுகளில் எழுத்துக்கள் அமைந்திருப்பதனைக் காண முடிகின்றது.

இவ்வெழுத்துக்களே கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து உண்டான கல்வெட்டுகளில் வடிவில் சிறிது பெரியதான முறையில் கையாளப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடிகளிலும் இவ்வாறு திருத்தமான தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. பொதுவாகக் கல்வெட்டு எழுத்துக்களில் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடும் வழக்குக் குறைவாகவே உள்ளது. புள்ளியைக் கல்லில் பொறிப்பதால் கல்லில் சிதிலம் ஏற்பட்டு எழுத்தின் வடிவிற்குக் குறைவு ஏற்பட்ட அனுபவத்தினாலேயே புள்ளி இல்லாமலேயே மெய்யெழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகளில் புள்ளியைச் சிறுவட்ட வடிவில் வெட்டியுள்ளதைக் காண முடிகின்றது.

ஏட்டுச்சுவடி எழுத்துக்களிலும் புள்ளியில்லாமல் எழுத்தாணியால் மெய்யெழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. சில ஏடுகளில் புள்ளியை வட்ட வடிவில் குறித்துள்ளனர்.

## விசயநகர மன்னர் காலத் தமிழெழுத்துக்கள்

விசய நகர மன்னர்கள் தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இம்மன்னர்களின் ஆட்சி கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் கி.பி, பதினேழாம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டில் நிகழ்ந்துளது.

விசய நகர மன்னர்களின் கல்வெட்டுகள் தமிழ் நாட்டில் தென்பாண்டி நாட்டளவில் உள்ளன.

பாண்டிய மன்னர்களும், சோழ மன்னர்களும் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் மங்கலச் சொல்லாக 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற சொல்லைப் பொறித்துள்ளனர்,

விஜய நகர மன்னர்களில் முன்னவர்கள் ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கலச் சொல்லையே குறித்துள்ளனர். பின்னர் ஆண்ட மன்னர்களும், பிரதிநிதிகளும் உண்டாக்கிய கல்வெட்டுகளில் 'சுபமஸ்து' என்ற வாசகத்தினை எழுதியுள்ளனர்.

இவர்கள் காலத்துக் கல்வெட்டுகளில் பெரும்பாலானவற்றில் அரசர்களின் விருதுப் பெயர் ''மகாமண்டலேஸ்வர'' என்று தொடங்கப் பெற்றுளது.

விசயநகர மன்னர்கள் ஏற்படுத்திய கல்வெட்டுகளிலும் அவர்களின் பிரதிநிதியாகத் தமிழகத்திற்கு வந்து ஆட்சி செய்த நாயக்கர்கள் கல்வெட்டுகளிலும் எழுத்துக்கள் பெரிய வடிவின தாகவே உள்ளன.

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் பல்வேறுபட்ட வடிவங் களில் திரிந்துள்ளன. சொற்பிழைகள் உள்ளனவாகவும் இருக்கின் றன. கிரந்தச் சொற்களும், தமிழ்ச் சொற்களில் கிரந்த எழுத்துக் கள் கலந்த நடையும் பெற்றுள்ளன. இதற்குக் காரணம், அரசர்கள் தெலுங்கு மொழியில் பேசுபவர்கள். அரசியல் நிகழ்வுகள் பெரும் பாலும் தெலுங்கு மொழியில் நிகழ்ந்துள்ளன. அரசியல் குருமார் களும், தெலுங்கு பட்டர்களாக இருந்துள்ளனர் என்பதேயாகும்.

சோழ மன்னர்களும் பாண்டிய மன்னர்களும் தங்கள் கல் வெட்டுகளின் முற்பகுதியாகக் கொண்ட 'மெய்க்கீர்த்தி' விசயநகர மன்னர்கள் பிரதிநிதிகளான நாயக்கர்கள் ஆகியோர் கல்வெட்டு களில் இல்லை. முற்பகுதியாக 'விருதுப் புகழ்ச்சி உரை' என்று சொல்லத்தக்கதாகத் தொகுப்புரை ஒன்றை அமைத்துள்ளனர். இவர்களின் கல்வெட்டுகள் அனைத்திலும் இவ்வுரை கிரந்த எழுத் துக்களில் ஒரே மாதிரியாகவே உள்ளன.

### விருதுப் புகழ்ச்சியுரை

''ஸுபமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராய விபாடன், பாஷைக்குந் தப்புவராயர்கண்டன், மூவராயர் கண்டன். கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், பூர்வ பச்சிம தக்ஷிண உத்தர சதுஸ்ஸமுத்ராபதி, கஜவேட்டை கண்டருளின தேவர், துலுக்கர் தளவிபாடன்'' இப்பகுதியில் இடையிடையே ஒருசில தமிழ்ச் சொற்களும் அரைகுறையாக இடம் பெற்றுள்ளன.

இவ்விருதுப் பகுதியின் தொடக்கத்தில் சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ என்ற இரண்டு மங்கலச் சொற்களும் சேர்ந்ததாகவுள்ள கல்வெட்டு

களும் உள்ளன. கிருஷ்ணதேவ மகாராயர், அச்சுததேவ மகாராயர் கல்வெட்டுகளில் உள்ள விருதுகள் மேலும் பெருக்கமாகவுள்ளன.

## தமிழ் எழுத்துமுறை—கூட்டெழுத்து

விசய நகர மன்னர்கள் ஆட்சிக்காலங்களிலும் நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலங்களிலும் உண்டான தமிழ்க் கல்வெட்டுகளிலும் பனைஓலைச்சுவடிகளிலும் தமிழ் எழுத்துவடிவங்கள் சிறிது குலைந்த நிலையிலும் திரிந்த நிலையிலும் காணப்படுகின்றன. மூன்று சுழி ண - வும் இரண்டு சுழி ன - வும் பெரிய வடிவங்களில் உள்ளன.

தமிழில் கூட்டெழுத்து முறை இவர்கள் காலத்திலேயே மிகுதியாகக் கையாளப் பெற்றுள்ளதைத் தமிழெழுத்துக்களின் பிணை வடிவங்களால் அறியமுடிகின்றது. அவ்வாறமைந்த கூட்டெழுத்துக்களில் கிரந்த எழுத்தும் தமிழெழுத்தும் கலந்துள்ள மயக்கமும் நிகழ்ந்துள்ளன.

தமிழில் கையாண்டுள்ள கூட்டெழுத்துக்களில், க்க, ச்ச, த்த, ப்ப, என்பனவற்றைக் குறிக்கலாகும். ட்ட, ம்ம எழுத்துக்களில் ஒன்று தமிழும் மற்றொன்று கிரந்தமுமாக உள்ளன, பொதுவாக விசய நகர மன்னர்களின் ஆட்சிக் காலங்களிலும் நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலங்களிலும் கி,பி. பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் (கி.பி. 1675) தமிழகத்தில் தமிழ்மொழியும் தமிழ் எழுத்துமுறையும் தாழ்ந்து திரிந்திருந்ததையே அறிய முடிகின்றது.

மேல் கி.பி. 1675 முதல் தஞ்சையில் தொடங்கிய மராட்டிய மன்னர் வழியினரான ஏகோஜி முதலானோர் மராட்டிய மொழிப் பற்றுடையாராகவே இருந்துள்ளனர். ஆயினும் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் பல பகுதிகளை ஆண்டுள்ளனர். எனவே நாட்டுச் சூழலுக்கு ஏற்ப ஏற்பட்டுள்ள பத்திரங்களும் உத்திரவுகளும் தமிழில் எழுதப்பட்டுள்ளன.

ஏனோ தானோ என்று தமிழைக் கற்றிருந்த மராட்டியரும் மராட்டிய மொழியறிந்த இருமொழியாளரும் பத்திரங்களையும் பிற அரசியல் செய்திகளையும் ஆணைகளையும் பிழையான தமிழ்ச் சொற்களில் எழுதியுள்ளனர். கூட்டெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் என்ற முறையில் ஓலையில் எழுத்தாணியை ஊன்றிய நிலையில் எடுக்காமல் தொடர்ந்து வருவியே எழுதப்

பட்ட தமிழெழுத்து முறைகள் வளர்ந்துள்ளன. இவ்வெழுத்துக் களை எழுதியவரே படிக்க முடியுமென்பதால், படிப்பவர் தேவைக்குஏற்பத்திருத்தியும் படிப்பதற்குஏற்றதாகவே இருந்துளது.

இவ்வாறாகச் சங்கத்தமிழில் தேர்ந்து தெளிந்து நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும், மக்கள் வழக்காகும் வீட்டு வழக்கிலும் தொடர்ந்த தமிழெழுத்துக்கள் நாயக்கர் ஆட்சியிலும் மராட்டியர் ஆட்சியிலும் நிலைகுலைந்து இருந்துளது என்பதைச் சுவடிகளிலும் பழைய பத்திரங்களிலும் காண முடிகின்றது.

## பாண்டிய நாட்டில் மலைக் கல்வெட்டுகள்

பாண்டிய நாட்டில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலாக மக்களிடையே செல்வாக்குற்ற அறநெறித் துறைகளில் சமணமும் ஒன்றாக இருந்துளது.

கன்னட மொழிக்குரிய நாடாகும் மைசூர் நாட்டிலுள்ள 'சிரவணபெளகொள' என்னும் ஊரிலும் அதைச் சேர்ந்த மலையிலும் சமணர்கள் வட நாட்டிலிருந்து வந்து தங்கியதோடு சமய வளர்ச்சியினையும் மேற்கொண்டுள்ளனர். இக்காலம் கி.பி. 1-3 நூற்றாண்டுகளெனலாம்.

தமிழகத்திற்கு வந்த சமண முனிவர்கள் ஆடையின்றிய அருந்தவத்தரான திகம்பரர்கள். தமிழகம் மானவுணர்வைப் பெரிதும் மதிக்கும் மக்களைக் கொண்டதாக இருப்பதை உணர்ந்த அச்சான்றோர்கள்; தங்கள் கொள்கைக்கும் தமிழர்க்கும் குறைவு வராத முறையில்- தமிழகத்தில் ஆங்காங்கே இருந்த கடுங்காடுகளையும் மலைக் குகைகளையும் தங்கட்கு வாழ்விடமாகக் கொண்டனர்.

பாண்டிய நாட்டில் சிறிது சிறிதாக வந்துற்ற சமண முனிவர்கள் மதுரையைச் சூழ்ந்த மலைகளிலும், பிறமலைகளிலும் தங்கியுள்ளனர். கால வளர்ச்சியில் சமணர்கட்கு அரசர்களும் மக்களும் ஆதரவளித்துள்ளனர்.

சமணர்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவிலேயே பாண்டிய நாட்டில் ஆங்காங்கே தங்கினராயினும் தமிழ் மொழியை அறியாதவராகவே பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளையும் பிராமி எழுத்து முறைகளையும் கற்றிருந்துள்ளனர்.

காலம் செல்லச் செல்ல சமண முனிவர் தகுதியில் தமிழ் மக்களும் தவநெறியைப் பின்பற்றியுள்ளனர். அரசர்களும் சமணர் களாக இருந்து சமணத் துறவிகட்கு ஆதரவு செய்துள்ளனர்.

இவ்வாறாகப் பிராகிருதம், பாலி மொழிகள் பேசும் சமண முனிவர்களும் தமிழ் பேசும் சமண முனிவர்களும் தொண்டர்களும் பாண்டிய நாட்டின் வடபாலுள்ள சித்தன்னவாசல் மலைக் குகை யில் வாழ்ந்துள்ளதை அங்குள்ள பிராமிக் கல்வெட்டும் அதைச் சார்ந்த பழந்தமிழ்க்கல்வெட்டுகளும் உணர்த்துகின்றன, இக்கல் வெட்டுகள் கி.பி, மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தோன்றியுள்ளன.

பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சியில் வடபுலத்திலிருந்து சமணர்கள் மேன்மேலும் வந்து மலைகளில் தங்கியுள்ளனர், இந் நிலையிற்றான் பாண்டிய நாட்டு மக்களும் மன்னரும் வடபுலச் சமண முனிவர்கட்குக் குகைகளில் கற்படுக்கைகளும் - வழிபாட் டிற்குச் சமணர்தெய்வங்களின் உருவங்களையும் பாறைகளில் செய்தளித்துள்ளனர்.

இவ்வாறமைந்த உதவியினைக் கற்களில் கல்வெட்டுகளாகப் புலப்படுத்த சமண முனிவர்கள் முயன்றுள்ளனர், தமிழ்ச் சமணத் துறவிகளைக் கொண்டு தாமறிந்திருந்த பிராமி எழுத்துக்களால் செய்தியினைக் கல்வெட்டுகளாகச் செய்துள்ளனர்,

இவ்வாறு பிராமித் தமிழ்க் கல்வெட்டுகள் பிழையுடைய சொற் களில் வெட்டப்பட்ட நிலையில் தமிழ்க் கல்விக்கேள்விகளில் சிறந் திருந்த நிலையில் பாண்டிய நாட்டு மக்களி[illegible] பலர் சமணராகி வட நாட்டிலிருந்து வந்திருந்த முனிவர்கட்கு மாணாக்கர்களாகவும், தொண்டர்களாகவும் பணியாற்றியுள்ளனர். முனிவர்கட்குக் கற்படுக்கைகள் அமைத்தும், தெய்வச்சிலைகளைப் பாறைகளில் உருவாக்கியும் அத்தமிழ்ச் சமணத் தொண்டர்கள் தந்துள்ளனர்.

இன்னாருக்கு இன்னாரின் மாணாக்கன் செய்தளித்த படுக்கை, அல்லது தெய்வத் திருமேனி என்ற செய்தியினைப் பாண்டிய நாட்டில் தொடர்ந்து வந்து சிறந்திருந்ததும் தங்கள் தாய் மொழி தமிழுக்கு உரியதுமான வட்டெழுத்துக்களில் கல்வெட்டுகளை உருவாக்கி யுள்ளனர்.

இவ்வாறு வட்டெழுத்துக்களால் பிழையின்றிப் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகள் பாண்டிய நாட்டில் சமணர்கள் வாழ்ந்தி ருந்த மலைக் குகைகளிலும், மலைத் தடங்களிலும் உள்ளன.

மதுரை மாநகரைச் சூழ்ந்துள்ள. திருப்பரங்குன்றம். மேற்கே உள்ள சமணர் குன்றுகள். வடக்கே உள்ள ஆனைமலை, அழகர் மலை, கருங்காலக்குடி மலை ஆகிய மலைகளில் சமணர்கள் வாழ்ந்துள்ளனர். இம்மலைகளில் சமணர் தெய்வச் சிற்பங்களும் கற்படுக்கைகளும் உள்ள இவற்றைச் செய்தளித்தவர் பற்றிய தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் பலவுள்ளன. வட்டெழுத்தில் தமிழ்ச் சொற்கள் பிழையின்றி அழகாகவும் வரிசையாகவும் முறையாகவும் வெட்டப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டில் சமண முனிவர்கள் கி.பி- மூன்றாம் நூற்றாண்டு முதலாகவும் பின்னரும் தங்கியிருந்து தமிழ் மக்களிடம் சமணத்தை வளர்த்த மலைத் தடங்களுள் சில இடங்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

அவற்றுள், தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலை முதலிடம் பெற்றதாகும். இங்குப்பிராமிக் கல்வெட்டுகள் இல்லை. கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் வட்டெழுத்திலேயே அழகாக வெட்டப்பட்டுள்ளன.

இரண்டாவதாக, அப்பகுதியிலுள்ள வீரசிகாமணிக்குன்றிலுள்ள குகைகளில் சமணர் வாழ்ந்திருந்ததற்குரியதாகக் கற்படுக்கைகளும் பழைய வட்டெழுத்தாலான கல்வெட்டும் உள்ளன.

மூன்றாவதாக, மதுரைக்கு மேற்கே உள்ள சமணர் குன்றாகும் இக்குன்றின் மேல்தடத்தில் பெரும்பாறை முகப்பில் வரிசையாகச் சமணர் தெய்வச் சிலைகள் புடைப்புச் சிற்பமாகச் செய்யப் பட்டுள்ளன. ஒவ்வொரு சிலையின் கீழும், அழகிய வரிவடிவத்தில் செய்தாரின் செயல் தமிழ்வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக மதுரைக்கு வடபாலுள்ள ஆனைமலையும், ஐவர் மலையும் குறிப்பிடத்தக்கவைகளாகும். இரண்டு மலைகளிலும் அழகுடன் பிழையின்றிய நிலையில் தமிழ்வட்டெழுத்துக்களில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. ஐவர்மலை ஆனைமலை ஆகியவற்றிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் மிகப் பழமையானவைகளாகக் கருதப்படும் தகுதியினைப் பெற்றதாகும்.

மற்றும் மதுரைக்குத் தென்மேற்கேயுள்ள திருப்பரங்குன்றத்திலும், வடக்கேயுள்ள கருங்காலக்குடியிலும் சமணர் கால வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன.

இவ்வாறு, பாண்டிய நாட்டு மலைக்குகைகளிலும், பாறைகளிலும் பழங்காலத் தமிழ்வட்டெழுத்தில் பிழையின்றிய நிலையில் வெட்டப்பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் பாண்டிய நாட்டின் தொன்மைக்குரிய சான்றுகளாக இருக்கின்றன.

## கருத்துரை

தமிழகத்தின் தொன்மை, கடல் கொண்ட குமரி நாட்டிலிருந்து தொடங்குவதாகும். தமிழ்மொழிக்குப் பண்டைத்தமிழர் சித்திர எழுத்துகளினின்றும் எழுத்துவடிவங்களை உருவாக்கிவந்துள்ளனர். சங்கங்கள் நிறுவித் தமிழ்மொழியில் சிறந்த புலவர்களைக்கொண்டு நூல்கள் பல இயற்றச் செய்து மொழிக்கு ஆக்கம் கண்டுள்ளனர். கடைச்சங்கம் வையை ஆற்றங்கரை மதுரையில்நிகழ்ந்துளது. இதன் காலம், கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து என்பர். அக்காலத்தில் புலவர்களால் இயற்றப்பட்ட நூல்கள் எந்த எழுத்துக்களில் எழுதப்பட்டன? அவ்வெழுத்துமுறை முன்னைய குமரிநாட்டுத் தமிழர் தொடர்ந்த எழுந்துமுறையாகத்தான் இருக்கமுடியும்.

வடஇந்திய பண்டைய நாகரிகம் வேறு, தமிழகத்தின் பண்டைய நாகரிகம் வேறு. தாய்மொழிக்குச் சங்கங்கள் நிறுவி மொழிவளர்ச்சி செய்த தமிழரைப்போல் இந்தியாவில் பிற மொழியாளர் செய்ததில்லை. மிகத் தொல்பழங்காலந்தொட்டே தமிழர் மொழி தமிழ்மொழியாகவே சொல்லும் எழுத்தும் கொண்டதாகவே வந்துளது. அதனால்தான் கன்னித்தமிழ், முத்தமிழ் என்ற சிறப்புப் பெயர்களைத் தமிழ்மொழிபெற்றுளது. பிறமொழிகட்கு இத்தகைய சிறப்பு அமையவில்லை.

அசோகன் திருத்தியமைத்து சமஸ்கிருத நெறியில் வளர்ந்த பிராமி எழுத்துக்கள் வட நாட்டு மொழிகளுக்கு இலக்காகியுள்ளன. தமிழகத்தின் வரலாறும் மக்கள் நாகரிகமும் தனித்தன்மை பெற்றதால் தங்கள் தாய்மொழிக்குத் தமிழர் பண்டைய காலந்தொட்டே எழுத்துருவம் கண்டிருந்தனர். தொல்காப்பியர் தமிழ் எழுத்துகளுக்குரிய வரிவடிவங்களையும் முறையாகக் குறித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சமண சமயத் துறவிகள் மலைக்குகைகளில் பொறித்துள்ள பிராமி எழுத்துக்களாலான கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு அதினின்றும் தமிழெழுத்துக்கள் வரி

வடிவுகொண்டன என்பது ஆராயத்தக்கது. தமிழுக்கென்று எழுத்துமுறைகள் தோன்றி இலக்கணத்துடன் வளர்ந்து வந்திருக்கும்போது பிற எழுத்துமுறையினின்றும் வந்த தென்பது பொருந்தவில்லை.

வட்டெழுத்து முறை தமிழின் பண்டைய எழுத்துமுறையாகத் தொடர்ந்துளது. சோழநாட்டில் தெளிதமிழ் எழுத்துமுறையொன்று வட்டெழுத்துக்கு இணையாக வளர்ந்து வந்துளது. வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இமயச் சாரலிலும் கிடைத்துள்ளன. தொல்காப்பியம், திருக்குறள், மதுரைக்காஞ்சி போன்ற சங்ககால நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களும் தமிழ் வட்டெழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டிலுள்ள குகை பிராமி எழுத்துக்கள் பிழையாகவும் முறையற்றும் உள்ளன. நெடிய வரிகளாகப் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துத் தமிழ்க்கல்வெட்டுகள் அழகாகவும் எழுத்துப் பிழை, சொற்பிழை, தொடர்பிழை இல்லாமல் செம்மையாகவுள்ளன.

இராசராசன் காலத்தில் தமிழெழுத்துக்கள் நல்ல வரிவடிவில் உள்ளன. அம்முறையிலேயே எழுத்துமுறை தொடர்ந்து, பிற்காலத்தில் ஏடுகளில் எழுதுவதில் சிறிது, திருத்தமுற்றதாகவுள்ளது.

நாயக்கர் மராட்டியர் கால அரசியல் தமிழகத்தில் நிகழ்ந்தபோது தமிழ் தன்னிலையில் குன்றியதனை எழுத்து முறைகளால் அறிய முடிகின்றது.

இவ்வாறான ஆய்வுரைகளும் பிறவும் இந்நூலின் அங்கங்களாகத் தரப் பெற்றவைகளாகும்.

## தமிழ்ப் பிராமியெனும் தென்னிந்திய பிராமிக்கல்வெட்டுகள்

திருப்பரங்குன்றம் (பக், 39)





முத்துபட்டி (பக், 40),



ஆனைமலை (பக், 38)



### புகளூர் (பக். 42)











கருங்காலக்குடி (பக். 86)



திருநாதர்குன்றம் வட்டெழுத்துக் கல்வெட்டு (பக். 56)







← செங்கம் நடுகல் (பக், 60)

வேள்விக்குடிச் செப்பேடு - வட்டெழுத்து
கி.பி. 8ஆம் நூற்றாண்டு (பக். 62)
↓



திருநந்திக்கரை வட்டெழுத்துக் கல்வெட்டு
முதல் இராசராசன் (பக். 67)



முதல் இராசராசன் கல்வெட்டு (பக், 67)



மாறன்சடையன் கல்வெட்டு
கி.பி. 8ஆம் நூற்றாண்டு (பக். 70)



வளையமுகப்பில் சுலோகம் (பக். 79)



## துணை நூற்பட்டியல்


ஆய்வுக்கோவை (இ.ப.த.ம.) —தொகுதிகள்

ஒப்பியல் மொழிநூல் —தேவநேயப் பாவாணர்

கரந்தைச் செப்பேடுகள் —தமிழ்ப்பொழில்

கல்சொல்லும் கதைகள் —சுந்தரம். வி.

கல்லெழுத்துக்கலை —நடன காசிநாதன்

கல்வெட்டியல் —ஆய்வாளர்-நால்வர்

கல்வெட்டுக் கருத்தரங்கு —தொகுப்பு 1966

செங்கம் நடுகற்கள் —நாகசாமி, இரா.

செந்தமிழ் —தொகுதிகள்

தமிழ் இலக்கியம் சங்ககாலம் —துரைசாமிபிள்ளை, ஞா. சா.

தமிழ் எழுத்துகள் —வரதராசனார், மு.

தமிழ் மொழி வரலாறு —சுப்ரமணிய நாவலர் இரா.

தமிழ் வட்டெழுத்து —கிருஷ்ணமூர்த்தி, இரா,

திருவாங்கூர் தொல்பொருள் தொகுதி-1-6 —கோபிநாதராயர்

தொல்காப்பியம் (எழுத்து) —நச்சினார்க்கினியர் உரை

பாண்டியர் வரலாறு —சதாசிவப்பண்டாரத்தார் தி, வை.

பிரயாண நினைவுகள் —அருணாசலம், க.

Scripts in and around India —V. Kannaiyan

South Indian Inscriptions —Volumes

South Indian Palieography —Burnell

# சிறப்புச் சொல்லகராதி

(எண்—பக்க எண்)


அகநானூறு 7, 11, 16, 18, 19
அசோகன் பிராமி 24
அடியார்க்கு நல்லார் 11
அரச்சலூர் 42 48, 54, 57
அரிக்கா மேடு 51
அரிசில் கிழார் 60
அரிட்டாபட்டி 41
அருணாசலம் க. 63
அழகர்மலை 38, 45, 86
அன்பின் செப்பேடு 78
அதிச்ச நல்லூர் 11
ஆனைமங்கலச் செப்பேடு 78
ஆனைமலை 38, 58, 86
இந்திய கல்வெட்டுக்களின் ஆண்டறிக்கை 2
இரண்டாம் நந்திவர்மன் 69
இராசசிம்ம பாண்டியன் 62
இராமாயணம் 5
இராஜேந்திரசோழன் 80
இலக்கணக்கொத்து 13
இளங்கோவடிகள் 6
இறையனார் களவியலுரை 11
உண்டாங்கல் 40
உத்தமபாளையம் கல்லெழுத்து 58
உறையூர் இளம்பொன் வாணிகனார் 66
எருக்காட்டூர் தாயங் கண்ணனார் 60
எழுத்தச்சன் 9
ஐங்குறுநூறு 11
ஐவர் மலை 58. 80
ஓவாமலை 41
கண்ணெழுத்து 56, 64, 74
கரந்தைச் செப்பேடு 78
கருங்காலக்குடி 38, 45, 86
கலித்தொகை 11
கவாடபுரம் 5, 6, 10, 11
கழுகுமலை 4, 23,86
காய்சினவழுதி 10
காரிக்கண்ணனார் 66
காரைக்காலம்மையார் 65
கிள்ளிவளவன் 60
கீழவளவு 38, 45
குகைஓவியம் 3. 13
குகைச்சித்திரம் 2, 3
குடுமியான்மலை 34
குமரிக்கண்டம் 5, 8, 10, 19
குமரிநாடு 5. 6, 9-13, 16, 17 70, 74, 87
குமரிமலைத் தொடர் 5
குமரியாறு 5, 6
குலசேகர ஆழ்வார் 62
குறிஞ்சிப் பாட்டு 7
குன்றக்குடி 38
கொடும்பாளூர் வேளிர் 27
கோப்பெருஞ் சோழன் 66, 75
கோபிநாதராயர் 21-23
சடையவர்மன் பராந்தகப் பாண்டியன் 59
சாராளச் செப்பேடு 78
சித்தன்ன வாசல் 22, 34, 36, 39. 64
சிம்மவிஷ்ணு பல்லவன் 60, 68, 69
சிலப்பதிகாரம் 6, 9, 55, 56, 88
சிறிய ஆனைமங்கலச் செப்பேடு 78
சின்னமனூர்ச் செப்பேடு 62, 72
சீனசித்திர எழுத்துக்கள் 4
சுசீந்திரம் கல்வெட்டு 69
சுந்தரசோழன் 78
செங்கம் நடுகல் 60, 61
சேக்கிழார் 70
சேரமான் பெருமான் நாயனார் 17

தஞ்சைப் பெரிய கோயில்
கல்லெழுத்து 67
தமிழ்க்கிரந்தம் 33
தமிழ்ப்பிராமி 38, 41, 43-45, 67
தமிழ் எழுத்து 49, 50
தளவாய்புரச் செப்பேடு 27
தளவானூர் 70
திருக்குற்றாலநாதர் கோயில்
கல்வெட்டு 53
திருக்குறள் 7, 18, 88
திருஞானசம்பந்தர் 59, 65
திருநாதர் குன்று 56
திருநாவுக்கரசர் 65
திருப்பரங்குன்றம் 39, 86
திருமங்கை ஆழ்வார் 65
திருவள்ளுவர் 17, 18
திருவாங்கூர் தொல்பொருள்
தொகுதி 22
திருவாதவூர் 39
திருவாய்மொழி 62
திருவாரூர் மும்மணிக்
கோவை 17
திருவாலீசுவரம் 74
திருவிடைக் கோடு-
கல்வெட்டு 59
திவாகரம் 13
தென்னிந்திய எழுத்தியல் 22
தென்னிந்திய எழுத்துக்கலை 25
தென்னிந்திய கல்வெட்டுத்
தொகுதி 21
தென்னிந்திய பிராமி 9, 38,
41, 43-45, 49, 53, 54, 74
தேவாரம் 65
தொல்காப்பியம் 2, 7, 8, 10,
12, 13, 15-17, 19, 46, 67,
68, 88
நச்சினார்க்கினியர் 15
நலங்கிள்ளி 75
நற்றிணை 11
நன்னூல் 68
நாகசாமி, இரா. 54
நிலந்தருதிருவிற் பாண்டியன் 10
நெட்டிமையார் 7
நெடுங்கிள்ளி 75
பதிற்றுப் பத்து 7, 9, 11
பர்னல் 21, 25
பரகேசரி விசயாலய சோழன் 27
பராந்தகன் வீரநாராயணன் 27
பரிபாடல் 11, 13
பல்யாகசாலை முதுகுடுமிப்
பெருவழுதி 8
பல்லவ கிரந்தம் 34
பழைய கிரந்தம் 34
பனம்பாரனார் 12, 14
பஃறுளியாறு 5, 6, 7
பாண்டியன் நெடியோன் 7
பாணினயம் 12
பாவாணர் 12
பிங்கலந்தை 13
பிள்ளையார் பட்டி 39
புகளூர் ஆறு நாட்டான் மலைக்
குகை 41, 45
புறநானூறு 6, 7, 16, 18, 19
பெரியபுராணம் 70
பெருஞ்சாத்தனார் 66
மகேந்திரவர்மபல்லவன் 60,
61, 67
மணிமேகலை 88
மதுரைக் காஞ்சி 88
மருத்துவன் தாமோதரனார் 66
மாங்குடி மருதனார் 66
மாங்குளம் 36, 41, 45, 49, 50
மாணிக்கவேல் நாயக்கர்
பா. வே. 4
மாறவர்மன் அரிகேசரி
பாண்டியன் 27
மாறுகால்தலை 40
முடத்திருமாறன் 10, 11, 55, 70
முடமோசியார் 66
முத்தரையர் 27
முத்துப்பட்டி உம்மனார்
மலை 40
முதல் இராசராசன் 27, 67, 75-
77, 88
முதல் இராசேந்திரசோழன்
77, 78
முதல் குலோத்துங்கன் 78
முதல் பராந்தக சோழன் 60
முது கண்ணன் சாத்தனார் 66
முது குருகு 13
முது கூத்தனார் 66
முதுநாரை 13

மூன்றாம் குலோத்துங்கன் 89
மொர்கஞ்சதாரேர் 4
யாப்பருங்கலவிருத்தி 14
லெமூரியா கண்டம் 4
வரிச்சியூர் 40
வால்மீகிமுனிவர் 5
வீரசிகாமணி மாலை 23, 80
வீரராசேந்திரன் 78
வெண்டேர்ச் செழியன் 10
வேள்விக்குடிச் செப்பேடு 62, 72
ஜடிலவர்மன் பராந்தக
நெடுஞ்சடையன் 72
ஜேம்ஸ்பிரின்ஸ் 20
ஹரப்பா 4
ஹீல்ஷ் 21
ஸ்ரீ பதார்த்தசாரகிரந்தம் 29
ஸ்ரீ புராணம் 29
ஸ்ரீ மகாநந்தி 29

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
சி.ஐ.டி., வளாகம், தரமணி, சென்னை-600113
தொலைபேசி 2350 992

## தேவநேயப் பாவாணர் அறக்கட்டளை வெளியீடுகள்

1983இல் தமிழன்பர் பலர் நல்கையினால் தொடங்கப் பெற்றது. திரு கோவலங்கண்ணன் பெருந்தொகையளித்துள்ளார். பாவாணரின் ஆய்வுகளும் அவற்றோடு தொடர்புடையனவும் இதன் பொருளாகின்றன.

### பாவாணரும் தனித்தமிழும்

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்; சனவரி 1985; VIII+176; ரூ 26

பாவாணர் வாழ்க்கை வரலாற்றையும், அவரது நூல்கள் பற்றியும் பல தகவல்களைத் தேடித் தொகுத்தளித்துள்ளார்.

### தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள்

புலவர் இரா. இளங்குமரன்; பிப்ரவரி 1985; XII+135; ரூ 10

பாவாணரின் தலையாய பணியான சொல்லாய்வுப்பணியினைத் திறம்பட ஆய்வுசெய்து அவர்தம் பெருமையை நிலைநாட்டியுள்ளார்.

### உலக முதன்மொழி தமிழ்

திரு. கு பூங்காவனம்; சூன்; 1986; IV+118; ரூ 12

பாவாணர் கருத்துகளின் வழி நின்று தமிழ் எங்ஙனம் உலக முதன் மொழியாகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

### பாவாணர் ஆய்வு நெறி

திரு. இரா. மதிவாணன்; பிப்ரவரி 1990; IV+160; ரூ 22

தனித்தமிழ் பேணுதல். தமிழை ஞால முதன்மொழி என நிறுவுதல், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்குதல் என முத்திறமாகப் பாவாணரின் ஆய்வுகளைப் பகுத்து அதன்வழி அவர்தம் ஆய்வு நெறியைப் புலப்படுத்துகிறார்.